# இஸ்லாமிய எண்ணக்கருக்கள்

ஸபீர் ஹாபிஸ் B.A (Hons), Dip.in.SE

PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

www.bookshia.com
knowledge enlivens the soul

# இஸ்லாமிய எண்ணக்கருக்கள்

ஸபீர் ஹாபிஸ் B.A (Hons), Dip.in.SE

வெளியீடு:
இத்திஹாத் இஸ்லாமிய நட்புறவுச் சங்கம்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

www.bookshia.com
knowledge enlivens the soul

# இஸ்லாமிய எண்ணக்கருக்கள்

ஸபீர் ஹாபிஸ்
[மௌலவி அல்ஹாபிஸ் எம்.யூ.எம். ஸபீர் B.A (Hons), Dip.in.SE]

*முதற்பதிப்பு : டிசம்பர் 2007*
*பக்கங்கள்: 116*
*வெளியீடு: அல்ஹுதா பப்ளிகேஷன், ஸ்ரீலங்கா*
*அட்டை, கணனி வடிவமைப்பு : ஹாபிஸ் கம்ப்யூட்டர் சென்றர்*
*தருகை: 110/=*

Islamiya Ennak Karukkal (Islamic Concepts)

Author: Safeer Hafis
*[Moulavi AlHafis M.U.Mohamed Safeer B.A (Hons), Dip.in.SE]*

1st Edition : December 2007
Pages : 116
Published by : AlHudha Publication, SriLanka
Cover Design & Typeset by:Hafis Computer Centre
Prize:110/=



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

# சமர்ப்பணம்

என் எழுத்தாக்கத் திறனை வளர்த்த
பெற்றோர், சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள்,
மற்றும் பத்திரிகாதிபர்கள்
ஆகியோருக்கு சமர்ப்பணம் இந்நூல்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

OO. என்னுரை ........................................................ 05
O1. இஸ்லாம் –
சமாதானத்திற்கான மார்க்கம் .................................... 07
O2. தண்ணீர் –
அறிவியல் நோக்கிலான அல்குர்ஆனின் கருத்தியல் ..... 22
O3. இஸ்லாமிய நாகரிகமும்
ஐரோப்பிய மறுமலர்ச்சியில் அதன் தாக்கமும் ................. 44
O4. இஸ்லாத்தின் அழகியல் கோட்பாடு ............................ 60
O5. இஸ்லாத்தில் கற்றல் கற்பித்தல் ................................ 69
O6. இஸ்லாம் வலியுறுத்தும் ஜிஹாதும்
அதன் பண்புகளும் ................................................. 88
O7. இஸ்லாமிய வாரிசுச் சொத்துரிமை –
ஓர் அறிமுகம் ........................................................ 97
O8. அரபு எழுத்தணிக் கலை 108



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

# என்னுரை

“இஸ்லாமிய எண்ணக்கருக்கள்” என்ற இந்நூல், நான் இது வரை எழுதியுள்ள கட்டுரைகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட சிலவற்றின் தொகுப்பாக வெளிவருகின்றது.

இதில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள், தேசிய சர்வதேச பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரமாகி வாசகர்களது ஆதரவையும் வரவேற்பையும் பெற்றவை. அதனால், இவை நூலுருப் பெறும் போது, அவற்றின் பயன்பாட்டுப் பரப்பு மேலும் அதிகரிக்கும் என்று நம்புகின்றேன்.

இஸ்லாம் எண்ணற்ற அறிவியல், வாழ்வியல், கருத்தியல் கருவூலங்களைப் பொதிந்துள்ள உலகின் முதற்தரப் பொக்கிஷமாகும். அதனைப் பின்பற்றுவதும், பின்பற்றுவதற்காக அழைப்பு விடுப்பதும், அத்தகைய பணிகளில் உடல், பொருள், நேரத்தைச் செலவிடுவதும் மனிதப் பிறப்பின் பிரதான கடமையென்ற பிரகடனத்தை அல்லாஹ் முன்வைத்திருக்கின்றான்.

இஸ்லாம் போதிக்கும் அம்சங்கள் அனைத்தும், உலக வாழ்வை வென்று மறுமை வாழ்வை அனுபவிப்பதற்கான நுட்பங்களைத் தாங்கியுள்ள மிகச் சிறந்த எண்ணக்கருக்களாகப் பதிவு பெற்றுள்ளன. இஸ்லாத்தின் சட்டதிட்டங்களையும் கோட்பாடுகளையும் நுணுகி ஆராயும் எவரும் இக்கருத்தை மறுத்துரைக்க முன்வரமாட்டார்.

இஸ்லாத்தின் எண்ணக்கருக்கள் என்பவை மிகப் பரந்த பரப்பைக் கொண்டவை. உங்கள் கைகளில் தவழும் இந்நூல், அத்தகைய எண்ணக்கருக்களில் சிலவற்றை அடையாளம் கண்டு, அவை தொடர்பான சுருக்கமான விளக்கத்தை முன்வைக்க விழைகின்றது.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

சிறிய முயற்சிதானெனினும், பெரும் பயன்பாடுகளுக்கான வித்துகளின் தோற்றக் காரணிகளுக்கு இது களமமைக்கக் கூடும் என்ற எதிர்பார்ப்பு எனக்குண்டு.

நன்றியுடன்,

**ஸபீர் ஹாபிஸ்**

safeersl@yahoo.com

*ஸ்ரீலங்கா.* *2008.01.01*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

# இஸ்லாம்
# சமாதானத்திற்கான மார்க்கம்

**உ**லகில் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்குப் பல வழிகள் உள்ள போதிலும், ஒவ்வொருவரும் முதலில் தமது உணர்வுகளுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்வதே, அவற்றுள் மிகச் சிறந்த வழியாகும். சமாதானம் என்பது, இரக்க உணர்ச்சி மிக்க மக்களூடாகப் படிப்படியாக நிகழக்கூடியதும், பரஸ்பரம் உதவும் மனப்பான்மையூடாக வெளித்தெரியக் கூடியதுமான ஓர் அற்புத நிகழ்வாகும். தனிமனித சமாதானத்தை உறுதிப்படுத்துவதில், பரஸ்பர உதவியானது, நேரடித் தாக்கம் செலுத்துவதாக உள்ளதாகையால், அன்புணர்வும் உதவியும் சமாதானத்தைத் தோற்றுவிக்கும் முக்கிய பண்புகளாய் உள்ளன. இவ்விரு பண்புகளும் பிறரிடமிருந்து பெறும் போது வெளிப்படுத்தும் அழகை விட, பிறருக்கு அவற்றை வழங்கும் போது வெளிப்படுத்தும் அழகு அபரிமிதமானதாகும்.

சமாதானம் பற்றிய புதிய சிந்தனைகள், மதங்களிடையிலான ஒற்றுமையை வலியுறுத்தும் போக்கைப் பின்பற்றத் தொடங்கியுள்ளன. இதனூடாக, “மதங்களிடையிலான நல்லிணக்கமே சமாதானத்திற்கான வழி” என்ற கோட்பாடு பிரபலம் பெற்றுள்ளது.

இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் ஒவ்வொரு மதமும் சமாதானத்திற்கான பங்களிப்பை முழுமையாக வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே தோன்றியுள்ளது. இந்த எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்யும் பொருட்டு, ஒவ்வொருவரும் தாம் பின்பற்றும் மதத்தின் கோட்பாடுகள், சட்டதிட்டங்கள் என்பவற்றிலிருந்து சமாதானத்திற்கான அனுகூலச் செல்நெறிகளை ஆராய்ந்து வெளிப்படுத்த உழைத்து வருகின்றமை அண்மைக்கால உலகளாவிய நிகழ்வாகும். இவ்வகையில், உலகின் பிரதான சமயங்களில் ஒன்றான இஸ்லாம், சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்காக எத்தகைய பங்களிப்பை வழங்கவல்லது என்பதை சுருக்கமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

பொதுவாக, எல்லா மதங்களுமே, உலகில் அமைதி, நிம்மதி, பரஸ்பர அன்புணர்வு, ஒற்றுமை - இவற்றின் வழியாகச் சமாதானம் போன்ற வாழ்க்கைக்குச் சாதகமான நிலைகளைத் தோற்றுவிக்கும் நடைமுறைகளையே வலியுறுத்துகின்றன. வன்முறை, பயங்கரவாதம், தீவிரவாதம், சண்டை, படுகொலை போன்ற குரூரங்களை எந்த மதமும் போதிப்பதில்லை; அனுமதிப்பதுமில்லை. இதே நிலையிலேயே இஸ்லாமும் உள்ளது.

இஸ்லாம் என்ற அரபுச் சொல்லுக்கு 'சமாதானம்' என்ற கருத்தே பிரதானமானதாகும். தனது கோட்பாடுகள், நடைமுறை ஒழுங்குகள், சட்டதிட்டங்கள் அனைத்திலும் சமூக ஒற்றுமையை வலியுறுத்தும் இஸ்லாம், தன்னைப் பின்பற்றும் முஸ்லிம்கள் அனைவரும், பிற சமூகங்களுடன் எப்போதும் நல்லுறவைப் பேண வேண்டுமென்று கட்டளையிடுவதனூடாக சமாதானத்தையும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது.

புனித இஸ்லாம் மார்க்கம், வன்முறையற்ற, சமாதானத்தை நிலைநிறுத்தக்கூடிய எண்ணற்ற நடைமுறைச் சாத்தியக் கருத்துகளை எடுத்துக் கூறியுள்ளதோடு, அத்தகைய கருத்துகளை முஸ்லிம்கள் தமது வாழ்வில் முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற கடமையையும் வலியுறுத்தியுள்ளது. அடக்குமுறைக்கெதிரான போராட்டம், தேவையுள்ளோருக்கு உதவுதல், பரஸ்பர புரிந்துணர்வு என்பன இஸ்லாம் சமாதானத்தின் தோற்றக் காரணிகளென பரிந்துரைத்துள்ள முயற்சிகளுள் முக்கியமானவையாகும். சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் உடலியல், உளவியல், சமூகவியல் முதலான பல துறைகளிலிருந்தும் மேற்கொள்ளப்பட வேண்டுமென இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. சமாதானத்தையும் அதற்காகப் பேச்சுவார்த்தையையும் மேற்கொள்வது, ஆக்கிரமிப்பையும் வன்முறையையும் விட அதிக பயன்தரவல்லது என்ற கொள்கையில் இஸ்லாம் எப்போதும் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

இவ்வகையில், இஸ்லாம் சமாதானத்திற்கான மார்க்கம் என்பதை நிறுவும் இஸ்லாமிய கொள்கைத் தரவுகளைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தி நோக்கலாம்.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

## *01) இஸ்லாம், வன்முறையையும் ஆக்கிரமிப்பையும் தடுத்து, நீதியையும் சமாதானத்தையும் வலியுறுத்துகின்றது.*

*இஸ்லாம், தற்காப்புத் தவிர்ந்த ஏனைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும், தனிமனிதர்களுக்கெதிரான வன்முறைகள், ஆக்கிரமிப்புகள் போன்ற தீவிர முயற்சிகளை முற்றாகத் தடுத்துள்ளது. உண்மையில், இஸ்லாம், மனித வாழ்வின் அனைத்து நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்குச் சந்தர்ப்பமளிக்கும் நடைமுறைச் சாத்தியமான சிறந்த மார்க்கமாகும்.*

*இஸ்லாம், நீதிக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளதோடு, வன்முறைகளையும் ஆக்கிரமிப்புகளை மேற்கொள்ளும் மனிதர்கள், தமது நடவடிக்கைகளுக்காக உரிய முறையில் தண்டிக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தி வருகின்றது. அதேவேளை, தவறிழைத்தவர்களை முடியுமான வரை மன்னிப்பினாலேயே திருத்த வேண்டுமென்ற கொள்கையை இஸ்லாம் அதிகமாக ஊக்குவிக்கும் பண்பையும் கொண்டுள்ளது.*

*இந்தச் சிந்தனையை வலியுறுத்தக் கூடிய கருத்துகள் பலவற்றை, புனித வேதமான அல்குர்ஆனிலும், நபி (ஸல்) அவர்களது முன்மாதிரிகளிலும் பரவலாகக் காண முடிகின்றது. எடுத்துக் காட்டாக சில அல்குர்ஆன் வசனங்கள் கீழே தரப்படுகின்றன:*

*01. "உங்களுடன் போர் புரிபவர்களோடு அல்லாஹ்வுடைய பாதையில் நீங்களும் போரிடுங்கள். நீங்கள் வரம்பு மீறாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிக்க மாட்டான்" (02:190)*

*02. "எனவே, (உங்களுடன் போரிடாது) அவர்கள் விலகிக் கொண்டால், நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிக்கின்றவன்; மிக்க கிருபையுடையவன்" (02:192)*

*03. "அவர்கள், சமாதானத்தின் பக்கம் சாய்ந்தால், அப்பொழுது நீங்களும் அதன் பக்கம் சாய்வீர்களாக! அல்லாஹ்வின் மீதே நம்பிக்கையும் வைப்பீர்களாக! நிச்சயமாக அவன் செவியுறுவோனும் நன்கறிந்தோனுமாவான்" (08:61)*

*முஸ்லிம்கள் தம்மைத் தாக்க வரும் எதிரிகளுடனேயே போரிட வேண்டும்; மாறாக, எந்நிலையிலும் சண்டையைத் துவக்குபவர்களாக முஸ்லிம்கள் இருக்கக் கூடாது. சண்டையை*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*முதலில் துவக்குபவர்கள் பெரும் ஆக்கிரமிப்பாளர்களாகையால், அத்தகையோரை அல்லாஹ் சற்றும் நேசிப்பதில்லை. மேலும், எதிரிகள் போர் நிறுத்தத்திற்கு முன்வந்தால், முஸ்லிம்கள் அதனை ஏற்று அவர்களுடன் சமாதானம் செய்து கொள்ள வேண்டும். இக்கருத்துகளை அழுத்தமாக வலியுறுத்தும் போக்கை, மேலுள்ள வசனங்களில் அவதானிக்க முடிகின்றது.*

*04. "எவரேனும் அத்துமீறி உங்கள் மீது (போர் புரிய) வந்தால், அவர்கள் உங்கள் மீது மீறியது போன்று நீங்களும் அவர்கள் மீது மீறிச் சென்று போர் புரியுங்கள். மேலும், நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியாளர்களுடன் இருக்கிறான் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்" (02:194)*

*எதிரிகள் அத்துமீறி நடந்தால் மாத்திரமே ஆயுத முனையில் அவர்களுக்குப் பதிலிறுக்க வேண்டும். இத்தகைய நிலைகளில் அல்லாஹ்வை முழுமையாக அஞ்சி நடப்பதும் அவசியமாகும்.*

*05. "கண்ணியமான மஸ்ஜிதுக்குச் செல்லவிடாது உங்களைத் தடுத்துக் கொண்ட சமூகத்தார் மீது உங்களுக்குள்ள பகைமை அவர்கள் மீது நீங்கள் வரம்பு மீறும்படி உங்களைத் தூண்டி விடவும் வேண்டாம். இன்னும், நன்மைக்கும் பயபக்திக்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள்; பாவத்திலும், பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டாம்; இன்னும், அல்லாஹ்வை நீங்கள் பயந்து கொள்ளுங்கள்; (ஏனெனில்,) நிச்சயமாக அல்லாஹ் தண்டிப்பதில் மிகக் கடினமானவன்" (05:02)*

*முஸ்லிம்கள், தற்போது எதிர்ப்பு நடவடிக்கைகள் எவற்றையும் மேற்கொள்ளாதிருக்கும் ஒரு கூட்டத்தினரை, அவர்கள் புரிந்த கடந்த காலப் பகைமை நடவடிக்கைகளுக்காக வெறுக்கக் கூடாது. அவர்களுடன் கடினத் தன்மையோடு நடக்க எத்தனிக்கக் கூடாது. மேலும், அத்தகையோருடன் நேர்மையான நீதியான வழிமுறையைக் கையாள வேண்டும். அத்துமீறல், தீமை போன்ற விடயங்களைத் தவிர்த்து, பயனுள்ள நன்மையான விடயங்களில் அவர்களுக்கு உதவி புரிவதும் அவசியமாகும்.*

*06. "நன்மையும் தீமையும் சமமாகிவிடாது. (ஆதலால், நபியே!) எது மிக அழகானதோ அதைக் கொண்டு (தீமையை) தடுத்துக் கொள்வீராக! அப்பொழுது எவருக்கும் உமக்குமிடையே பகைமை*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*இருந்ததோ அவர், உம்முடைய உற்ற சிநேகிதரைப் போல் ஆகிவிடுவார்” (41:34)*

*அல்லாஹ் வலியுறுத்தியுள்ள நன்மைகள் சமுதாயத்திற்கு எல்லா வகையிலும் பயனளிப்பவை. அல்லாஹ் விலக்கியுள்ள தீமைகள் சமுதாயத்தை எல்லா வகையிலும் பாதிப்பவை. எனவே, நன்மைகளும் தீமைகளும் ஒரு போதும் சமமாக முடியாது. முஸ்லிம்கள் தீமைகளை முற்றாகத் தவிர்த்து, நன்மைகளை மட்டும் புரிய வேண்டுமென்பதே இஸ்லாத்தின் எதிர்பார்ப்பாகும். ஒருவர், பகைமை நோக்குடன் தீங்குகளைப் புரிய வந்தாலும், நற்செயல்களால் அவரது நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டுமென வலியுறுத்தும் இஸ்லாம், அவ்வாறு செய்வது, அம்மனிதரின் தீய பண்பை நீக்கி அவரை நல்லவராய் மாற்றி விடும் எனவும் உற்சாகமூட்டுகின்றது.*

*07. “விசுவாசங் கொண்டோரே! உங்களுக்கோ, அல்லது உங்கள் பெற்றோருக்கோ, அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாக இருந்த போதிலும், நீதியை நிலைநிறுத்தியவர்களாக அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுபவர்களாக இருங்கள். அவர் பணக்காரராக இருந்தாலும் சரி, அல்லது ஏழையாக இருந்தாலும் சரி, அல்லாஹ் அவ்விருவருக்கும் அவர்களைக் காப்பாற்றுவதற்கு மிக உரியவன். இன்னும், நீங்கள் நியாயம் வழங்குவதில் உங்கள் மனோ இச்சையைப் பின்பற்றாதீர்கள். நீங்கள் சாட்சியத்தை மாற்றிக் கூறினாலும், அல்லது புறக்கணித்தாலும் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்குணர்பவனாக இருக்கின்றான்” (04:135)*

*நீதியை நிலைநாட்டுவது ஒவ்வொரு முஸ்லிமினதும் சமய முக்கியத்துவம் வாய்ந்த அடிப்படைக் கடமைகளுள் ஒன்றாகும். இதன் போது, தமக்கோ தமது குடும்பத்திற்கோ, சமூகத்தில் செல்வாக்குப் பெற்றவர்களுக்கோ பாதிப்புகள் ஏற்படும் என்றிருந்தாலும், நீதியை நிலைநாட்டுவதற்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்பதில் இஸ்லாம் மிகக் கண்டிப்பான போக்கைக் கொண்டுள்ளது.*

*08. “மானக்கேடான காரியங்கள், மார்க்கத்தில் மறுக்கப்பட்டவை, வரம்பு மீறுதல் ஆகியவற்றை விட்டும் உங்களை அவன் விலக்குகிறான். (இவைகளை) நீங்கள் நினைவில் வைத்துக் கொள்வதற்காக அவன் உங்களுக்கு உபதேசிக்கிறான்” (16:90)*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*நீதியை நிலைநாட்டும் படியாகவும், அதற்குப் புறம்பான அனைத்துக் காரியங்களையும் முற்றாகத் தவிர்ந்து கொள்ளும்படியாகவும் வலியுறுத்தும் அல்லாஹ்வின் கட்டளை மிக அழுத்தமானதாக வெளிப்பட்டுள்ளது. மேலும், தீமைகள் புரிவதையும், ஆக்கிரமிப்புகள், அபகரிப்புகள் போன்ற குற்றச் செயல்களை மேற்கொள்வதையும் அல்லாஹ் வன்மையாகத் தடுத்துள்ளான்.*

*09. "விசுவாசிகளே! நீங்கள் தண்டிப்பதாக இருந்தால், எந்தளவிற்கு நீங்கள் தண்டிக்கப்பட்டீர்களோ, அது போன்ற அளவிற்கே தண்டியுங்கள்; (தண்டிக்காது) பொறுத்துக் கொள்வீர்களானால், நிச்சயமாக அது பொறுமையாளர்களுக்கு மிகச் சிறந்ததாகும்" (16:126)*

*ஒருவர் இழைத்த குற்றச் செயலுக்காகத் தண்டிக்கப்படுவதானால், தண்டனைகளின் சமநிலை முறையாகப் பேணப்பட வேண்டும். அதாவது பழிவாங்கும் ஒருவர், தான் பெற்ற தண்டனையை விட அதிகமாக ஒருவரை பழிவாங்கக் கூடாது. இது பொதுவான கொள்கையாயினும், தண்டிப்பதற்குப் பதிலாக, மன்னித்து விடுவதே மிகச் சிறந்த மனிதாய வழிமுறையென இஸ்லாம் சிபாரிசு செய்கின்றது. மன்னிப்பதென்பது இஸ்லாத்தில் மிக உயர்ந்த பண்பாக அடையாளப்படுத்தப்படுவதோடு, மனிதாபிமான உணர்வின் முக்கிய கூறாகவும் அது விபரிக்கப்பட்டுள்ளது. தண்டிப்பதன் மூலமாகச் சாதிப்பதை விட மன்னிப்பதன் மூலமாக அதிகம் சாதிக்க முடியும் என்பது இஸ்லாத்தின் கோட்பாடாகும்.*

*இவ்வகையில், மேற்குறிப்பிடப்பட்ட அல்குர்ஆன் வசனங்களிலிருந்து, சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காக இஸ்லாம் வலியுறுத்தும் கருத்தியல்களாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம்:*

*# தனிமனிதர்களிடையிலான பரஸ்பர புரிந்துணர்வையும் அன்பையும் பெரும் சமுதாய சக்தியாக வளர்த்தெடுக்க வேண்டும். தற்காப்பு நோக்கத்திற்காக அன்றி, முஸ்லிம்கள் பிற சமூகங்களுடன் எந்நிலையிலும் போரிடக்கூடாது.*

*# எப்போதும் நீதியை நிலைநிறுத்தப் போராடுவதும், எதிரிகளாயிருந்தாலும் அவர்களுக்கெதிராக ஆக்கிரமிப்பைத் துவங்காதிருப்பதும் அவசியமாகும்.*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

# கடின நெஞ்சுடையவர்களை நற்பண்புள்ள உற்ற தோழர்களாய் மாற்றியமைப்பதற்காக தீய செயல்களை நற்பண்புகள் மூலமாகத் தடுத்து நிறுத்த முயல வேண்டும்.

# குற்றத்திற்கான தண்டனையை சமமாக வழங்க வேண்டும்; முடியுமாயின் பழிவாங்குவதற்குப் பதிலாக குற்றத்தை மன்னித்து விடுவது மிகச் சிறந்த நற்செயலாகும்.

## 02) சகல இனங்களுடனும் மக்களுடனும் சமாதானத்தோடு வாழுதல்:

“மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் மற்றும் ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம். இன்னும், ஒருவருக்கொருவர் நீங்கள் அறிமுகமாகிக் கொள்வதற்காக உங்களை கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் உங்களில் மிக்க கண்ணியமுள்ளவர் உங்களில் மிகவும் பயபக்தியுடையவர்தான். நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) நன்கறிந்தவன், நன்குணர்பவன்” (49:13)

மனிதர்கள் இன, மத, மொழி சார்ந்த வெவ்வேறு அடையாளங்களுடன் வாழும் இயல்பு கொண்டவர்கள். இத்தகைய வேறுபாடுகள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்காகவும், பரஸ்பர அன்பு வெளிப்பாட்டுக்காகவுமே பயன்படுத்தப்பட வேண்டும்; பகைமைகளையோ குரோதங்களையோ வளர்த்துக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படக் கூடாது. மேலும், இத்தகைய வேறுபாடுகள் மூலமாக மட்டும் மனிதர்கள் உயர்வையோ தாழ்வையோ அல்லாஹ்விடத்தில் பெற முடியாது; அல்லாஹ்வின் மீதுள்ள பற்று, பயபக்தி என்பவையே ஒவ்வொருவரதும் தரத்தை நிர்ணயம் செய்கின்றன என்பதை மேலுள்ள வசனம் தெளிவுபடுத்துகின்றது.

மேலும், ஒவ்வோர் இனமும் மற்ற இனத்துடன் சமாதானமாக வாழ வேண்டுமென்பதையும், மற்ற இனங்களின் கலாசாரம், பண்பாடு, நாகரிகம், சமயம் என்பவற்றை மதித்து நடக்க வேண்டுமென்பதையும், இன உறவைப் பலப்படுத்தும் வகையிலேயே உரையாடல்களும் ஏனைய தொடர்புகளும் அமைந்திருக்க வேண்டுமென்பதையும் இவ்வசனம் மிகச் சுருக்கமாக விபரிக்கின்றது.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

## *03) மார்க்கத்தில் வற்புறுத்தல் இல்லை:*

*ஒவ்வொருவரும் தமக்குரிய மார்க்கத்தைத் தெரிவு செய்வதும் பின்பற்றுவதும் மனிதர்களின் தனிப்பட்ட உரிமை என்பதை இஸ்லாம் பிரகடனம் செய்கின்றது.*

*"இஸ்லாம் மார்க்கத்தில் எத்தகைய நிர்ப்பந்தமுமில்லை. வழிகேட்டிலிருந்து நேர்வழி திட்டமாகத் தெளிவாகி விட்டது. ஆகவே, எவர் தீமையை நிராகரித்து விட்டு, அல்லாஹ்வை விசுவாசிக்கின்றாரோ அவர், திட்டமாக அறுந்து போகாத பலமான கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டார். மேலும், அல்லாஹ் செவியேற்பவனும் நன்கறிபவனுமாவான்" (02:256)*

*முஸ்லிம்கள், தமது இஸ்லாத்தைப் பின்பற்ற முடியும்; அதனைப் பிறருக்குத் தெளிவுபடுத்தவும் முடியும். ஆனால், பிற சமயத்தவர்களை தமது சமயத்துள் வருமாறு வற்புறுத்துவதோ, சமய, கலாசார, பண்பாட்டு நடைமுறைத் திணிப்பை அவர்களிடையே மேற்கொள்வதோ கூடாது; அது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டதல்ல. பின்பற்றும் சமயம் தொடர்பாகத் தீர்மானமெடுக்கும் உரிமை ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உரியது என இஸ்லாம் தெளிவாகக் கூறிவிட்டது. எனவே, இதற்குப் புறம்பாக, இஸ்லாத்தைப் பின்பற்றும் ஒருவர், தமது சமயத்துக்கு வருவதை, பிற இனத்தவர்கள் தமது உயிர்களையோ உடமைகளையோ காப்பாற்றிக் கொள்வதற்கான நிபந்தனையாக முன்வைப்பாரானால், அவர் இஸ்லாத்தைப் பூரணமாகப் பின்பற்றியவராக மாட்டார். அவரது இத்தவறான செயலுக்கு இஸ்லாம் பொறுப்பாகவும் மாட்டாது.*

*இஸ்லாத்தின் இக்கோட்பாட்டை அல்குர்ஆனின் பிறிதொரு வசனமும் உறுதிசெய்கின்றது: "மேலும், இணைவைத்துக் கொண்டிருப்போரில் எவரொருவர் உம்மிடம் அபயம் தேடினால், அல்லாஹ்வுடைய வசனங்களை அவர் செவியேற்கும் வரையில் அவருக்கு அபயமளிப்பீராக! பின்னர், அவருக்கு அபயமளிக்கும் வேறோர் இடத்தில் அவரைச் சேர்த்து வைப்பீராக! அது, நிச்சயமாக அவர்கள் அறியாத சமூகத்தினர் என்ற காரணத்தினாலாகும்" (09:06)*

*எனவே, பிற இனத்தைச் சேர்ந்த ஒருவர் முஸ்லிம்களிடம் புகலிடம் கோரி வரும் போது, அவருக்கு சகல வசதிகளுடனும் புகலிடம் அளித்து அவரைப் பாதுகாப்பது முஸ்லிம்களின் சமயக்*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*கடமை என இஸ்லாம் பறைசாற்றியுள்ளது. இவ்வாறு அவரைப் பாதுகாப்பதற்காக எத்தகைய நிபந்தனைகளையும் அவரிடம் முன்வைக்கக் கூடாது என்பதும் இஸ்லாத்தின் கட்டளையாகும்.*

### *04) முஸ்லிம்களுக்கு யுத்தம் புரிவதற்கான அனுமதி எப்போது வழங்கப்படுகிறது?*

*தற்காப்பு, அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாத்தல், அநீதியைத் தடுத்து நிறுத்தி நீதியை நிலைநாட்டுதல் போன்ற முக்கிய காரணங்களுக்காகவே யுத்தத்தை இஸ்லாம் அனுமதித்துள்ளது. மாறாக, இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காகவோ, நாடுபிடிப்புகளுக்காகவோ யுத்தம் புரியுமாறு இஸ்லாம் கட்டளையிடவில்லை; அத்தகைய ஒரு போரை இஸ்லாம் அனுமதிக்கவுமில்லை. பின்வரும் வசனம் அதனைத் தெளிவுபடுத்துகின்றது:*

*“நிராகரிப்போரால் போர் தொடுக்கப்பட்டோருக்கு அவர்கள் அநீதமிழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால், போர் தொடுத்தோரை எதிர்த்து யுத்தம் செய்ய அனுமதியளிக்கப்பட்டு விட்டது. நிச்சயமாக அல்லாஹ்வோ இவர்களுக்கு உதவி செய்ய மிக்க ஆற்றலுடையவன். அவர்கள் எத்தகையோரென்றால், நியாயமின்றித் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள். ‘எங்களுடைய இரட்சகன் அல்லாஹ் ஒருவன்தான்’ என்று கூறியதைத் தவிர வேறெதுவும் அவர்கள் புரியவில்லை. மேலும், மனிதர்களில் அநியாயம் செய்யும் சிலரை மற்ற சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருந்தால், மடங்கள், கிறிஸ்தவர்களின் வணக்கஸ்தலங்கள், யூதர்களின் வணக்கஸ்தலங்கள், மஸ்ஜிதுகள் - இவற்றில் அல்லாஹ்வின் பெயர் அதிகமாகக் கூறப்படுபவை யாவும் இடிக்கப்பட்டுப் போயிருக்கும். அல்லாஹ்வுக்கு எவன் உதவி செய்கிறானோ அவனுக்கு நிச்சயமாக அல்லாஹ் உதவி செய்கிறான். நிச்சயமாக அல்லாஹ் வலிமை மிக்கவன், யாவரையும் மிகைத்தவன்” (22:39,40)*

### *05) யுத்தத்தின் போது பொதுமக்களைக் கொல்வதற்கு இஸ்லாம் அனுமதியளித்துள்ளதா?*

*யுத்த சூழலாக இருந்தாலும், முஸ்லிம்கள், பொதுவான மனிதாபிமானப் போக்கை எப்போதும் கடைப்பிடிக்க வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகின்றது. மிருகத்தனமான,*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*காட்டுமிராண்டித்தனமான, கொடூர செயல்களனைத்தையும் இஸ்லாம் வன்மையாகக் கண்டித்துள்ளது. வீணாக யாரையும் கொலை செய்யக் கூடாதென்பதும், யுத்தமாயிருந்தாலும், உயிரிழந்த எதிரிகளின் உடல்களை கோபம் கொண்டு சிதைத்துச் சேதப்படுத்தக் கூடாதென்பதும் இஸ்லாத்தின் கண்டிப்பான கட்டளையாகும்.*

*இவ்வாறே, யுத்தத்தில் சம்பந்தப்படாதிருக்கும் பொது மக்களை, குறிப்பாக பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள், மார்க்க அறிஞர்கள் போன்றோரைக் கொலை செய்வதை இஸ்லாம் வன்மையாகத் தடுத்துள்ளது. எதிரியாயிருந்தாலும், நீதியாகவே அவர் கையாளப்பட வேண்டும். சிறைக் கைதிகளாயிருந்தாலும், அவர்களுக்கும் அடிப்படை மனித உரிமைகள் உள்ளன. அவை மிக மரியாதையாகப் பேணப்படுவது அவசியமாகும் எனவும் இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது.*

*கீழ்க்காணும் வசனங்கள் இக்கருத்தியலைச் சுருக்கமாக விபரிக்கின்றன:*

*“நபியே! உங்கள் கைகளில் இருக்கும் கைதிகளிடம் கூறுவீராக; ‘உங்களுடைய உள்ளங்களில் ஏதேனும் நன்மை இருப்பதை அல்லாஹ் அறிந்தால், உங்களிடமிருந்து (ஈட்டுத் தொகையாக) எடுக்கப்பட்டதை விட மிகச் சிறந்ததை உங்களுக்குக் கொடுப்பான். உங்களை அவன் மன்னித்தும் விடுவான். இன்னும் அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன்; மிகக் கிருபையுடையவன்” (08:70)*

*“மேலும், அல்லாஹ் மீதுள்ள அன்பின் காரணமாக ஏழைக்கும், அநாதைக்கும், சிறைப்பட்டவருக்கும் அவர்கள் உணவளிப்பார்கள். (உணவை உண்போரிடம்) ‘உங்களுக்கு நாம் உணவளிப்பதெல்லாம் அல்லாஹ்வின் திருப்தியை நாடியேதான். உங்களிடமிருந்து நாம் யாதொரு பிரதிபலனையோ, அல்லது நன்றி செலுத்துவதையோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை’ என்று கூறுவார்கள்” (76:8,9)*

*யுத்தத்திற்குப் படைகளை அனுப்பும் போது, இஸ்லாத்தின் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள், தமது இராணுவத்தினருக்கு பின்வருமாறு அறிவுறுத்தல் வழங்க எப்போதும் தவறியதில்லை: “போரில் ஈடுபடாத பெண்களையோ சிறுவர்களையோ முதியோர்களையோ மார்க்க அறிஞர்களையோ கண்டிப்பாகக் கொலை செய்யக் கூடாது. மேலும், பழந்தரும் மரங்களை*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

வெட்டுவதையும், எதிரிகளின் கிணறுகளை அசுத்துப்படுத்துவது நஞ்சாக்குவது போன்ற செயல்களையும் முற்றாகத் தவிர்ந்து கொள்ள வேண்டும்”

நபி (ஸல்) அவர்கள் தமது இராணுவத்தினருக்கு வழங்கிய யுத்த அறிவுறுத்தல்கள் அனைத்தும், மிகுந்த மனிதாபிமானப் போக்கையும், இஸ்லாத்தை உண்மையான சமாதானத்திற்கான மார்க்கமாக உலகுக்கு அறிமுகப்படுத்தும் தன்மையையும் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவையனைத்திற்கும் மேலாக, யுத்தத்தில் வெற்றி கொண்ட பின், எதிரிகளைத் துன்புறுத்துவது, பழிவாங்குவது, அநீதியாக நடந்து கொள்வது போன்ற அனைத்து வன்முறைகளையும் இஸ்லாம் முற்றாகத் தடை செய்துள்ளமை, அதன் மிதமான போக்கிற்கும் சமாதானத்திற்கான களச்சாத்தியத்தைத் தோற்றுவிக்கும் அறிவுடைமையான பெருந்தன்மைக்கும் சான்றாக விளங்குகின்றது. மேலும், எதிரிகளை வெற்றி கொண்டபின்னும், சுதேச மக்களின் பொருளாதார வளங்களில் ஆதிக்கம் செலுத்த முனைவதோ, காலனித்துவ ஆட்சியை நிலைநிறுத்துவதோ இஸ்லாத்தில் விலக்கப்பட்ட தீயபணிகளாகும். நீதியும் சுதந்திரமும் அங்கு நிலைநாட்டப்படுவதே அவசியமானது. அம்மக்களின் கலாசாரம், சமயம், பண்பாடு என்பவற்றுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டுமென்பதும், அவற்றைத் தொடர்வதற்கான முழுமையான உரிமை அம்மக்களிடமிருந்து எச்சந்தர்ப்பத்திலும் பறிக்கப்படக் கூடாதென்பதும் இஸ்லாத்தின் கண்டிப்பான கட்டளையாயுள்ளது.

## முடிவுரை

இது, யுத்தம், சமாதானம், நீதி தொடர்பான இஸ்லாத்தின் கோட்பாடு பற்றிய மீள்வாசிப்பாகும். இஸ்லாம், எப்போதும் வன்முறைக்கும் தீவிரவாதத்துக்கும் எதிரானது என்பதும், அது சமாதானத்தையும் உலக அமைதியையும் வலியுறுத்தும் முதன்மையான கொள்கை என்பதும் மேலே முன்வைக்கப்பட்ட தரவுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

காட்டுமிராண்டித்தனம், அறியாமை, தீவிரவாதம் போன்ற சமுதாய விரோத வாழ்க்கை முறையை அழித்து, பரஸ்பர புரிந்துணர்வு, மகிழ்ச்சி, நிம்மதி, அமைதி என்பவற்றை இலக்காகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இஸ்லாம், அதன் மீதுள்ள காழ்ப்புணர்வின் காரணமாக, தீவிரவாத சமயமாக



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*சித்திரிக்கப்படும் துரதிருஷ்டவசமான நிலைக்குத் தற்போது தள்ளப்பட்டுள்ளதெனினும், காய்தல் உவத்தலின்றிச் சிந்திக்க முனையும் எவரும், இஸ்லாம் சமாதானத்திற்கான மார்க்கமே என்பதை உறுதியாக ஏற்றுக் கொள்வதில் எவ்விதத் தயக்கமும் கொள்ளமாட்டார்.*

*யுத்தம் தொடர்பான இஸ்லாத்தின் கருத்தியல்களைப் பூரணமாக விளங்கிக் கொள்ளத் தவறிவிட்டதன் விளைவாகவே சிலர், இஸ்லாம், வாளினால் பரப்பப்பட்ட ஒரு மார்க்கம் என்ற கொள்கையைப் பிரசாரம் செய்து வருகின்றனர். இஸ்லாம் வீணான சண்டைகளையும் யுத்தங்களையும் வெறுக்கின்றது; தடைசெய்கின்றது. ஆனால், அல்லாஹ்வின் பாதையில் புரியப்படும் புனித யுத்தம் (ஜிஹாத்) என்பதை ஆதரித்து வரவேற்றுள்ளது. சில சந்தர்ப்பங்களில் அதனை சமய அழுத்தம் கொண்ட சமூகக் கடமையாகவும் வலியுறுத்தியுள்ளது. இது பற்றி பேராசிரியர் முக்ததர்கான் குறிப்பிடுவதாவது, “அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் புரிவதென்பது பிரதானமாக மூன்று காரணங்களுக்காக மட்டுமே மேற்கொள்ளப்படலாம்: 1- முஸ்லிம்கள் தமது சமய நம்பிக்கையை நடைமுறைப்படுத்துவதற்குத் தடைகள் ஏற்பட்டு, மத சுதந்திரம் பறிக்கப்படும் போது. 2- மக்கள் அடக்குமுறைக்கும் கொடுமைகளுக்கும் உள்ளாக்கப்படும் போது. 3- மக்களின் நிலம் பலாத்காரமாகப் பறிக்கப்படும் போது. இத்தகைய நிலைகளில், இஸ்லாம் இரண்டு விதத் தெரிவுகளை முஸ்லிம்கள் முன்னிலையில் வைத்துள்ளது. ஒன்று ஆக்கிரமிப்பாளர்களை மன்னித்து அவர்களது நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்வது, இரண்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வது. எனினும், முதலாவது தெரிவு எல்லா சந்தர்ப்பத்திலும் பொருத்தமானதாக இருக்க முடியாது என்பதையும் இஸ்லாம் விளக்கத் தவறவில்லை. தமது நிலத்தில் அத்துமீறி நுழைந்து, தமது உயிர்களைப் பறித்து வரும் ஓர் ஆக்கிரமிப்புக் கும்பலை மன்னித்து விடுவதோ, அவர்களது நடவடிக்கையை ஏற்றுக் கொள்வதோ சுயமரியாதையும் வீரமும் உள்ள எந்தச் சமூகத்தாலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு செயல் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இவ்வகையில், யுத்தம் தொடர்பான இஸ்லாத்தின் கருத்தியல், பகுத்தறிவு ரீதியாகவும் சமய ரீதியாகவும் எல்லோராலும் ஏற்றுக்*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

கொள்ளத்தக்க யதார்த்தச் செறிவைக் கொண்டுள்ளது என்பது கண்கூடு.

எனவே, உலகில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான எல்லா வகையான களச் சாத்தியங்களையும் அறிமுகப்படுத்தி ஊக்குவித்துள்ள இஸ்லாம், உலகில் முழுமையாகப் பின்பற்றப்படுமானால், சமாதானத்திற்கான ஒரே வழி இஸ்லாத்தைப் பின்பற்றுவதுதான் என்ற யதார்த்தத்தை எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் ஆரோக்கியமான சூழல் புவியில் தோன்றும். அத்தகைய சூழலே உலகில் நிம்மதியையும் அமைதியையும், மனிதர்கள் எல்லோரும் விரும்பும் சமாதானத்தையும் கொண்டு வந்து சேர்க்கும் என்பது மகிழ்ச்சி தரும் உண்மையாகும்.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

# தண்ணீர், அறிவியல் நோக்கிலான அல்குர்ஆனின் கருத்தியல்

## *01) தண்ணீர்: அறிமுகம்*

*உலகில் நிலைபெற்றுள்ள எண்ணற்ற மூலவளங்களுள் மனித வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாததாகவும் அளவிடற்கரிய பெறுமதி மிக்கதாகவும் இருப்பது தண்ணீர் ஆகும். உலகின் ஆரம்பம் தொடக்கம், தண்ணீர், வாழ்க்கைக்கான ஆகாரத்தின் மிக முக்கியமான பங்கினை வகித்து வந்துள்ளதோடு, மனித சமூகத்தின் இருப்பு தொடர்வதில் முக்கிய பாத்திரமாகவும் செயலாற்றி வந்துள்ளது. மனிதனின் உற்பத்திமூலம் தண்ணீரே என்ற உண்மையை இன்று நவீன விஞ்ஞானமும் ஏற்றுக் கொண்டுள்ளது.*

*முற்கால சமூகத்தினர் கப்பல்களை அமைத்து, அவற்றின் உதவியுடன் சமுத்திரங்களினதும் கடல்களினதும் நீர்ப் பரப்பில் பயணங்களை மேற்கொண்டதன் விளைவாகவே புதிய பல நிலங்களைக் கண்டுபிடித்தனர். தமது ஏற்றுமதி-இறக்குமதி முயற்சிகள், மற்றும் அபிவிருத்திப் பணிகளை அங்கு மேற்கொண்டனர். இத்தகைய செயற்பாடுகள் மனித சமூகத்தின் நாகரிக வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையில், தண்ணீரானது, மனித சமூகத்தின் வாழ்வை வடிவமைப்பதிலும் தொழில்நுட்பம், மொழி, கலாசாரம் என்பவற்றின் அபிவிருத்தியிலும் பெரும் பங்காற்றியுள்ளது எனலாம்.*

*இந்த உண்மைக்குப் புறம்பாக, பல்லாயிரம் வருடங்களாக, மனித சமூகம், தமது விவசாயம், உற்பத்தி, மற்றும் பல்வேறு தொழில் நடவடிக்கைகளூடாக, எவ்வித தயக்கமுமின்றி, தண்ணீரை அசுத்தப்படுத்தி வந்துள்ளது. நாளாந்த சனத்தொகை வளர்ச்சி, மூலவளங்களுக்கான தேவைகளின் அதிகரிப்பு என்பன வெளிப்படுத்தும் இரசாயனக் கழிவுகள், நில மேற்பரப்பிலும் கீழ்ப்பரப்பிலும் உள்ள தண்ணீர் இவ்வாறு மாசடைவதற்கும், குடிநீரின் தரம் குறைவதற்கும் காரணமாயுள்ளன.*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

தண்ணீரைப் பயன்படுத்தாத வீடுகளோ மனிதர்களோ உலகில் எங்குமில்லை எனுமளவு, தண்ணீரின் பாவனை என்பது, தவிர்க்க முடியாத முக்கியத் தேவையாக உலகின் ஆரம்பம் தொடக்கம் தொடர்ந்து இருந்து வருகின்றது. அமெரிக்காவில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு, சராசரியாக ஒவ்வொரு வீட்டிலும் நாளொன்றுக்கு 74 கலன்கள் தண்ணீர் பயன்படுத்தப்படுவதாகக் கூறுகின்றது.

## 01.2 தண்ணீரின் கட்டமைப்பு

நீரானது பனி, திரவம், நீராவி ஆகிய மூன்று நிலைகளைக் கொண்டுள்ளது. இவற்றில் திரவ நீரே மனிதர்களுக்கு இன்றியமையாததாகும். இது $H_2O$ எனும் இரசாயனப் பெயரில் அழைக்கப்படுகின்றது. உலகின் அனைத்து உயிரினங்களின் இருப்புக்கும் செழிப்புக்கும் காரணமாக உள்ள இந்தத் தண்ணீர், நீர்வாயு மற்றும் ஒட்சிசன் ஆகிய எதிர்விளைவுக்குரிய இரு முக்கிய மூலகங்களின் இணைப்பினால் உருவான பண்டமாகும்.

எவ்வாறாயினும், திரவ நீரானது, அருந்துதல், கழுவுதல், நீந்துதல், சமைத்தல், மீன்பிடித்தல் முதலான பல்வேறு தேவைகளுக்குப் பயன்படக்கூடிய மிக அற்புதமான உதவிப் பொருளாகும். தண்ணீர் இன்மையானது வறட்சியையும், தண்ணீர் அதிகரிப்பால் ஏற்படும் வெள்ளப்பெருக்கானது நோய், மரணம் என்பவற்றையும் ஏற்படுத்தும் நிலையின் அடிப்படையில், தண்ணீர் மிகச் சரியான அளவில் பேணப்பட்டு வரவேண்டியது என்பது உணர்த்தப்படுகின்றது. மனித உடலின் அரைப்பகுதிக்கு மேற்பட்டவை தண்ணீரினாலேயே படைக்கப்பட்டிருப்பதனால், அது இல்லாதபட்சத்தில், சில நாட்களிலேயே மனிதன் மரணமடைந்து விடும் நிலையுள்ளது. தண்ணீர், உலகின் மிக முக்கியமான இரண்டாவது மூலக்கூறும் விண்மீன்களின் வடிவமைப்புக்கான அடிப்படையுமாகும். உலகின் பல சமயங்களிலும் தண்ணீர் மத்திய பங்கு வகிப்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே, தண்ணீரின் தேவையானது மனிதர்களினாலோ, ஏனைய உயிரினங்களினாலோ தவிர்க்க முடியாத ஒன்று.

புவி மேற்பரப்பில் 71% ஆனவை தண்ணீராகும். சமுத்திரங்களே இத்தண்ணீரை மிக அதிகளவில் தேக்கி வைத்திருக்கும் பிரமாண்டமான பகுதியாக விளங்குகின்றன. 332,500,00 கடல்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

மைல் (1,386,000,000 கடல் கிலோமீற்றர்) அளவு கொண்ட உலகின் மொத்த நீர்ப்பரப்பில், 321,000,000 கடல் மைல் (1,338,00,00 கடல் கிலோமீற்றர்) அளவு நீரானது சமுத்திரங்களிலேயே தேங்கியுள்ளது. இது மொத்த நீர்ப்பரப்பில் 96.5% ஆகும். ஏனைய ஆறுகள், ஏரிகள், குளங்கள், வாய்க்கால்கள், கிணறுகள் முதலான நீர்த்தேக்கங்களிலுள்ள மொத்த நீர்ப்பரப்பு வெறும் 3.5% மட்டுமே. (ஒரு கடல் மைல் அளவு தண்ணீர் என்பது, ஒரு ட்ரில்லியன் கலன் தண்ணீரின் அளவுக்குச் சமமானது)

இற்றைக்கு 125,000 வருடங்களுக்கு முன்பு சமுத்திரப் பரப்பானது தற்போதுள்ளதை விட 5.5 மீற்றர் உயர்வாக இருந்தது. மூன்று மில்லியன் வருடங்களுக்கு முன்னால் சமுத்திரப் பரப்பானது, தற்போதுள்ளதை விட 50 மீற்றர் உயரமாக இருந்தது. கடைசி பனி யுகத்தின் போது, சமுத்திரப் பரப்பானது, தற்போதுள்ளதை விட 122 மீற்றர் தாழ்ந்து இருந்தது. சமுத்திரத்தின் நீர்ப்பரப்பு காலத்திற்குக் காலம் மாறுபட்டு வந்துள்ளதை இத்தரவுகள் தெரிவிக்கின்றன. சமுத்திரங்களிலுள்ள பனிப்பாறைகள் உறைதல், உருகுதல் ஆகிய இரு செயற்பாடுகளுமே சமுத்திரப் பரப்பின் அளவில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

நீரானது, தரத்தின் அடிப்படையில் நந்நீர், உவர் நீர் என இருவகைப்படுகின்றது. சமுத்திர நீர் உவர் நீர் எனவும், நிறம், மணம், சுவை எதுவுமற்ற நீர் நந்நீர் எனவும் அழைக்கப்படுகின்றது. உலகின் மொத்த நீர்ப்பரப்பில் 96% ஆனவை உவர் நீராகும். ஏனைய 4% ஆனவையே நந்நீர். இந்நந்நீரில் 68% ஆனவை பனிக்கட்டிகளாக உறைந்துள்ளன. 30% ஆனவை நிலக்கீழ்மட்டத்திலுள்ளன. ஏனைய 2% ஆனவையே ஏரிகள், குளங்கள், கிணறுகள் முதலான நிலமேற்புற நீர்த்தேக்கங்களில் சேமிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சேமிக்கப்பட்டுள்ள நீர் சுமார் 22,300 கடல் மைல் (93,100 கடல் கிலோமீற்றர்) அளவுடையது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மனிதர்கள் அதிகம் நந்நீருக்காகப் பயன்படுத்துவது இவ்வகை நீரே என்பது குறிப்பிடத்தக்கது.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

## *02) இஸ்லாத்தின் கருத்தியல்*

*இந்த உண்மைகளின் பிரகாரம், மனித வாழ்வுக்குத் தேவையான அனைத்து வழிகாட்டல்களையும் வழங்கியுள்ள புனித மார்க்கமான இஸ்லாமும், அதன் புனித வேதமான அல்குர்ஆனும் தண்ணீரின் அறிவியல் இயல்பையும், முக்கியத்துவத்தையும், அது பயன்படுத்தப்பட வேண்டிய பொருத்தமான முறைகளையும் தெளிவாக எடுத்துரைத்து, மாசுபடுத்தும் நடவடிக்கைகளைத் தவிர்த்து அதனை முறையாகப் பாதுகாக்கும் படியாகவும், எதிர்கால சந்ததியினருக்கும் பயன்படும் வகையில் அதனை உபயோகிக்கும் படியாகவும் வற்புறுத்திக் கூறிக் கொண்டிருக்கின்றன.*

*தண்ணீர் தொடர்பாக, அல்குர்ஆன், பல்வேறு சிந்தனைகளையும் கருத்தியலையும் முன்வைத்துள்ளது. தண்ணீரின் இயல்பு, சிறப்பு, பண்புக்கூறு, பயன்படுதன்மை போன்ற தலைப்புகளின் கீழ், அது பற்றிய விளக்கத்தை, அல்குர்ஆன் முன்வைத்துள்ளது. இவ்வகையில், தண்ணீர் பற்றிய அல்குர்ஆனின் கருத்தியலாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம்;*

*1. உயிரினங்களின் சிருஷ்டிப்பு*

*2. புவியின் செழிப்பு*

*3. சுத்திகரிப்பு*

*4. வீரிய இயல்பு*

*5. அபிவிருத்திக்கான மூலப்பொருள்*

*6. சுவர்க்கவாசிகளுக்கான அன்பளிப்பும் நரகவாசிகளுக்கான தண்டனையும்*

*7. அழியாத, குறையாத சொத்து*

*8. தண்டிப்பதற்கான கருவி*

### *02.1 உயிரினங்களின் சிருஷ்டிப்பு*

*புனித அல்குர்ஆனின் 86:5,6ஆம் வசனங்கள், நீரிலிருந்தே மனிதர்கள் சிருஷ்டிக்கப்பட்டதாகக் குறிப்பிடுகின்றன. இங்கு நீர் எனச் சுட்டப்படுவது விந்துத் திரவத்தைக் குறிக்கின்றது என்பது பொதுவான கருத்தாகும். ஆணிலிருந்து வெளிப்படும் இத்திரவம்*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

பெண்ணின் கருப்பையில் செலுத்தப்பட்ட பின், இரத்தக் கட்டியாக, பின் மாமிசத்துண்டாக, பின் எலும்புகளாக, பின் தசையினால் போர்த்தப்பட எலும்புகளாக, பின் உயிராக, படிப்படியான முறையில் வளர்ச்சி அடைந்து, உலகில் ஓர் உயிரினமாக வெளிப்படுகின்றது. இச்செயற்பாட்டையே மேற்குறிப்பிட்ட வசனம் தெளிவுபடுத்துகின்றது.

அதேவேளை, இவ்வசனம், மற்றொரு அறிவியல் கருத்தையும் தன்னுள் பொதிந்துள்ளதை ஆய்வாளர்கள் நிறுவியுள்ளனர். அதாவது, மனித உடலின் பெரும்பாலான பகுதிகள் தண்ணீரினாலேயே உருவாக்கப்பட்டுள்ளன. உத்தேசமாக, மூளையின் 90% ஆன பகுதி, இரத்தத்தின் 85% ஆன பகுதி, இதயத்தின் 75% ஆன பகுதி, தசையின் 70% ஆன பகுதி, எலும்புகளின் 22% ஆன பகுதி முதலானவை தண்ணீரினாலேயே உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, தண்ணீரின் மூலமாக உடல் பெறுகின்ற நன்மைகளும் பயன்பாடுகளும் மிக அதிகமாகும். நுரையீரல் திசுக்கள் ஈரத்தன்மையாக இருக்கும் போது, அவை பிராணவாயுவை உள்ளிழுத்து, கரியமில வாயுவையும் நீராவிக் கழிவுகளையும் உடலிலிருந்து வெளியேற்றி விடுகின்றன. அஜீரணம், மற்றும் காசநோய் அறிகுறிக்கான ஆபத்துகள் முதலானவை போதுமான தண்ணீர் அருந்துவதன் மூலம் குறைக்கப்படுகின்றன. அருந்தும் தண்ணீர் அதிகரிக்க அதிகரிக்க, இத்தகைய உடலியல் ஆபத்துகளின் சாத்தியமும் நீங்கி விடுகின்றது. உடலிலுள்ள ஒவ்வோர் அணுவும் உயிர்வாழ்வதற்குத் தண்ணீர் அவசியமாகும். சுவாசம், உணவு, தோல்களிலும் தலை முடிகளிலும் பயன்படுத்தும் பல்வேறு உற்பத்திப் பொருட்களில் அடங்கியுள்ள இரசாயன மூலகங்கள் போன்றவற்றினூடாக மனிதர்களின் உடலில் சேர்கின்ற ஆபத்தான நச்சுக் கிருமிகளை மிகச் சாதுரியமாக அகற்றி விடும் திறன் கொண்டது தண்ணீர். அது எலும்பு மூட்டுகளுக்கு வலுவையும், உடலுறுப்புகளுக்கு அழகையும் சேர்ப்பதோடு, உடலிலுள்ள உயிரணுக்களுக்குப் பிராணவாயுவையும் ஊட்டச்சத்தையும் கொண்டு சேர்க்கவும், மேலதிகமான உடலின் எடையைக் குறைக்கவும் உதவுகின்றது. எடைக்குறைப்புக்கு தண்ணீரை விடச் சிறந்த மருந்து இல்லை என்பது அறிவியலாளர்களின் ஏகோபித்த முடிவாகும்.

உடல் உஷ்ணத்தை முறையாகப் பேணுவதிலும் தண்ணீர் அதிக பங்களிப்பை நல்குகின்றது. உடலிலுள்ள கழிவுகளை அகற்றுவதற்கும், உடலின் படிப்படியான வளர்ச்சி மாற்றச்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

செயற்பாடுகள் உரிய முறையில் இயங்குவதற்கும் தண்ணீர் அவசியமானது. குறிப்பாக, எடைக்குறைப்பின் போது உடலிலிருந்து அதிக கழிவுகள் வெளியேறுகின்றன. அவற்றை முழுமையாக அகற்றி உடலுக்கு ஆரோக்கியத்தை வழங்குவதற்கு தண்ணீர் மிக இன்றியமையாதது.

உடலின் இயல்பான தண்ணீர்க் கொள்ளளவை முறையாகப் பேணி வருவது உடல் ஆரோக்கியத்திற்கு அவசியமானது. உடலில் நீர்த்தன்மை குறைந்து விடும் போது, இரத்த அழுத்தம், சிறுநீர்க் கோளாறுகள், இரத்தம் உறைதல், தலைவலி, மாரடைப்பு போன்ற பல நோய்களுக்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. உடலில் தோன்றும் பல்வேறு நோய்களை எதிர்த்து நிற்கும் ஆற்றலும் தண்ணீருக்குண்டு. தண்ணீர், உடலின் அதிக பசியைக் கட்டுப்படுத்துவதோடு, மேலதிக கொழுப்புகளை அகற்றுவதற்கும் உதவுகின்றது. தண்ணீர் அருந்துவது குறையும் போது, உடலில் தேவையற்ற கொழுப்பு அதிகரிக்கின்றது; தண்ணீர் அருந்துவது அதிகரிக்கும் போது உடலில் தேவையற்ற கொழுப்பு குறைவடைகின்றது என்பது அண்மைக்கால கண்டுபிடிப்பாகும்.

சிறுநீரகம், உடலில் போதிய தண்ணீர் இல்லாதவிடத்து உரிய செயற்பாட்டை நிகழ்த்த இயலாததாகி விடுகின்றது. சிறுநீரகம் சரியாக இயங்காத போது, அதன் சுமைகளெல்லாம் கல்லீரலுக்குள் கழிவுகளாகக் கொட்டப்படுகின்றன. இதனால், தேங்கியுள்ள கொழுப்புகளைச் சக்தியாக மாற்றுகின்ற கல்லீரலின் அடிப்படைச் செயற்பாடு பாதிக்கப்படுகின்றது. மேலும், கொழுப்புகள் அதிகளவில் தேங்கி, எண்ணற்ற நோய்க்காரணிகளையும் பலவீனங்களையும் உடலுக்கு ஏற்படுத்தி விடுகின்றன. தண்ணீர், நீரிழிவு நோய்க்கு மிகச் சிறந்த மருந்தாகும். உடல் நீர்த்தன்மையை இழந்து கொண்டிருக்கும் போது, உட்செலுத்தப்படும் தண்ணீர் இவ்விழப்பை ஈடுசெய்வதற்கு, அல்லது நிறுத்துவதற்கு முயற்சிக்கின்றது. மேலும், உடலின் தசைநார்களில் ஏற்படும் நீர்க்கசிவைத் தடுத்து அவற்றின் உறுதியைப் பேணுவதற்கும் தண்ணீர் பயன்படுகின்றது.

மிகக் குறைந்தளவான தண்ணீரே உடலுக்குக் கிடைக்கும் போது, பெருங்குடற்பகுதிகளில் ஏற்படும் வறட்சி மலச்சிக்கலை ஏற்படுத்துகின்றது. இதனால், மலச்சிக்கலை நீக்குவதற்கு மிகச் சிறந்த மருந்து தண்ணீரேயாகும். தண்ணீர், சூடாகவோ குளிராகவோ அருந்தப்படுவது வழக்கம். சுடுநீரானது,



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் அதேவேளை, குளிர்நீரானது, உடல் அழற்சியையும் இரத்தக் கொதிப்பையும் குறைக்கின்றது. எனவே, ஆரோக்கியம், உடலுறுதி, அழகு, எடைக்குறைப்பு, நோயெதிர்ப்பு முதலான பல நன்மைகளுக்காகத் தண்ணீரை அருந்த முடியும். தண்ணீரினால் உருவாக்கப்பட்ட உயிரினங்கள், தண்ணீருடன் நெருக்கமான தொடர்புற்று இருப்பதன் மூலம் எண்ணற்ற நன்மைகளை அடைந்து கொள்ள முடிகின்றது. இவ் ஆழமான அறிவியல் நுணுக்கங்களை, மேற்குறிப்பிட்ட வசனம் இரத்தினச் சுருக்கமாகச் சுட்டிக் காட்டியுள்ளமை விதந்துரைக்கத்தக்கதாகும்.

## 02.2 புவியின் செழிப்பு

பூமி படைக்கப்பட்டதன் பின்னால் அதன் உலர்ந்த நிலப்பரப்பைச் செழிப்பாக்குவதற்காகத் தண்ணீர் அனுப்பப்பட்டதாகவும், தண்ணீரே வாழ்க்கையின் அடிப்படை என்றும், உலக இருப்பு தண்ணீரை மையமாகக் கொண்டே நிறுவப்பட்டுள்ளது என்றும் அல்குர்ஆனின் 33 திருவசனங்கள் தெளிவாக விபரித்துள்ளான்.

இன்று, மனித சமூகம், கோள்களைக் கண்டுபிடிக்கும் தமது முயற்சிகளின் போது, முதலில் அங்கு தண்ணீரின் இருப்பு பற்றியே ஆராய்கின்றது. செவ்வாய்க் கிரகம் பற்றிய புதிய ஆராய்ச்சிகள், மிக நீண்ட காலத்துக்கு முன்பு அக்கிரகத்தின் நிலமேற்பரப்பில் ஆறுகள் இருந்தமைக்கான சான்றுகள் இருப்பதாகத் தெரிவிக்கின்றன. இவ்வாறு, செவ்வாய்க் கிரகத்திலும் ஏனைய கிரகங்களிலும் உயிரினங்கள் வாழ்வதற்கான சாத்தியப்பாடு, தண்ணீரின் இருப்பைப் பொறுத்தே விஞ்ஞானிகளால் தீர்மானிக்கப்படுகின்றது.

சூரியக் குடும்பத்திலுள்ள கிரகங்களில் எமது புவிக்கிரகம் ஒன்றே, தன் நிலமேற்பரப்பில், மகாசமுத்திரங்கள் வழியாக அதிக தண்ணீரைக் கொண்ட கிரகமாகும். புவியின் நீண்ட வரலாறானது எப்போதும் சமுத்திரங்களுடனேயே மிக நெருக்கமாக இருந்து வந்துள்ளது. இந்த சமுத்திரங்களே புவி மேற்பரப்பின் இன்றியமையாத பல நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தியும் ஒழுங்குபடுத்தியும் வருகின்றன. புவியில் மழையாகவோ பனியாகவோ வெளிப்படும் தண்ணீரின் உற்பத்திமூலமும் இந்த சமுத்திரங்களேயாகும். தண்ணீரின் அதிக உஷ்ணக் கொள்ளளவின்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*பிரகாரம், சமுத்திரங்களே புவியின் காலநிலையைத் தீர்மானிக்கும் பிரதான சக்தியாக விளங்குகின்றன.*

*தண்ணீர், வளி என்பவற்றைத் தவிர்த்து இயற்கையான இரசாயன மூலப்பொருட்கள் புவியில் வேறெவையும் இல்லை. அவ்வாறே, தண்ணீரைப் போல், புவியின் பௌதீகச் சூழலின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்ற எந்த மூலப்பொருளும் உலகில் இல்லை. அதன் திரவ ஆவி வெப்பக் கதிர்களை உறிஞ்சி, சூழலுக்குப் பொருத்தமான வெப்பச் சமநிலையை வழங்குகின்றது. தன் திரவ வடிவில், தண்ணீரானது மண்ணரிப்பை ஏற்படுத்தும் அதேவேளை, புவிக்கு அதன் கோளவடிவத்தை வழங்கி, செழிப்பான மண்ணையும் உற்பத்தி செய்கின்றது. அத்தோடு, விவசாய உற்பத்தி முயற்சிகளின் விளைவாகத் தோன்றும் இரசாயனக் கழிவுப் பொருட்களையும் அகற்றுகின்றது. நீண்ட காலமாக, கழிவுகளை அப்புறப்படுத்தும் சிறந்த கருவியாகவும் தண்ணீரே தொழிற்பட்டு வருகின்றது.*

*உற்பத்தி, மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திகளின் விளைவாக நிலமேற்பரப்பும் அதன் கீழுள்ள நீர்வளமும் மாசுபடுத்தப்படும் என்பதையும், இந்நிலையின் தொடர்ச்சியானது பிற்காலத்தில் பல்வேறு சூழலியல் அனர்த்தங்களுக்குக் காரணமாயமையும் என்பதையும் எல்லாம் வல்ல அல்லாஹ் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே குறிப்பிட்டுச் சொல்லி விட்டான். உலகின் பல பாகங்களிலும் உள்ள வறட்சி, அதிகரித்து வரும் தண்ணீர்த் தேவை என்பன, இன்றியமையாத மூலப்பொருளான இந்தத் தண்ணீர் பற்றி ஆழமாகச் சிந்திக்கவும், அதற்கான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவும் மனிதர்களை நிர்ப்பந்தித்து வருகின்றன. உலகின் பல நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற நிலக்கீழ்மட்டத் திட்டங்கள் தண்ணீரைப் பயன்படுத்துவதில் சரியானதும் பொருத்தமானதுமான வழிமுறையைக் கையாள்வதில் அக்கறையாகச் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.*

### *02.3 சுத்திகரிப்பு*

*புனித அல்குர்ஆனின் 04:43, 05:06ஆம் வசனங்கள், தண்ணீரை, அழுக்குகளை நீக்கிச் சுத்தப்படுத்துவதற்காகவும், தொழுகையை நிறைவேற்றுவதற்குத் தம்மைத் தயார்படுத்துவதற்காகவும் பயன்படுத்துமாறு விசுவாசிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கின்றன.*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

தண்ணீர், அதன் பௌதீக இரசாயனப் பண்புக்கூறுகளின் அடிப்படையில் அற்புதமான சுத்திகரிப்புப் பொருளாகும். அதன் முக்கியமான பண்புகளில் ஒன்று, அது மிகச் சிறந்த கலவைத் திரவமாகத் தொழிற்படுவதாகும். ஏனெனில், தண்ணீருடன் எத்தகைய செயற்கை இரசாயனப் பதார்த்தங்களைக் கரைத்தாலும் தண்ணீரின் இயல்பான இரசாயனப் பண்புக் கூறுகளில் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை. இந்நிலையே, கழிவுகளை அகற்றிச் சுத்தப்படுத்துவதற்கு, தண்ணீரை விடச் சிறந்த எப்பொருளும் இல்லை என்பதை நிறுவியுள்ளது.

விஞ்ஞான, தொழில்நுட்பங்களின் அபரிமிதமான வளர்ச்சிக்குப் பின்னாலும், உலகெங்குமுள்ள மனிதர்கள் அனைவரும் ஆர்வத்துடன் பயன்படுத்தும் பிரதான சுத்திகரிப்புப் பொருளாக தண்ணீரே நிலைபெற்றுள்ளமை அதன் அசாத்தியச் சுத்திகரிப்புத் திறனுக்குச் சான்றாக விளங்குகின்றது. தண்ணீருக்கு மாற்றீடான எந்தவொரு சுத்திகரிப்புப் பொருளையும் விஞ்ஞானிகளால் இதுவரை அறிமுகப்படுத்த முடியவில்லை. எனவே, இற்றைக்குப் பல்லாண்டுகளுக்கு முன்னாலேயே, தண்ணீரை பிரதானமான சுத்திகரிப்புப் பொருளாக பிரகடனப்படுத்தி விட்ட அல்குர்ஆனின் ஆழ்ந்த ஒப்பற்ற ஞானத்தையிட்டு முஸ்லிம்கள் பெருமிதப்பட்டுக் கொள்ள முடியும்.

## 02.4 வீரிய இயல்பு

புனித அல்குர்ஆனின் 02:74ஆம் வசனம், இறுக்கமான இதயம் கொண்ட மனிதக் குழுவொன்றைப் பற்றி விபரிக்கையில், பாய்ந்தோடும் நீரை உதாரணமாகக் குறிப்பிடுகின்றான். அவ்வசனத்தில், 'பாறைகளிலிருந்தும் கற்களிலிருந்தும் ஆறுகளும் அருவிகளும் உற்பத்தியாகின்றன; ஆனால், சில மனிதர்களது உள்ளங்கள் அந்தப் பாறைகளை விடவும் கடினமானவை' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வசனத்திலிருந்து அறிவியல், ஒழுக்கவியல் சார்ந்த இரு முக்கிய அம்சங்களை அடையாளப்படுத்த முடிகின்றது:

**அ) அறிவியல் அம்சம்:**

தண்ணீர், உறையும் போது அதன் கொள்ளளவு அதிகரிப்பது போல், அது பனிக்கட்டியாகி விடும் போது அதன் அடர்த்தி குறைந்து விடுகின்றது. இந்த அற்புத நிகழ்வே, பனிக்கட்டி



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*தண்ணீரில் மிதப்பதற்கான காரணமாகும். இந்தத் திறன் மூலமாகவே, தண்ணீரானது கற்கள், மற்றும் பாறைகளின் வெடிப்புகளிடையே ஊடுருவி அதனுள்ளிருந்தவாறு பனிக்கட்டியாக மாறிவிடுகின்றது. அத்தோடு, நிலக்கீழ்மட்ட நீரானது, வண்டல் பாறைகள் உட்பட, எதிரே வருகின்ற அனைத்து மூலகங்களையும் கரைத்து விடும் திறன் கொண்டது. இச்செயற்பாடு, சில இடங்களில், பாறைகளினதும் கற்களினதும் மத்தியிலிருந்து தண்ணீர் சூடாகி வெளியேறக் காரணமாகவும் அமைகின்றது. தண்ணீரின் இவ் அற்புதத் திறனையே மேற்கண்ட அல்குர்ஆன் வசனம் சுட்டிக்காட்டுகின்றது.*

***ஆ) ஒழுக்கவியல் அம்சம்:***

*இவ்வசனம், பெரும்பாலும், பாவ காரியங்களினதும் தீயொழுக்கங்களினதும் பாதிப்புகளைச் சுட்டிக் காட்டுவதாகவும் அமைகின்றது. பாவங்களினால் தோன்றும் பாதிப்புகளில் மிகப் பெரியது, மனிதர்களுக்கு ஏற்படுகின்ற இதய இறுக்க நிலையாகும்.*

*மேலும், இவ்வசனம் மனிதர்களுக்கு முக்கியமான முன்னெச்சரிக்கையை விபரிப்பதோடு, அல்லாஹ்வுக்கு அடிபணியாத பாவிகளின் கெட்ட முடிவு பற்றியும் தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளது.*

## *02.5 அபிவிருத்திக்கான மூலப்பொருள்*

*புனித அல்குர்ஆனின் 02:22, 06:99, 72:16 ஆகிய வசனங்கள், சுவர்க்கத்திலிருந்து வரவழைக்கப்பட்ட ஓர் அன்பளிப்புப் பொருள் எனத் தண்ணீரை அறிமுகப்படுத்துகின்றன. மேலும், அது அருளுக்குரியது என்றும், மனிதர்களின் ஜீவனோபாயத்திற்கான பிரதான மூலப்பொருள் என்றும் பிரகடனப்படுத்துகின்றன.*

*இன்று, நிலக்கீழ்மட்ட நீரைப் பாதுகாப்பதற்கான பல்வேறு முறைகள் இருக்கும் போதிலும், உலகெங்குமுள்ள பெரும்பாலான மனிதர்கள், தண்ணீரின் பிரதான மூலப்பொருள் வானத்திலிருந்து கொட்டுகின்ற மழை என்றே இன்று வரையும் கருதி வருகின்றனர். செயற்கை மழையை உருவாக்குதலானது, இத்தகைய நோக்கத்தை அடைவதற்குரிய மனித முயற்சிக்கான உதாரணம் எனவும் நம்பப்படுகின்றது. மேற்கூறப்பட்ட வசனத்தில், மனிதர்கள் தமது வாழ்க்கைச் சூழலிலிருந்து, தமக்குத் தேவையான தண்ணீரைத்*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*தேடிப் பெற வேண்டியது அவசியமானது என்பது சுட்டிக் காட்டப்படுகின்றது. அதாவது, தண்ணீர் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பதும், அது அபிவிருத்திப் பணிகளின் போது பிரதானமானதாகக் கைக்கொள்ளப்பட வேண்டியது என்பதும் இவ்வசனத்தில் அறிவூட்டப்படுகின்றன.*

### *02.6 அன்பளிப்பும் தண்டனையும்*

*புனித அல்குர்ஆனின் 07:50, 14:16, 56:68, 18:29, 47:15 ஆம் வசனங்கள் சுத்தமான தண்ணீரின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிடுவதோடு, அத்தகைய தண்ணீர் மறுமையில் சுவர்க்கவாசிகளுக்கு அன்பளிப்பாக வழங்கப்படுமென்றும், நரகவாசிகளுக்கு அது தடுக்கப்பட்டு அதன் மூலம் தண்டனை வழங்கப்படுமென்றும் சுட்டிக் காட்டியுள்ளன. இவ்வசனங்களில், இறைவனின் கொடைகளில் ஒன்றான தண்ணீரின் மதிப்பு பிரகடனப்படுத்தப்படுவதோடு, அது சுவர்க்கவாசிகளுக்கு வழங்கப்படும் வெகுமதிகளுள் ஒன்றெனவும் அறிமுகப்படுத்தப்படுகின்றது. எனவே, வரையறுக்கப்பட்ட வளமாகிய இந்தக் குடிநீரைப் பாதுகாத்து பத்திரப்படுத்துவதற்காகவும், அதை மாசுபடுத்தும் நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்வதற்காகவும் முயற்சிப்பது ஒவ்வொருவர் மீதுமுள்ள அவசியக் கடமையாகும்.*

### *02.7 அழியாத, குறையாத சொத்து*

*புனித அல்குர்ஆனின் 13:17 ஆம் வசனம், தண்ணீர், உலகில் எப்போதும் நிலைத்திருக்கக் கூடியதும், அளவு தீர்மானிக்கப்பட்டதுமான ஒப்பற்ற வளம் என்பதாகக் குறிப்பிடுகின்றான். அதேவசனத்தில், தண்ணீரின் சுற்றுவட்டச் செயற்பாடும் சுட்டிக்காட்டப்படுகின்றது. நீரியல் ஆய்வாளர்கள், நீரின் சுற்றுவட்டச் செயற்பாடு* (Water Cycle) *என அழைக்கப்படும், இயற்கையில் உள்ள நிரந்தரமான நீரின் தொடர்நிலைச் செயற்பாடு பற்றி ஆதாரபூர்வமாக நிறுவியுள்ளனர். நீர்ச் சுற்றுவட்டமானது, ஆரம்பப் புள்ளி அற்ற ஒரு அற்புதமான செயற்பாடாகும். நீர்ச் சுற்றுவட்டத்துக்குப் பிரதான காரணமாக உள்ள சூரியன், சமுத்திரங்களிலுள்ள நீரை உஷ்ணப்படுத்துகின்றது. அதன் மூலம் நீராவியை உற்பத்தியாக்கி வளிமண்டலத்துக்கு அனுப்புகின்றது. பனி, பனிக்கட்டி என்பன வெப்பமுறும் போது, நேரடியாகவே நீராவியாகி விடுகின்றன.*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

மண்ணிலிருந்து ஆவியாகிச் செல்லும் தண்ணீருடனும், தாவரங்கள் வெளிச்செலுத்தும் ஈரத்தன்மையுடனும் இணைந்து, நீராவி, வாயு மண்டலத்துக்கு உயர்கின்றது. அது மேலும் உயர்ந்து, வளிமண்டலத்தின் குளிர்ப் பிரதேசத்தை அடைகின்ற போது, இறுக்கமுற்று முகிலாக மாறிவிடுகின்றது. வளியானது முகில் கூட்டங்களை துண்டு துண்டாகப் பிரித்து நகர்த்துகின்றது. முகில் கூட்டங்கள் ஒன்றுடனொன்று மோதுகின்றன. பின் குளிர்மையுற்று, பரிமாணமுற்ற துகள்களாக ஆகாயத்திலிருந்து கீழ்நோக்கி விழுகின்றன. சில துகள்கள் பனியாக விழுந்து உறைந்து, பனிக்கட்டியாகவும் பனிப்படலமாகவும் குவிக்கப்படுகின்றன. இவற்றில் சில பல்லாயிரம் வருடங்களாக அதே உறைபனி நிலையில் இருந்து விடுகின்றன. சில துகள்கள், சமுத்திரங்களிலும் கடல்களிலும் தண்ணீராக விழுகின்றன. பின் அவை மீண்டும் உஷ்ணப்படுத்தப்பட்டு நீராவியாகின்றன. இத்தொடர் செயற்பாடே நீரின் சுற்றுவட்டச் செயற்பாடு எனப்படுகின்றது. நாளொன்றுக்கு 280 மில்லியன் கடல் மைல் அளவு நீர் ஆவியாகி முகிலாக மாற்றமுறுகின்றது என நீரியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வளிமண்டலத்திலிருந்து நீராவி முற்றாக வெளியேறிச் சென்று விடுவதற்கான துவாரங்கள் எவையும் புவியின் மேற்புறத்தில் இல்லை என்பதை இன்றைய நவீன அறிவியலும் ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே, ஆவியாகிச் செல்லும் தண்ணீர் மீண்டும் புவிக்கே திரும்பி வருகின்றது. அவ்வாறில்லாது, நீராவி வளிமண்டலத்திலிருந்து தொடர்ந்து வெளியேறி புவிக்குத் திரும்பாதிருக்குமானால், வளி, மற்றும் தண்ணீர் என்பவற்றில் கடுமையான பஞ்சம் தோன்றும். வறட்சியை எதிர்கொள்ள முடியாமல் எல்லா உயிரினங்களும் படிப்படியாக அழிந்து விடும். ஆனால், இத்தகைய சகலவித அபாயங்களுக்கும் சாத்தியமின்றி, புவியில் தண்ணீரின் மொத்தக் கொள்ளளவும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது. உலகில் மனிதர்களிலோ மிருகங்களிலோ எத்தகைய சனத்தொகைப் பெருக்கம் ஏற்பட்டாலும் ஈடு செய்ய முடியுமான அளவில் தண்ணீரின் அளவு நிர்ணயிக்கப்பட்டு, அது சுற்றுவட்டச் செயற்பாட்டினூடாக முறையாகப் பேணப்பட்டும் வருகின்றது. எனவே, திரவமாக, பனிக்கட்டியாக, நீராவியாக பல வடிவங்களில் புவியின் மேற்புறத்திலும் நிலக்கீழ் மட்டத்திலுமாக உலகில் செறிந்துள்ள தண்ணீரின் மொத்தக் கொள்ளளவு எப்போதும்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

அதிகரிக்காமலும் குறைவடையாமலும் ஒரே அளவில் இருந்து வருகின்றது. மிக அற்புதமானதும் நுணுக்கமானதுமான இந்தத் திட்டமிடல் பற்றிய விபரங்கள் மேற்கூறப்பட்ட வசனத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 02.8 பாவிகளைத் தண்டிப்பதற்கான கருவி

புனித அல்குர்ஆனின் 54:11,12, 69:11ஆம் வசனங்கள், இறைத்தூதர் நூஹ் (அலை) அவர்களின் கூட்டத்தினர் போன்ற, இறைகட்டளையை அத்துமீறி நடந்த மக்கள் தண்ணீரின் மூலம் முற்றாக அழிக்கப்பட்டதாகக் குறிப்பிடுகின்றன. உயிர்களுக்கான ஆதாரமாகவும், வாழ்க்கையின் இன்றியமையாத் தேவையாகவும் உள்ள தண்ணீர் எனும் இப்பெரும் கொடை, மற்றொரு வகையில், பாவிகளைத் தண்டிப்பதற்கான கருவியாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது இங்கு அறிவுறுத்தப்படுகின்றது.

## 03) தண்ணீர்ப் பாவனையின் போது அவதானிக்க வேண்டியவை

“இவ்வுலகம், மறுவுலகம் இரண்டிலும் சிறந்த பானம் தண்ணீராகும். அதிலும் பூமியின் மேற்புறத்தில் ஓடும் தண்ணீரே சிறந்தது” என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். தண்ணீர் உணவல்ல; எனினும், அது ஜீவராசிகள் அனைத்தையும் உயிர்ப்பிக்க வல்லது. அது இல்லையெனில், உணவுமில்லை; உயிருமில்லை எனுமளவு அது முக்கியத்துவம் மிக்கது.

தண்ணீர், உலகின் பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. அது மிக அத்தியாவசியமான தேவையும் எண்ணற்ற பயன்பாடுகள் உடையதுமாய் இருக்கும் போதிலும், உரிய முறையில் உபயோகிக்கப்படும் போதே அதன் பயன்பாடு முழுமையாக வந்தடைகின்றது. அன்றேல், தண்ணீர், பலவழிகளில் உயிரினங்களுக்குத் தீங்கிழைக்கும் ஒன்றாய் மாறி விடுகின்றது. இவ்வகையில், தண்ணீர்ப் பாவனையின் போது அவதானமாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறைகளை இஸ்லாம் அடையாளப்படுத்தியுள்ளது. அவற்றுள் குறிப்பிடத்தக்கவையாக பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டலாம்:



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

***1. உட்கார்ந்த நிலையில் நீரருந்துதல்:***

*நின்று கொண்டே குடிப்பதையும், உண்ணுவதையும் நபி (ஸல்) அவர்கள் வெறுத்திருக்கிறார்கள். அது மிகவும் தீங்கு தரவல்லது என்றும், நீரிழிவு, வயிற்று வலி போன்ற நோய்கள் ஏற்படுவதற்குக் காரணமாய் அமையும் என்றும் எச்சரித்துள்ளார்கள். நின்று கொண்டோ படுத்துக் கொண்டோ நீரருந்துவதால் இரைப்பையும் நரம்புகளும் பலவீனமடைகின்றன என்பது அண்மைக்கால மருத்துவவியலாளர்களின் கண்டுபிடிப்பாகும்.*

***2. நீர்ப்பாத்திரங்களை மூடி வைத்தல்:***

*நீர், மற்றும் உணவு உள்ள பாத்திரங்களை மூடி வைத்திருக்க வேண்டும் என்பது நபி (ஸல்) அவர்களின் கண்டிப்பான அறிவுறுத்தலாகும். இது, வளியில் மிதக்கின்ற நோய்க் கிருமிகள் தூசுகள் உணவுடன் கலப்பதிலிருந்து தடுத்து விடுவதால் எண்ணற்ற நோய்களிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கின்றது.*

***3. ஒரே மூச்சில் குடிப்பதைத் தவிர்த்தல்:***

*“ஒட்டகம் குடிப்பதைப் போன்று ஒரே மூச்சில் எந்தப் பானத்தையும் அருந்தாதீர்கள்; இரண்டு அல்லது மூன்று தடவைகளாக மூச்சுவிட்டுக் குடியுங்கள்” என்று நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தியிருக்கின்றார்கள். அவ்வாறே அண்ணாந்து குடிக்காதீர்கள் என்றும் கூறியிருக்கின்றார்கள். ஒரே மூச்சில் நீரைப் பருகுவதனால் நெஞ்சு வலி ஏற்படுமென்றும், அண்ணாந்து பருகுவதனால் ஈரல் வலி உண்டாகுமென்றும் மருத்துவ அறிஞர்கள் கூறியுள்ளனர்.*

***4. நீரில் மூச்சு விடுவதைத் தவிர்த்தல்:***

*நீருள்ள பாத்திரத்தில் மூச்சுவிடுவதையும் ஊதுவதையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள். உடம்பிலுள்ள சிறுநீரகமும் நுரையீரலும்தான் கழிவுப் பொருட்களை வெளியேற்றும் முக்கிய உறுப்புகளாகச் செயல்படுகின்றன. இதில் நுரையீரலானது, வாய் மற்றும் மூக்கின் வழியாக வெளியேறும் காற்றின் மூலமாக கரியமில வாயுவையும், தோலின் நுண்ணணுக்கள் மூலமாக வியர்வையையும் வெளியேற்றுகின்றது. உண்ணப்பருகச் செய்யும் பொருட்களில் ஊதும் போது அல்லது மூச்சுவிடும் போது, இந்தக் கரியமில வாயு அந்தப் பொருட்களில் கலந்து அவை விஷமாகி,*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*குடல் சம்பந்தபட்ட வியாதிகளை உண்டுபண்ணுகிறது என்று மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர்.*

### *5. வெய்யிலில் சூடாக்கப்பட்ட நீரைத் தவிர்த்தல்:*

*ஒரு பெண்மணி வெய்யிலில் சூடாக்கப்பட்ட தண்ணீரை உபயோகிக்க எடுத்துச் சென்ற போது, நபி (ஸல்) அவர்கள் அதனைத் தடுத்து, "அது வெண்குஷ்டத்தை உண்டாக்கும்" என்று எச்சரித்தார்கள். அவ்வாறே, நெருப்பால் சூடாக்கப்பட்ட நீரையும் குளிப்பதற்கு அதிகம் உபயோகிக்கக் கூடாது. அது நரம்புத் தளர்ச்சியை ஏற்படுத்தும். "வெந்நீர் குடித்து, தண்ணீரில் குளித்து வருவதை வழமையாகக் கையாண்டு வாருங்கள்; அதனால், உடல் எப்போதும் ஆரோக்கியமாக இருக்கும்" என்று மருத்துவமேதை லுக்மான் ஹக்கீம் அவர்கள் கூறியுள்ளார்கள்.*

### *6. கொதிநீரைத் தவிர்த்தல்:*

*"மிகவும் சூடாக எதையும் உண்ணாதீர்கள்; அது கெடுதியானது. அல்லாஹ், நெருப்பை நமக்கு உணவாக்கவில்லை" என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். கொதிக்கின்ற அல்லது மிகவும் சூடான உணவுகளையும் பானங்களையும் உட்கொள்வதால், குரல்வளையில் புற்றுக்கட்டிகள் ஏற்படும்; பற்கள் கெட்டு விரைவில் ஆட்டம் கண்டுவிடும்; நாக்கின் சுவை அணுக்கள் பாதிப்படைந்து விடும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். அத்தோடு, சூடானவைகளை உட்கொண்டவுடனும், இனிப்பானவைகளை உட்கொண்டவுடனும் குளிர்ந்த நீரைக் கண்டிப்பாகக் குடிக்கக் கூடாது. அதனால், இரைப்பை கெட்டு விடும்; ஆண்மைக் கோளாறு ஏற்படும் என்பதாகவும் மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.*

### *7. பொருத்தமற்ற நேரங்களில் நீரருந்தாதிருத்தல்:*

*சைக்கிள் ஓட்டுதல், தொடர் ஓட்டம் ஓடுதல், உடற்பயிற்சி செய்தல் போன்ற மூச்சு வாங்கும் கடுமையான வேலைகளைச் செய்தவுடன் தண்ணீர் அருந்தக் கூடாது. அதனால் இதய ஓட்டம் தடைப்பட்டு மாரடைப்பு ஏற்படுவதற்கு வழிவகுக்கும். அவ்வாறே, தாம்பத்திய உறவு கொண்டவுடனும் தண்ணீர் அருந்தக் கூடாது. அதனால் நடு முதுகந்தண்டில் கடுமையான வலி உண்டாகும்; நரம்புத் தளர்ச்சி ஏற்படும். மேலும், பழங்களைச் சாப்பிட்டவுடனும், குளித்தவுடனும் தண்ணீர் அருந்தக்*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*கூடாதென்றும், கிணற்று நீரையும் ஆற்று நீரையும் கலந்து குடிப்பதும், வெந்நீரையும் தண்ணீரையும் கலந்து குடிப்பதும் உடல் நலத்தைக் கெடுத்து விடும் என்றும் இஸ்லாமிய மருத்துவ மேதைகள் விபரித்துள்ளனர்.*

***8. கலங்கிய நீரைத் தவிர்த்தல்:***

*கலங்கிய நீரைக் குடிப்பதும் அதில் குளிப்பதும் கூடாது. அதனால், ஈரல் பாதிப்படையும்; கல்லடைப்பும் ஏற்படும். அதைத் தவிர்த்து வேறு தண்ணீர் இல்லையென்றால், நெருப்புக் கங்கு ஒன்றை அதில் இட்டு பின்பு அதைக் குடிக்க, குளிக்கச் செய்யலாம். அவ்வாறே, உப்புத்தண்ணீரில் குளிப்பதை விட நந்நீரில் குளிப்பதே உடலுக்கு அழகு தரும். திறந்த வெளியில் கிழக்குத் திசை நோக்கி ஓடும் நீர் மிக நல்லது. மேலும், கற்களில் ஈடும் நீரை விட மணலில் ஓடும் நீர் நல்லது.*

***9. மழைநீரை முக்கியத்துவப்படுத்தல்:***

*மழை நீர் மிகத் தூய்மையானது; நோய்களற்றது. வானிலிருந்து நேராக வேறு எதிலும் படாமலும் வேறு எதனுடனும் கலந்து விடாமலும் கிடைப்பதால் அது தூய்மையானதாக இருக்கின்றது. மழையினால்தான் பூமியில் பெரும்பாலான பசுமைகளும் செழிப்புகளும் தோன்றுகின்றன. மழைநீர் பல்வேறு நோய்களுக்கான நிவாரணியாக விளங்குகின்றது. இரைப்பையைச் சுத்திகரிப்பதற்கும், மலட்டுத் தன்மையைப் போக்குவதற்கும் மழை நீர் சிறந்த மருந்தாகும் என்று மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.*

***10. ஸம்ஸம் நீரைப் பயன்படுத்தல்:***

*முஸ்லிம்களின் முதன்மை வணக்கஸ்தலமான மக்காவில் அமைந்திருக்கும் கஃபா பள்ளிவாயலுக்கு அருகில் உள்ள ஸம்ஸம் கிணற்று நீர் உலகின் மிக அற்புதமான நீராகும். கொதிக்கும் பாலைநிலத்தில், சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய இது, இன்றுவரை வற்றாத ஜீவ ஊற்றாகப் பொங்கிக் கொண்டே இருக்கிறது. ஸம்ஸம் நீரைப் பரிசோதித்துப் பார்த்த நீரியலாளர்கள், உலகில் உள்ள எல்லா தண்ணீர்களும் இதில் சங்கமமாகின்றன என்றும், எல்லாச் சத்துக்களும் இதில் நிறைந்திருக்கின்றன என்றும் கூறியுள்ளனர். அமெரிக்காவிலுள்ள பிலடல்பியா ஆராய்ச்சிக் கூட விஞ்ஞானிகள், இந்த நீரை மூடி*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

போட்ட போத்தலிலும், மூடி போடாத போத்தலிலும் 14 ஆண்டுகள் வைத்துப் பரிசோதனை செய்து பார்த்தார்கள். பின்பு இதன் பரிசுத்தத் தன்மை கொஞ்சமேனும் கெடவில்லை என்றும், இன்ஜக்ஷன் இடுவதற்குப் பயன்படுத்தப்படும் நீராவித் தண்ணீரை விடவும் ஸம்ஸம் நீர் சுத்தமானது என்றும் அவர்கள் முடிவு கூறினர். எத்தனை ஆண்டுகள் வைத்திருந்தாலும், இதில் புழு பூச்சிகள் உண்டாவதில்லை. ஆண்டுகள் தோறும் புனித ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்காக உலகெங்குமிருந்து இலட்சோப இலட்சம் முஸ்லிம்கள் மக்காவில் ஒன்று கூடுகின்றனர். அவர்களெல்லாம் இந்தத் தண்ணீரைக் குடிக்கவும் குளிக்கவும் உபயோகிக்கிறார்கள். பன்னூறு குதிரைத் திறன்கள் கொண்ட பல பம்ப்செட்டுகள் மூலம் இறைக்கிறார்கள். ஆனாலும், இந்த ஸம்ஸம் நீர் கிணற்றின் அளவிலிருந்து ஓர் அங்குலம் கூட குறைவதில்லை என்பது இதன் அற்புதத்திற்கோர் எடுத்துக் காட்டாகும்.

“ஸம்ஸம் நீரை, ஒருவர் எந்த எண்ணத்துடன் அருந்துகிறாரோ அது அவருக்கு நிறைவேறும். நான் மறுவுலகில் தாகமில்லாதிருக்க இதை அருந்துவேன்” என்பதாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். பொதுவாக தண்ணீர் உணவல்ல; ஆனால், ஸம்ஸம் நீரானது உணவுக்கு உணவாகும்; நோய்களை நீக்கும் மருந்துக்கு மருந்தாகும் என்றும் நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

அதேவேளை, நோய்கள் அனைத்தையும் நீக்கும் ஸம்ஸம் நீர் ஒரு நோயை உண்டுபண்ணுவதாகவும் அமைந்துள்ளது. அதாவது, இந்த நீரில் மலசலத் துப்புரவு செய்யக் கூடாது. அவ்வாறு செய்வோருக்கு மூலவியாதி உண்டாகும் என்று மார்க்க மேதைகள் எச்சரித்துள்ளனர். இந்தத் தண்ணீரை மட்டும் நின்று கொண்டு தலையைத் திறந்தவாறு வயிறு நிறைய அருந்த வேண்டும். அதனால், உடலிலுள்ள எல்லாப் பகுதியிலும் இது சென்று சேர்ந்து நோய்கள் வராமல் தடுக்கிறது என்பது மார்க்க அறிஞர்களின் அறிவுறுத்தலாகும்.

## 04) முடிவுரை

தண்ணீர், உயிரினங்களுக்கென வழங்கப்பட்டுள்ள, இறைவனின் மிகப் பெரும் அருட்கொடையும் மூலவளமுமாகும். அது, தாகந்தீர்க்கும் பானமாக மட்டுமன்றி, இயற்கையாகக் கிடைக்கின்ற மிகச் சிறந்த ஊட்டச்சத்தாகவும் தொழிற்படுகின்றது. போதுமானளவு தண்ணீர் அருந்துவது உடலுறுப்புகளைப்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

பலப்படுத்திச் சுறுசுறுப்பாக வாழ வைக்கின்றது. காபோஹைதரேட், புரோட்டின், கொழுப்பு முதலான ஊட்டச்சத்துகளுக்கெல்லாம் முதன்மையானதாக தண்ணீர் நிலைபெற்றிருப்பது அதன் சிறப்பம்சமாகும். உடலின் உள்ளக நிலையில் மட்டுமன்றி, வெளிப்புற ஆரோக்கியம், உடலுறுதி முதலான பயன்பாடுகளுக்கும் உகந்த மூலகமாய் தண்ணீர் காணப்படுகின்றது. உடற்தோலுக்கு ஈரத்தன்மையை வழங்கி, அதன் பலவீனங்களையும் முதிர்சுருக்கங்களையும் நீக்குவதற்கும், தோலைப் பளபளப்பாக வைத்திருப்பதற்கும் தண்ணீர் மிகச் சிறந்த மருந்தாகும். உடற்பயிற்சியின் போது போதிய நீராகாரத்தை அருந்துவதால், அது இழப்புகளை உடனுக்குடன் ஈடுசெய்வதற்கும், இரத்த ஓட்டத்தைச் சீர்படுத்துவதற்கும் உதவுகின்றது. தண்ணீர் இன்றேல் சில நாட்களிலேயே உயிரினங்களெல்லாம் அழிந்து மடிந்து விடும். இத்தகைய தரவுகளின் அடிப்படையில், தண்ணீரானது, உலக வாழ்க்கைக்கு இன்றியமையாததும், அத்தியாவசியமானதுமான சர்வதேசத் தேவை என்பது தெளிவாகின்றது.

எத்தகைய நுணுக்கமான பொறியியல் திட்டமிடல் உற்பத்திகளும் பதிலீடு செய்ய முடியாத அற்புதமான வடிவில் கட்டமைக்கப்பட்டுள்ள இயற்கை வளமாகத் திகழும் இந்தத் தண்ணீர் பற்றிய இஸ்லாத்தின் கருத்தியல், உலகின் உயிரினங்கள் அனைத்திற்கும் நன்மையையும் பயன்பாட்டையும் பூர்த்தியாக வழங்கும் அறிவூட்டலாகவும், தண்ணீர் பற்றிய மிதமான ஆராய்ச்சிகளுக்கும் அவதானிப்புகளுக்கும் ஊக்குவிக்கும் வழிகாட்டலாகவும் அமைந்துள்ளது எனில் மிகையன்று.

உயிரினங்கள் அனைத்தினதும் சிருஷ்டிப்பின் மூலவஸ்து தண்ணீரே என்றும், அது அற்புதமான வீரியப் பண்புகளைக் கொண்ட அபிவிருத்திக்கான மூலப்பொருளாகவும், என்றும் அழியாததும் குறையாததுமான புவியின் சொத்தாகவும் திகழவல்லது என்றும், உலர்ந்திருந்த புவியைச் செழிப்பாக்குவதற்காக அனுப்பப்பட்ட இத்தண்ணீர், சுத்திகரிப்புப் பணிக்கான சிறந்த கருவியாகப் பயன்படக்கூடியதும், மறுமையில் சுவர்க்கவாசிகளுக்கான அன்பளிப்பாக வழங்கப்படக்கூடியதுமாகும் என்றும் தண்ணீரின் பல்வேறு இயல்புகளையும் பெறுமானங்களையும், அது பயன்படுத்தப்பட வேண்டிய ஒழுங்குமுறைகளையும் அல்குர்ஆன் மிக அறிவார்ந்த முறையில் விளக்கியுள்ளது.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*மனித வாழ்க்கை, மற்றும் உலக விவகாரங்கள் பற்றிய முழுமையான தெளிவையும் அறிவூட்டலையும் வழங்கும் புனித அல்குர்ஆன், தண்ணீர் பற்றிக் குறிப்பிட்டுள்ள அற்புதமான நவீன அறிவியல் கருத்தியல்கள் நீரியல் ஆய்வாளர்களினால் அண்மைக் காலத்திலிருந்து படிப்படியாக ஏற்றுக் கொள்ளப்பட்டும், ஆதாரபூர்வமாக நிறுவப்பட்டும் வருவது, அல்குர்ஆனின் புனிதத் தன்மைக்கும் அதன் தெய்வீகத் தூய்மைக்கும் மிகச் சிறந்த சான்றாக விளங்குகின்றது.*

*ஆகவே, தண்ணீரை மாசுபடுத்தும் நடவடிக்கைகளை முடிந்தவரை தவிர்த்து, தண்ணீரினால் எதிர்கால சந்ததியினரும் பயன்பெறும் வகையில், தூரதிருஷ்டியுடன் அதனை உபயோகித்துப் பயன் பெறுவது ஒவ்வொரு மனிதர் மீதுமுள்ள கண்டிப்பான கடமையாகும்.*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

# இஸ்லாமிய நாகரிகமும் ஐரோப்பிய மறுமலர்ச்சி யில் அதன் தாக்கமும்

கி.பி. 7ம் நூற்றாண்டில் அரேபிய தீபகற்பத்தில் உதயமான இஸ்லாம், பல்வேறு சீர்திருத்தங்களையும் அபிவிருத்தி களையும் மேற்கொண்டு, ஒழுக்கமும் ஆளுமையும் மிக்க உயர் சமூக அமைப்பொன்றைக் கட்டியெழுப்பியது. இஸ்லாமிய சாம்ராஜ்யம், அரேபிய தீபகற்பத்துக்கு அப்பாலும் விரிவடைந்த போது அதன் நாகரிகமும் பரந்து விரியத் தொடங்கிற்று.

புதிய மார்க்கத்தையும் நாகரிகத்தையும் சுமந்தவர்களாக தமது பாலைவனப் பிரதேசங்களிலிருந்து வெளியான அரேபிய முஸ்லிம்கள், கிழக்கே பாரசீகம் வரையும் மேற்கே பைசாந்தியம் வரையும் தமது ஆளுகைப் பரப்பை விரிவுபடுத்திச் சென்றனர். மத்திய கிழக்கின் செழிப்பான பிரதேசங்களெல்லாம் அவர்களுக்குக் கீழ் வந்தன. அதன்பின் ஸ்பெயினையும் பிரான்சின் மேற்குப் பகுதியையும் கைப்பற்றி, சீனாவின் கிழக்குப் பிராந்தியம் வரை தமது ஆட்சிப் பரப்பை அவர்கள் விரிவாக்கிச் சென்றனர். அந்தப் பகுதிகளில் முஸ்லிம்கள் மேற்கொண்ட அபிவிருத்திகளும் சீர்திருத்தங்களுமே இன்றைய மேற்குலகின் மறுமலர்ச்சிக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்தன என்பது வரலாற்று ரீதியாக ஊர்ஜிதப்படுத்தப்பட்ட உண்மையாகும்.

சமகாலத்தில் உலகிலுள்ள அனைத்து அறிவியல் துறைகளிலும் இஸ்லாமிய நாகரிகத்தின் பங்களிப்பு மறைவாகவோ, வெளிப்படையாகவோ உள்ளதை அறிவியல் ஆய்வாளர்கள் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். பேராசிரியர் ஜி.சாட்டர்ன் இவ்வாறு கூறுகின்றார்: “அரேபிய முஸ்லிம் அறிஞர்கள் இல்லையென்றிருந்தால் ஐரோப்பிய அறிவியலாளர்கள் தமது அடிப்படை அறிவையே பெற்றிருக்கமாட்டார்கள். தவிரவும் அவர்களது நாகரிக மறுமலர்ச்சி பல நூற்றாண்டுகள் பின்னடைவு பெற்றிருக்கும்”

இஸ்லாமிய நாகரிகம் ஐரோப்பிய மறுமலர்ச்சியில் செலுத்திய தாக்கம் மிகப் பரந்ததானமையாயினும், அதிலிருந்து மிகச் சுருக்கமான ஒரு பகுதியை முன்வைப்பதே இக்கட்டுரையின்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

நோக்கமாகும். குறிப்பாக இந்நாகரிகமானது, மத்திய கால ஐரோப்பாவில் ஏற்படுத்திய மறுமலர்ச்சிகளையும் இலக்கியம், தத்துவம், மருத்துவம், புவியியல், கணிதவியல், ஒளியியல், மற்றும் அழகியற் கலைகள் முதலான பல்வேறு அறிவியல் துறைகளில் ஏற்படுத்திய தாக்கங்களையும் இக்கட்டுரை சுருக்கமாக விளக்க முற்படுகின்றது.

## இஸ்லாமிய நாகரிகப் பரம்பல்

பொதுவாக ஒரு சமூகத்தினது கலாசாரமோ, நாகரிகமோ - பிரயாணங்கள், ஊர்வலங்கள் போன்றவற்றிலான மனிதத் தொடர்புகள், கலப்புகள் மூலமாக, அல்லது யுத்தங்கள், நாடுபிடிப்புகள் மூலமாக, அல்லது உருவப்படங்கள், சின்னங்கள், நூல்கள், தொகுப்புகள் மூலமாக உலகில் பரப்பப்படுகின்றன. மேற்குலகு, இஸ்லாமிய கலாசார நாகரிகத்தை முக்கிய இரு வழிமுறைகளூடாகப் பெற்றுக் கொண்டது. ஒன்று - முஸ்லிம்களுடைய சமூகத் தொடர்புகள். இரண்டு - நூல் மொழி பெயர்ப்புகள்.

பாரசீகம், சிரியா, எகிப்து முதலான நாடுகள் கைப்பற்றப்பட்ட போது கிழக்கில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு முஸ்லிம்களுடன் தொடர்பு ஏற்பட்டது. முஸ்லிம்களது நடைமுறைகளினாலும் ஒழுக்கப் பண்பாடுகளினாலும் பெரிதும் ஈர்க்கப்பட்ட அவர்கள், தமது வாழ்க்கை நடைமுறைகளையும் அதற்கொப்ப ஒழுங்கமைத்துக் கொள்ள முனைந்தனர். மருத்துவவியல், இரசாயனவியல், கணிதவியல், வானவியல் போன்ற துறைகளில் ஈடுபாடு கொண்டிருந்த அவர்கள், முஸ்லிம்களைப் பின்பற்றி தமது அறிவியல் துறைகளை விருத்தி செய்து கொள்ளவும் ஈடுபாடு காண்பித்தனர்.

ஒன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் மேற்கில் சிக்லிய்யா எனும் பகுதியை முஸ்லிம்கள் வெற்றி கொண்ட போது, இஸ்லாமிய நாகரிகம் மிகப் பரந்த அளவிலே செல்வாக்கு செலுத்த ஆரம்பித்தது. அதனால் மேற்குலகு, இஸ்லாத்தையும் அதன் கலாசார நாகரிகத்தையும் பயன்படுத்தி துரித வளர்ச்சி கண்டது.

ஐரோப்பிய காட்டுமிராண்டிகள் நைந்துபோன சாம்ராஜ்யத்தைக் கவிழ்த்து அறியாமை இருளிலும் மிலேச்சத்தனத்திலும் மூழ்கியிருந்த வேளையில் முஸ்லிம்கள் பாரிய நாகரிகமொன்றைக்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

கட்டியெழுப்பிக் கொண்டிருந்தனர். ஐரோப்பாவில் அறிவு வளர்ச்சியும் நல்லொழுக்கமும் பல நூற்றாண்டுகளாக சிதைவுற்றுக் கொண்டிருக்கையில் இஸ்லாம் முன்னேற்றத்தின் முன்னணியில் நின்று கொண்டிருந்தது.

இஸ்லாமிய அறிவியலின் ஒளிச்சுடர் மேற்குலகின் பக்கம் சாய ஆரம்பித்த போது, அதன் ஆழத்தையும் பெறுமானத்தையும் ஐரோப்பிய உலகமே வியந்து நோக்கிற்று. அறிவியல் துறையில் முஸ்லிம்களை விட பல நூற்றாண்டுகள் தாம் பின்னடைவு பெற்றிருப்பதையும், அத்துறைகளில் தாம் முழு ஈடுபாடு காண்பிக்க வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்து கொண்டது. அங்கிருந்த அறிஞர்கள் பலர் அவசர அவசரமாக அரபு நூல்களை இலத்தீன் மொழிக்குப் பெயர்த்து வெளியிட ஆரம்பித்தனர். இது கி.பி 13ம் நூற்றாண்டில் ஆரம்பமானது. இக்காலப் பகுதியிலேதான் ஐரோப்பாவில் பல பல்கலைக்கழகங்களும் தோற்றம் பெறலாயின. முதலாவதாக பேர்ஸ் பல்கலைக்கழகமும் அதன்பின் ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களும் பிரித்தானியாவில் உருவாக்கப்பட்டன. தொடர்ந்து இத்தாலியப் பல்கலைக்கழகமும் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் வேறு சில பல்கலைக்கழகங்களும் உருவாக்கப்பட்டன. இப்பல்கலைக்கழகங்களிலெல்லாம் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட முஸ்லிம்களது அறிவியல் நூல்களே பாடத்திட்டங்களாக அமுல்படுத்தப்பட்டிருந்தன. இவற்றிலிருந்து பட்டம் பெற்று வெளியேறியவர்களுள் ரொபர்ட் ஜெரஸ்ட் (கி.பி 1250), மற்றும் அல்பிரட் மஜ்னூஸ் (கி.பி. 1280) ஆகியோர் அறிவியல் துறையில் புகழ்பெற்று விளங்கியதும் குறித்த பல்கலைக்கழங்களில் அவர்கள் விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. இதற்கமைய இருண்ட மத்திய காலங்களில் இஸ்லாமிய கலாசாரத்தையும் அறிவியலையும் ஐரோப்பாவுக்கு எடுத்துச் சென்ற மிக முக்கியமான தனியொரு காரணி, அரேபிய கையெழுத்துப் பிரதிகள், நூல்கள் என்பன பிறமொழிகளுக்கு பெயர்க்கப்பட்டமையாகும் எனலாம்.

கீழைத்தேய ஆய்வாளர்களில் ஒருவரான 'கெஜ்வா' என்பவரின் பின்வரும் கூற்று இதனை உறுதிப்படுத்துவதாக அமைகின்றது. "ஐரோப்பிய அறிஞர்கள் அறிவியல் சிந்தனைகள், கருத்துகள் பலவற்றை கண்டுபிடித்து வெளியிட முனையும் போது, அவ்விடயங்களில் அவர்களை அரேபிய முஸ்லிம் அறிஞர்கள்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

முந்திவிட்டிருப்பர். கலிலியோ கலிலி, நிக்லஸ் கொப்பனிகஸ், நியூட்டன் போன்றோர் ஐரோப்பிய எழுச்சி ஆய்வாளர்களாகக் கருதப்பட்ட போதிலும், அவர்களது ஆய்வுகளுக்கும் கண்டுபிடிப்புகளுக்கும் அரேபிய ஆய்வாளர்களான இப்னு சீனா, இப்னு ஹைதம், ஜாபிர் பின் ஹய்யான், காசீனி போன்றோரின் சிந்தனைக் கருத்துகளே காரணிகளாக அமைந்தன"

ஜீ.பி. ஸ்மித் எனும் அறிவியல் ஆய்வாளர் தனது 'ஐரோப்பிய வரலாற்றுக் காட்சிகள்' எனும் நூலில் பின்வருமாறு எழுதுகிறார்: "முஹம்மத் (ஸல்) அவர்கள் காலஞ்சென்ற பின் இருநூறு ஆண்டுகளுக்குக் குறைவான காலப்பகுதியில் அவரைப் பின்பற்றியோர் விரைவாக நாகரிகமிக்க மனிதர்களாக மாறியதான சிறப்பு மிக்க சம்பவத்தைப் போன்று வேறெதுவும் வரலாற்றில் இடம்பெறவில்லை. பக்தாதும் டமஸ்கசும் அழகான சிறப்பு மிகு நகரங்களாக மாறின. அவை ஆடம்பர வாழ்வினதும் அறிவு வளர்ச்சியினதும் கேந்திர நிலையங்களாக விளங்கின. அந்நகரங்களில் தத்துவஞானிகள், விஞ்ஞானிகள், மருத்துவர்கள், கல்விமான்கள் நிறைந்து காணப்பட்டனர். அதேநேரத்தில் ஐரோப்பா காட்டுமிராண்டித்தனத்திற்கும் மிருகத்தனத்திற்கும் இடையிலான இழுபறிப் போராட்டத்தில் ஆழ்ந்திருந்தது. முஸ்லிம்கள் எங்களுக்கு இலக்கங்களையும் தசமக் குறியீடுகளையும் அட்சர கணித அறிவியலையும் வழங்கினார்கள். அவர்களது விண் அவதான நிலையங்களில் அவர்கள் பெருந்தொகையான நட்சத்திரங்களை இனங்கண்டு வகைப்படுத்தினார்கள். அவைகளில் அனேகமானவை இன்றும் கூட அரபு மொழிப் பெயர்களில் அழைக்கப்படுகின்றன. அவர்களுக்கு வெடிமருந்துகளின் உபயோகம் பற்றியும் கப்பலோட்டிகளது திசைகாட்டிகளின் உபயோகம் பற்றியும் - மேற்கு அவை பற்றி அறிவதற்கு மிக நீண்ட காலத்திற்கு முன்னமே - தெரிந்திருந்ததாகக் கூறப்படுகின்றது"

பிரசித்தி பெற்ற வரலாற்றாசிரியரான 'லேன்பூல்' என்பவர், 'ஸ்பெயினில் மூர்கள்' என்ற தனது நூலில் பின்வருமாறு எழுதுகிறார்: "முஸ்லிம்களது கொர்டோவா மாளிகைகளும் பூந்தோட்டங்களும் எழில்மிக்கவையாக விளங்கியது போன்று அறிவியல் துறையும் நிறைவு பெற்று விளங்கியது. உடல் போன்று உள்ளமும் நிறைவாக இருந்தது. அதன் ஆசிரியர்களும் பேராசிரியர்களும் அதனை ஐரோப்பிய கலாசார நிலையமாக மாற்றினார்கள். அதன் புகழ் பூத்த மருத்துவக் கலாநிதிகளிடம்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

பயில்வதற்காக ஐரோப்பாவின் சகல பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் அங்கு வந்தார்கள். அறிவியலின் ஒவ்வொரு துறையும் மிக அவதானத்துடன் அங்கு கற்கப்பட்டது. மருத்துவத் துறையில் மிகப்பாரிய அளவிலான கண்டுபிடிப்புகளை அந்தலூசிய முஸ்லிம் மருத்துவர்களும் அறுவைச் சிகிச்சையாளர்களும் உலகுக்கு வழங்கினார்கள்"

இஸ்லாமிய நாகரிகமானது, பிரதானமாக மூன்று தளங்களூடாக ஐரோப்பிய நாடுகளில் பரவி செல்வாக்குச் செலுத்தின. அவற்றில் முதலாவது, முஸ்லிம் ஸ்பெயின். முஸ்லிம்களது ஸ்பெயின் முழுவதிலுமான ஆட்சி கி.பி 711ல் ஆரம்பமாகி, அதன் ஒரு பாகத்தில் கி.பி. 1492ல் முடிவுற்றது. இரண்டாவது, சிசிலி மற்றும் தென் இத்தாலி என்பனவாகும். இப்பகுதிகளில் முஸ்லிம்கள் கி.பி. 840 தொடக்கம் 1060 வரையில் ஆட்சி புரிந்தனர். மூன்றாவது, கொன்ஸ்தாந்துநோபில். அப்பகுதி கி.பி. 1274 வரை முஸ்லிம்களது கட்டுப்பாட்டில் இருந்தது.

இஸ்லாமிய நாகரிகமானது அதன் கலாசாரத்தையும் அறிவியலையும் ஐரோப்பாவுக்கு ஊடு கடத்துவதில் ஸ்பெயின் மிக முக்கிய பங்கினை வகித்து வந்துள்ளது என்ற விடயத்தைப் பெரும்பாலான வரலாற்றாசிரியர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

அடிலார்ட், ரொபர்ட், பிளேட்டோ, ஹேர்மன், ருடொல்ப், ஜேராட் போன்ற உலகப் புகழ் பெற்ற கிரேக்க, ஆங்கிலேய அறிவியலாளர்களும் முழு ஐரோப்பாவையும் சேர்ந்த கல்விமான்களும் பிரதானமாக அறிவியல்களை கற்றுக் கொள்வதற்கும் அவற்றை இலத்தீன் ஹீப்ரு மற்றும் ஏனைய மொழிகளில் பெயர்க்கவும் 12ம் நூற்றாண்டில் ஸ்பெயினில் வந்து குவிந்தார்கள்.

முஸ்லிம்கள், ஐரோப்பாவின் ஒரு பாகத்தில் சுமார் 800 வருடகாலம் ஆதிக்கம் செலுத்தி வந்ததனால், இந்தப் பின்புலத்தில் அவர்களது நாகரிகத்தின் ஊடுகடத்தல் நிகழ்வுப் போக்கு துரிதப்படுத்தப்பட்டிருந்தது. ஸ்பெயினில் முஸ்லிம் பிரசன்னமும் அறிவியல் துறைக்கான முஸ்லிம்களுடைய பங்களிப்பும் இல்லாதிருந்தால் மேற்கத்திய உலகம் தற்போது எட்டியிருக்கும் நவீன தர்க்கவியல், மற்றும் விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றங்களைச் சாதித்திருக்க முடியாது என்பது மறுக்க முடியாத பேருண்மையாகும்.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

ஐரோப்பிய மறுமலர்ச்சியில் இஸ்லாமிய நாகரிகத்தின் தாக்கங்களை அறிந்து கொள்வதற்காக, தற்காலத்தில் உலகின் பரவலான அவதானத்திற்கு உட்பட்டிருக்கும் சில அறிவியல் துறைகளையும் அவற்றிற்கான முஸ்லிம் அறிஞர்களது ஆரம்பகால பங்களிப்புகளையும் பற்றி சுருக்கமாக அவதானிப்பது பயனுடையதாகும்.

**இலக்கியம்.**

இஸ்லாமிய நாகரிகமானது, அதன் கவிதை, இலக்கியப் பரப்பினூடாக மத்திய கால ஐரோப்பாவின் இலக்கியத் துறையில் பெரும் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தது. பாலைவனங்களிலே வெறும் பொழுதுபோக்கம்சமாக உருவான அரேபியக் கவிதைகள், பின்னர் தனிக்கலையாக வளர்ச்சியுற்று, அரேபியர்கள் தமது பயணங்களில் மாத்திரமல்லாமல், அமர்வுகள், விசேட நிகழ்வுகள் போன்றவற்றிலும் பாடப்படும் வகையில் முக்கியத்துவம் பெற்றது. இக்காலப் பகுதியில் யூனானிய இலக்கிய மரபு வழிமுறைகளால் கவரப்பட்ட அரேபியர்கள், சில மாற்றங்களுடன் அவற்றைத் தமது இலக்கியத்துறையிலும் உள்வாங்கிக் கொண்டனர். இதனால் நாடகங்கள், அவற்றை அரங்கேற்றும் மேடைகள் என்பனவும் அரேபியருக்கு அறிமுகமாயின. இவற்றோடு இலக்கியத்துறையை அவர்கள் இறுக்கமானதாகவும் பயன்மிக்கதாகவும் வளர்த்துக் கொண்டனர்.

இத்தகைய நிலையிலமைந்த முஸ்லிம்களது அரபுக் கவிதைகள், ஐரோப்பாவில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட போது, அவற்றின் நடையும் இலக்கியப் போக்கும் பொருள் தரும் பாங்கும் வித்தியாசமானதாகவும் நவீனத்துவம் மிக்கதாகவும் இருந்ததில் அவற்றால் ஈர்க்கப்பட்ட ஐரோப்பிய இலக்கிய வல்லுனர்கள், அவற்றைத் தமது இலக்கியத் துறைகளிலும் பிரயோகிக்க ஆரம்பித்தனர். அதன் விளைவாக ஐரோப்பிய இலக்கியத்துறை புதிய பரிமாணம் பெற்று விளங்கலாயிற்று.

**மருத்துவம்.**

கி.பி. 8ம் நூற்றாண்டு தொடக்கம் 15ம் நூற்றாண்டு வரை முஸ்லிம்களைத் தவிர மற்றெவரிடமும் மருத்துவ விஞ்ஞானம் பூரணத் தெளிவுடன் அறியப்பட்டிருக்கவில்லை. மருத்துவத் துறையில் சிறந்து விளங்கியவர்கள் கிரேக்கர்களேயெனினும், அவர்கள் விட்டுச் சென்ற இடத்திலிருந்து தொடர்ந்த



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

முஸ்லிம்கள் மருத்துவத்துறையை மிக உயர்ந்த நிலைக்கு இட்டுச் சென்றனர்.

யூனானிய, இந்திய, அரேபிய மருத்துவ முறைகளையெல்லாம் ஆய்வு செய்த முஸ்லிம்கள், அவற்றினூடாக பல்வேறு கண்டுபிடிப்புகளையும் உலகுக்கு அறிமுகப்படுத்தினர். வாதநோய்களுக்கான மருந்தை முதன்முதலில் பயன்படுத்தியவர்கள் முஸ்லிம்களே. தற்போதும் நடைமுறையிலுள்ள, காயங்களுக்கு மருந்திட்டு (பெண்டேஜ்) சீலை சுற்றும் வழக்கத்தை முஸ்லிம்களே அறிமுகப்படுத்தினார்கள். அவர்கள், மஞ்சள் காமாலை, மற்றும் ஆஸ்துமா நோய்களுக்கான சிகிச்சை முறையைக் கண்டுபிடித்தார்கள். இவை மாத்திரமன்றி, பைத்தியம் பிடித்தவர்களுக்கு சிகிச்சையளிக்கும் போது அபின் எனும் போதை வஸ்தை குறித்த அளவில் பயன்படுத்தி நிவாரணமளிக்க முடியும் என்பதையும், நாசி வழியாக இரத்தக் கசிவு ஏற்படும் போது தலையில் குளிர்நீரை ஊற்றி முதலுதவி அளிக்க முடியும் என்பதையும், சத்திர சிகிச்சை மூலமாக உடலுறுப்புகளை தனித்தனியாகப் பிரித்தெடுக்க முடியும் என்பதையும், சிறுநீரகக் கற்களை சத்திர சிகிச்சையின்றி சாதாரணமாகவும் கரைத்து விட முடியும் என்பதையும் முஸ்லிம்களுடைய அறிவியல் ஆய்வுகள் மூலமாகவே உலகம் பெற்றுக் கொண்டது. தவிரவும், புற்றுநோய் ஆரம்பத்திலேயே கண்டறியப்படுமானால் அதற்கு சிகிச்சையளித்து குணப்படுத்த முடியும் என்ற கண்டுபிடிப்பை வெளியிட்டதோடு, பல்வேறு தொற்று நோய்களுக்கான மருத்துவ சிகிச்சைகளையும் முஸ்லிம்கள் அறிமுகப்படுத்தினர்.

மருத்துவ விஞ்ஞானம், மற்றும் அறுவைச் சிகிச்சை தொடர்பாக யாரும் அறிந்திராத பல புதிய கண்டுபிடிப்புகளை வெளியிட்ட முஸ்லிம்கள் அவற்றை நூல்களாகவும் எழுதினர். குஷ்டரோகம் தொடர்பாகவும் அதற்கான வைத்தியமுறை தொடர்பாகவும் முதன்முதலில் நூல்களை எழுதியவர்கள் முஸ்லிம்களே. அபூபக்கர் அர்ராசி, இப்னு சீனா, அபுல்காசிம் அஸ்ஸஹ்ராவி போன்றோர் அக்காலத்தில் வாழ்ந்த புகழ் பெற்ற முஸ்லிம் மருத்துவர்களாவர். அபுல்காசிமுடைய கருத்துகள் பிரான்சிய மறுமலர்ச்சிக்குக் காரணமாக அமைந்ததும் இப்னு சீனாவின் மருத்துவ நூல் பாரிஸ் பல்கலைக்கழகத்தினால் 18ம் நூற்றாண்டுவரை சுமார் 600 ஆண்டுகள் பாடப்புத்தகமாக பயன்படுத்தப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

**கணிதவியல்.**

*அறிவியல் துறையில் மிக முக்கிய பகுதியாகக் கணிக்கப்படும் கணிதவியலுக்கான முஸ்லிம்களின் பங்களிப்பும் விதந்துரைக்கத்தக்கதாகும். உயர் கணிதவியலின் ஒவ்வொரு துறையிலும் முஸ்லிம்களுடைய அறிவுத் திறனின் அழுத்தத் தடயங்களைக் காணலாம். கேத்திர கணிதத்துக்கான பிரயோக அட்சர கணிதத்தையும் கோள வடிவ திரிகோண கணிதத்தையும் முஸ்லிம்களே முதன்முதலில் அறிமுகப்படுத்தினர். முஸ்லிம் கணிதவியலாளர்களுள் ஜாபிர் பின் ஹய்யான் மிகவும் பிரசித்தி பெற்றவராகத் திகழ்கின்றார்.*

*10ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த ஐரோப்பியர்களில் பெரும் கல்விமான் என வர்ணிக்கப்படும் கேபேர்ட் என்பவர், ஸ்பெயினில் முஸ்லிம்களிடமே கணிதவியல், மற்றும் ஏனைய அறிவியலைப் பயின்றார். அதன்பின் கி.பி. 999ல் 2ம் சில்வஸ்டர் எனும் பெயரில் பாப்பரசராகப் பதவியேற்ற இவர், முஸ்லிம்களிடம் தான் பெற்ற அறிவினூடாக ஜேர்மன், பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளில் பல்வேறு சீர்திருத்தங்களை ஏற்படுத்தினார். முக்கியமாக மேலைய உலகம் இன்று பயன்படுத்தும் எண்களான அரேபிய எண்களின் பாவனையை அவர் ஊக்கப்படுத்தினார். இது பின்னர் ஐரோப்பாவில் அதுவரை பயன்படுத்தப்பட்டு வந்த மிக மோசமான ரோமன் எண்களுக்குப் பதிலீடாக அரேபிய எண்கள் பாவனைக்கு வரக் காரணமாயிற்று.*

*அப்பாஸிய காலத்தின் தொடக்கத்திலேயே (கி.பி 1258) முஸ்லிம் கணிதவியலாளர்கள் கிரேக்க மூல நூல்களிலிருந்து கேத்திர கணிதத்தைப் படிப்பதில் பரிச்சயம் பெற்றிருந்தனர். அவர்கள் யூக்லிட் மற்றும் அப்பலோநியஸ் போன்ற ஆரம்ப கிரேக்க கணிதவியலாளர்களால் முன்வைக்கப்பட்டிருந்த கேள்விகளுக்கு, காலம் காலமாக பயன்படுத்தப்பட்டு வரும் அதே வழிமுறைகளைக் கொண்டு பதிலளித்தனர். பிற்காலத்தில் 'பாஸ்கலின் முக்கோணம்' என அறியப்பட்ட கோணம் தொடர்பான பிரச்சினைகளையும் ஏனைய பிரச்சினைகளையும் 'அல்கராஜி' மற்றும் 'அல்டூஸி' போன்றோரை உள்ளிட்ட ஆரம்பகால முஸ்லிம் கணிதவியலாளர்கள் ஆராய்ந்தனர்.*

*பிரெஞ்சு தத்துவஞானியும் கணிதவியலாளருமான பிளேயிஸ் பாஸ்கல் (கி.பி 1623-1662) இடைநிறுத்தப்படும்*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

விளையாட்டொன்றில், விளையாட்டு இடைநிறுத்தப்படும் போது அதில் கலந்து கொண்டுள்ள வீரர்களின் வெற்றி வாய்ப்புகளின் விகிதாசாரத்துக்கேற்ப இறுதி வெற்றி வாய்ப்புக்களைக் கணிப்பதற்காக எண்கணித முக்கோணமொன்றைப் பயன்படுத்தினார். மேலைய உலகில் அவருடைய பெயராலேயே இம்முக்கோணம் அறியப்பட்டிருந்தமையால் அதைத் தோற்றுவித்தவர் அவர்தானென நீண்டகாலம் கருதப்பட்டு வந்தது.

எனினும், அத்தகைய முக்கோணமொன்றின் கண்டுபிடிப்பும் அதன் கோட்பாடுகளின் ஸ்தாபிதமும் பாஸ்கல் வாழ்ந்த காலத்துக்கு ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே இடம்பெற்றிருந்தது. இம்முக்கோணம் முஸ்லிம் கணிதவியலாளரான 'அல்கராஜி'யினால் உருவாக்கப்பட்டு, நிகழ்தகவுகளைக் கணிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

**ஒளியியல்.**

ஒளியியல் விஞ்ஞானத் துறையிலும் முஸ்லிம்களது பங்களிப்பு மிகப் பிரசித்தி பெற்றதாகும். இத்துறையில் கிரேக்கர்களது தவறான விளக்கங்களைத் தகர்த்தெறிந்த முஸ்லிம்கள், மிகச் சரியான கருத்துகளை முன்வைத்தனர். அதன்மூலம் ஐரோப்பியர்களது அறிவற்ற நிலையை, அல்லது சந்தேகத்தை நிவர்த்தி செய்து வைத்தனர். அல்ஹஸன் எனும் முஸ்லிம் ஒளியியல் விஞ்ஞானி, 'ஒளிக்கீற்றுகள் கண்ணிலிருந்தே வருகின்றன' என ஐரோப்பாவில் நிலவி வந்த கருத்தைத் திருத்தி, 'ஒளிக்கீற்றுகள் கண்ணில் இருந்தல்ல, புறத்தேயுள்ள பொருட்களிலிருந்தே கண்ணுக்கு வருகின்றன' என்ற விளக்கத்தை வரலாற்றில் முதன் முதலாக முன்வைத்தார். அத்தோடு வேகங்களுக்கிடையிலான சரியான தொடர்பினையும் விழுகின்ற பொருட்களின் இடைவெளியையும் காலத்தையும் அவரே கண்டுபிடித்தார். நுண்துறை ஈர்ப்பாற்றல் பற்றியும் அவர் அறிந்திருந்தார்.

**தத்துவவியல்.**

கி.பி. 6ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்றோருடைய தத்துவவியல் கோட்பாடுகள் கிரேக்கத்தில் பிரபல்யம் பெற்று விளங்கின. இஸ்லாமிய நாகரிகம் வளர்ச்சியடைந்த பின்னால், முஸ்லிம்கள் இவர்களது நூல்களை



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

வாசித்தனர். கிரேக்க தத்துவக் கருத்துகள் அவர்களைப் பெரிதும் ஈர்த்தன. அக்கருத்துகளில் மாற்றங்களைச் செய்த அவர்கள் அவற்றுடன் தமது இஸ்லாமிய தத்துவக் கருத்துகளையும் இணைத்து, தத்துவவியல் கோட்பாட்டை புதிய பரிமாணத்தில் வளர்ச்சியுறச் செய்தனர். இதன்மூலம் தர்க்கவியல், இயற்பியல், ஆன்மவியல், மற்றும் ஒழுக்கவியல் உள்ளிட்ட பல்வேறு தத்துவக் கோட்பாட்டுப் பிரிவுகள் பரவலாக தோற்றம் பெற்றன.

முஸ்லிம் தத்துவவியலாளர்கள் தமது தத்துவக் கோட்பாட்டின் அடிப்படை அம்சமாக ஆன்மாவை அடையாளப்படுத்தியதோடு, மனித இனத்தின் அறிவு, இயக்கம், மற்றும் வாழ்க்கை முழுவதற்கும் அதுவே மூலப்பகுதியென்பதையும் இனங்காண்பித்தனர். இந்தக் கோட்பாட்டையே ஐரோபியர் பற்றிப் பிடித்துக் கொண்டதோடு, முஸ்லிம்களைப் பின்பற்றியே அவர்கள் தமது தத்துவவியல் கோட்பாட்டையும் வளர்த்துக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**புவியியல்.**

புவியியல் தொடர்பான அறிவு இஸ்லாமிய நாகரிகத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே முஸ்லிம்கள் மத்தியில் முக்கியத்துவம் மிக்கதாகத் திகழ்ந்து வந்தது. ஆயினும், அப்பாசியக் கலீபாவான மஃமூனுடைய ஆட்சிக் காலத்தில், புவியியல் துறை விற்பன்னரான பெத்லமோஸ் உடைய சில புவியியல் நூல்கள் அரபு மொழிக்கு பெயர்க்கப்பட்டதன் பின், இம்முக்கியத்துவம் மேலும் வலுப்பெற்றது. அதனால் புவியியல் தொடர்பாக பல்வேறு அறிவுகளை தேடிப் பெற்றுக் கொண்ட முஸ்லிம்கள், அவற்றை அடிப்படையாகக் கொண்டு, அது தொடர்பான புதிய பல கருத்துகளையும் சிந்தனைகளையும் முன்வைத்தனர்.

புவியியல் கோட்பாட்டில் பெரும் பரபரப்பையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியதான, 'பூமி உருண்டை வடிவிலானது' என்ற உண்மையைக் கண்டுபிடித்து வெளியிட்டவர்கள் முஸ்லிம்களேயாவர். கி.பி. 8ம் நூற்றாண்டிலேயே முஸ்லிம்கள் இதனைக் கண்டுபிடித்து விட்டனர். மதீனாவில் வாழ்ந்த அபூஹனீபா (கி.பி. 768) எனும் தத்துவஞானி, "பூமியின் எந்தவொரு புள்ளியும் அதன் மையமாக இருக்க முடியும்" என்ற கோட்பாட்டினை முன்வைத்தார். அதற்கு 800 வருடங்களின் பின்னரே 'கொபர்னிகஸ்' புவியின் உருண்டை வடிவம் குறித்த



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

விஞ்ஞானபூர்வமான ஆய்வை முன்வைத்தார். அதுமட்டுமன்றி, ஸ்பெயினில் வாழ்ந்த பிரபல முஸ்லிம் தத்துவஞானியான இப்னு ஹஸ்ம் (கி.பி. 994-1060) என்பவரும் 'பூமி ஒரு பீங்கானைப் போல் தட்டை வடிவமானது' என்ற கருத்தினைக் கொண்டிருந்தவர்களின் முடிவினை நிராகரித்தார். பூமி தட்டை வடிவினதாக இருந்தால், சூரிய உதயத்தினை ஒரே நேரத்தில் எல்லா நாடுகளிலும் பார்க்க முடியும் என அவர் வாதிட்டார். அவ்வாறு முடியாதிருப்பதற்கான காரணம் பூமி உருண்டை வடிவினதாக இருப்பதே என்பதை அவர் வலியுறுத்தினார். கொர்டோவாவில் வாழ்ந்த இப்னு ருஷ்த் (கி.பி. 1126-1198) எனும் முஸ்லிம் புவியியல் ஆய்வாளர் உட்பட இன்னும் பல முஸ்லிம் அறிஞர்களும் இதனை வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இது போன்று, கடல் தொடர்பான அறிவிலும் முஸ்லிம்கள் சிறந்து விளங்கினர். கடல் பயணங்களுக்கு அவசியமாக இருந்த பாய்மரக் கப்பல்களை அவர்கள் செப்பனிட்டதோடு, கடல் பயணங்களுக்கான வழிகாட்டும் வரைபடங்களையும் அவர்களே வரைந்தார்கள். அதற்குரிய பாதுகாப்புக் கருவிகளையும் உருவாக்கினார்கள்.

அக்கால கட்டத்திலான கடல் பிரயாணங்கள் பெரும்பாலும் நாடுகாண் பயணங்களாகவே இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. போர்த்துக்கேயரின் கிழக்கு நோக்கிய பயணத்தையும் கொலம்பஸ் முதலானோரின் மேற்கு நோக்கிய பயணத்தையும் இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம். முக்கியமாக இந்தியாவையும் சீனாவையும் கண்டுபிடிப்பதே அவர்களது நோக்கமாக இருந்தது.

இஸ்லாமிய நாகரிகத்துறை உச்ச நிலையை எட்டியிருந்த 12ம் நூற்றாண்டு காலப்பகுதியிலும் இந்நிலை தொடர்ந்ததால் முஸ்லிம்களது புவியியல் தொடர்பான அறிவு பெரிதும் முக்கியத்துவப்படுத்தப்படும் ஒன்றாய் அமைந்தது. இக்காலப் பகுதியில்தான், கிழக்கில், முஸ்லிம்கள் - கிறிஸ்தவர்கள் இடையிலான சிலுவை யுத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இஸ்லாமிய அரசு ஒரு புறத்தில் தன்னை நோக்கியெழும் எதிர்ப்புகளை சமாளித்துக் கொண்டிருந்த அதேவேளை, மறுபுறத்தில் தன் அறிவியல் பணிகளையும் சிறப்பாக முன்கொண்டு சென்றது. ஸ்பெயின் நகரிலிருந்த மொழிபெயர்ப்பு நிறுவனங்கள் இஸ்லாமிய அறிவியல் நூல்களையெல்லாம் இலத்தீன் மொழிக்குப் பெயர்த்து, ஐரோப்பா மற்றும் ஏனைய



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

பகுதிகளெங்களும் அவற்றை விநியாகம் செய்தன. அதன் விளைவாய் ஐரோப்பிய நாகரிகத்தைக் கட்டியெழுப்பி அதன் மறுமலர்ச்சிக்கு வழிகோலுவதற்கான இஸ்லாமிய நாகரிகத்தின் பங்களிப்பு ஆரம்பமாயிற்று. இப்பங்களிப்பு சுமார் 3 நூற்றாண்டுகள் தொடர்ந்திருந்து ஐரோப்பா எங்கணும் அழியாத, ஆழமான பயன்பாட்டுப் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியது.

## முடிவுரை.

ஜி.சட்டர்னின் கூற்றுப்படி ஐரோப்பாவின் கல்வி, அறிவியல் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமாக அமைந்ததும், ஐரோப்பா தனதென உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கும் பல்வேறு கண்டுபிடிப்புகளின் தோற்றத்திற்குக் காரண கர்த்தாவாக அமைந்ததும் முஸ்லிம்களது இஸ்லாமிய அறிவியல் நாகரிகமேயாகும்.

கி.பி. 9ம் நூற்றாண்டு தொடக்கம் 15ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி மத்திய ஐரோப்பாவின் இருண்ட யுகம் என அழைக்கப்பட்ட அதேவேளை, இஸ்லாத்தைப் பொறுத்தவரை அதுவே அறிவியல் யுகமாக இருந்தது. இக்கால கட்டத்தில் எழுதப்பட்ட சுமார் மூன்று மில்லியன் நூல்களும் கையெழுத்துப் பிரதிகளும் உலகெங்கும் உள்ள நூல்நிலையங்களில் சிதறிக் கிடக்கின்றன. ஆனால், அழிக்கப்பட்ட, ஆற்றில் வீசப்பட்ட, மற்றும் தீக்கிரையாக்கப்பட்ட மிகப் பெறுமதி வாய்ந்த பெருந்தொகையான நூல்கள் எதுவும் இதில் அடங்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. முஸ்லிம்களிடமிருந்து பெற்றுக் கொண்ட, அல்லது கவர்ந்து கொண்ட இந்நூல்களின் உதவியுடன்தான் ஐரோப்பா அறிவியல் துறையில் துரித வளர்ச்சி கண்டது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர். மறுக்க முடியாத பல சான்றுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

பிரசித்தி பெற்ற முஸ்லிம் வைத்திய நிபுணரான இப்னுல் ஹைதமின் 'அல்மனாஸிர்' எனும் நூலை மொழிபெயர்த்து வெளியிட்டதன் மூலமே ரோஜர் பேக்கன் (கி.பி 1214-1294) தன்னை ஒரு மகத்துவம் வாய்ந்த கண் வைத்திய நிபுணராக உலகிற்கு அறிமுகப்படுத்திக் கொண்டார். குருதிச் சுற்றோட்டத் தொகுதி குறித்த, முஸ்லிம் ஆய்வாளரான இப்னு அல்நாபிஸின் ஆராய்ச்சிகள் இருட்டடிப்பு செய்யப்பட்டு, சர். வில்லியம் ஹார்விதான் அத்துறையின் முன்னோடியென



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

முடிசூட்டப்பட்டார். பூமி உருண்டை வடிவினது என்று கண்டுபிடித்த அபூஹனீபா ஒதுக்கப்பட்டு, அந்தக் கண்டுபிடிப்பின் உரிமையாளராக கொபர்னிகஸ் புகழாரம் சூட்டப்பட்டார். தனது முதல் 'ஸ்புட்னிக்' விண்கலத்தை விண்வெளியில் வலம் வரச் செய்த ரஷ்யா, அது அசல் அரேபியத் தொழில் நுட்பத்தின் வெளிப்பாடுதான் என்பதை பின்னரே ஒப்புக் கொண்டது. மேற்குலகு மனிதனை சந்திரனுக்கு அனுப்பி வைத்தது. ஆனால், அதற்கு வழிகாட்டிய அரேபியத் தொழில்நுட்பத்தின் அடிச்சுவடு பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை.

இதுதான் ஐரோப்பிய நவீனத்துவமும் அறிவியல் மறுமலர்ச்சியுமாகும். இஸ்லாமிய நாகரிகம் இல்லையென்றிருந்தால், ஐரோப்பா இன்றைய வளர்ச்சியை அடைந்து வர இன்னும் பல நூற்றாண்டுகள் அவசியப்பட்டிருக்கும் என்பது உறுதி. ஆனால், தன் வளர்ச்சியைக் கண்டு இறுமாப்புக் கொள்ளும் ஐரோப்பிய சமூகம், அதற்கு முழுமுதற் காரணமான இஸ்லாத்துடன் நன்றியுணர்வோடு நடந்து கொள்ள ஆர்வங் காட்டவில்லை என்பது மட்டுமன்றி, இஸ்லாத்தையும் இஸ்லாமிய சமூகத்தையும் புறத்தொதுக்கவும் அழிக்கவும் பிரயத்தனம் மேற்கொள்ளும் படியான நிலைக்குச் சென்று விட்டதுதான் கவலையும் விசனமும் கொள்ளத்தக்கதாகும். இன்றைய முஸ்லிம் சமூகம் இதனை உள்ளத்தில் நன்கு இருத்திக் கொள்ள வேண்டும்.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

# இஸ்லாத்தின் அழகியல் கோட்பாடு

*இஸ்லாம் மனித சமூகத்திற்குக்க இடைத்த முழுமையான அருளாகும். அது, வெறுமனே வணக்கஸ்தலங்களின் வழிபாடுகளுடன் மட்டும் வரையறுக்கப்படாமல், வாழ்வின் அனைத்துத் தனங்களைப் பற்றியும் கரிசனை காட்டுகின்றது. இஸ்லாம் போதனைகளையும் கோட்பாடுகளையும் சித்தாந்த ரீதியில் விளக்கும் ஒரு மார்க்கமன்று. மாறாக, மனித வாழ்வின் ஒவ்வொரு அசைவிற்கும் அர்த்தங்காட்டி ஈருலகின் மீட்சிக்கும் வழிகாட்டும் சிறந்த மார்க்கமாக அது விளங்குகின்றது.*

*இப்பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதித்துவத்தைப் பகிரங்கப்படுத்துபவனாக மனிதன் படைக்கப்பட்டுள்ளான். அவன் வெறுமனே எலும்புக் கூடுகளைப் போர்த்திய தசைப்பிண்டமாகவன்றி, பலவகையிலும் சீரமைக்கப்பட்டவனாகவே அவனுடைய உருவாக்கம் காணப்படுகின்றது. இதனால்தான் அழகியல் என்ற அம்சம் மனித வாழ்வைப் பொறுத்தவரை முக்கியத்துவம் மிக்கதாக அமைகின்றது. அழகியல் பற்றி இஸ்லாத்தின் எண்ணக்கருவை விளக்க வந்த அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:*

*“நிச்சயமாக நாம் மனிதனை மிக அழகான வடிவில் படைத்திருக்கின்றோம்” (95;04)*

*மனிதன் பல்வகை உணர்வுகளின் கூட்டுப்படைப்பாக பிரதிபலிக்கின்றான். அவ்வகை உணர்வுகளில் அழகியல் உணர்வு பிரதான பங்கை வகிக்கின்றது. மனிதனைப் பொறுத்தவரை, உடல் வளர்ச்சியில் உணவு முக்கியத்துவம் பெறுவது போலவே, அவனுடைய ஆரோக்கியமான உள ஆளுமையின் விருத்திக்கு இந்த அழகியல் உணர்வு துணையாகத் திகழ்கின்றது.*

*ஆகவேதான், மானுடத்தின் ஈடேற்றத்தை நோக்காகக் கொண்டு இப்பிரபஞ்சத்தில் அழகியலை பிரதிபலித்திருக்கும் இறைவன், தன்னிலே அழகை நேசிக்கும் அழகுள்ளதோர் சிருஷ்டிகர்த்தாவாக இருப்பதை அல்குர்ஆனும் சுன்னாவும் பல்வேறு இடங்களில் தெளிவுபடுத்துகின்றன.*

*“அல்லாஹ் அழகானவன்; அவன் அழகையே விரும்புகின்றான்” என்ற நபி (ஸல்) அவர்களின் வாக்கு, மேற்சொன்ன கருத்தை*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

வழிமொழிகின்றது. அத்தோடு, தன்னிலே ஒரு பண்பாக அழகை சித்தரிக்கும் இறைவன், தன்னுடைய படைப்பினங்களிலும் அதனை சிருஷ்டித்திருப்பதை அல்குர்ஆன் தெளிவுபடுத்துகின்றது.

"அவன் சிருஷ்டிகர்த்தாக்களிலெல்லாம் மிக அழகானவன்" (23:14)

இஸ்லாம், மனிதனின் அழகுணர்வை எவ்வகையிலும் மழுங்கடித்து விடாமல், அதனைத் தூண்டுவதிலும், அல்லாஹ்வின் படைப்புக்களூடாக அத்தூண்டுதலின் பிற்பாடான தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் ஈடுபாடு காண்பிக்கின்றது. அவற்றை இஸ்லாமிய வரையறைக்குள் அடக்கி வைப்பதோடு, இஸ்லாமிய இலட்சியவாதங்களுக்கேற்ப நெறிப்படுத்தவும் விழைகின்றது.

இஸ்லாத்தின் அடிப்படை மூதாராங்களான புனித அல்குர்ஆனும் சுன்னாவும் அழகியல் பற்றி பல்வேறு இடங்களில் பிரஸ்தாபிக்கின்றன. அவற்றின் தன்மைகளையும் யதார்த்தங்களையும் கோடிட்டுக் காட்டி, அவற்றின் இயல்புகளின் மீதான அழுத்தத்தையும் முன்வைக்கின்றன. அழகியல் பற்றிப் பேசும் அல்குர்ஆன் 'ஸீனத்', 'அஹ்ஸன்', 'ஹுஸ்ன்', 'ஹஸனாஹ்', 'ஜமீல்', 'குலுக்' போன்ற பல்வேறு சொற்பதங்களைப் பிரயோகித்து அழகியலின் எல்லைகளை வியாபகப்படுத்த முனைவதை அவதானிக்க முடிகின்றது.

அழகியல் கலைகள் எனும் போது குறிப்பாக கட்டடம், ஓவியம், சிற்பம் முதலான அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவையனைத்தும் மார்க்கத்தின் அடிப்படை சட்டவிதிகளுக்கு முரண்படாதவாறான நுணுக்க நிலையில் நெறிப்படுத்தப்பட வேண்டும் என்பதே இஸ்லாத்தின் கட்டளையாகும்.

இஸ்லாம் மனிதனின் படைப்புருவாக்கத்தை அழகியல் நிலையிலேயே நின்று நோக்குகின்றது. அவனது வாழ்வின் அடித்தளங்களில் இவ் அழகியல் நிலையை நிலைபெறச் செய்வதில் முனைப்புடன் ஈடுபாடு காண்பிக்கின்றது. இது பற்றி புனித அல்குர்ஆன் கூறும்போது, "அல்லாஹ்தான் உங்களுக்கு பூமியை நீங்கள் நிலைபெறும் இடமாகவும், வானத்தை ஒரு விதானமாகவும் அமைத்து, உங்களைச் சித்தரித்து அழகான கோணத்திலும் உங்களை அமைத்தான்" (40:64) என்று குறிப்பிடுகின்றது.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*புனித இஸ்லாம் மனிதனுடைய உருவமைப்பில் மாத்திரமன்றி அவனது செயற்பாடுகளிலும் அழகியலின் வெளிப்பாடு தென்படுவதற்கான அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றது. இங்கு அழகியல் செயற்பாடுகளாக இஸ்லாம் அடையாளப்படுத்தி நிற்பது அல்லாஹ்வுடைய கட்டளைக்கு அடிபணிவதையும், சமூகப் பயன்பாடுள்ள அம்சங்களையுமாகும். அல்குர்ஆன் இது பற்றிக் கூறும்போது, "(நபியே!) அழகான பொறுமையாக நீர் பொறுமை செய்வீராக!" (70:05) என்று குறிப்பிடுகின்றது.*

*இஸ்லாம் வெறுமனே அழகியலை விவரிப்பதிலும் வலியுறுத்துவதிலும் மட்டும் நின்றுவிடவில்லை. அதற்கான முன்னுதாரணங்களையும் அவற்றைப் பின்பற்றுவதற்கான வழிகாட்டுதல்களையும் கற்றுத் தருகின்றது. அழகியல் உணர்வுக்கும், நிலைக்கும் மிகச் சிறந்த முன்னோடியாக நபி (ஸல்) அவர்களை இனங்காட்டுகின்ற இஸ்லாம், அவர்களது செயற்பாடுகளிலான பின்பற்றுதலிலேயே அழகியல் முழுமை பெறுகின்றது என்பதை பின்வருமாறு சுட்டிக் காட்டுகின்றது.*

*"நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிலே உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கின்றது" (33:21)*

*நபி (ஸல்) அவர்களின் இயல்பு பற்றி நற்சான்றளிக்கும் அல்குர்ஆன், "நபியே! நிச்சயமாக நீர் மகத்தான நற்குணமுடையவராக இருக்கின்றீர்" (68:04) என்று கூறுகின்றது. நற்குணம் என்பது இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் அழகியலின் உச்சகட்ட வெளிப்பாடாகும். அல்குர்ஆனின் கருத்துக்கொப்ப நபி (ஸல்) அவர்கள் தமது வாழ்வின் அனைத்து நிலைகளிலும் அழகியலை கடைப்பிடிக்கும், வலியுறுத்தும் பண்புள்ளவர்களாக மிளிர்ந்தார்கள். தமது தலையை ஒழுங்குற சீவிக் கொள்வதிலும், உடலையும் உடைகளையும் அழகுபடுத்திக் கொள்வதிலும், ஸஹாபாக்களுக்கு முன்னிலையில் தாம் அழகாகத் தோற்றமளிக்க வேண்டும் என்ற பிரயத்தனத்திலும் நபி (ஸல்) அவர்கள் ஈடுபாடுடையவர்களாக இருந்தார்கள். குறிப்பாக மணம் பூசிக் கொள்வது நபியவர்களுக்கு மிகப் பிரியமான ஓர் அம்சமாக இருந்தது.*

*நபி (ஸல்) அவர்கள் தமது வீட்டினுள் ஒரு பாத்திரத்தில் குறிப்பிட்டளவு தண்ணீரை நிறைத்து வைத்துக் கொள்வார்கள். வீட்டுக்கு வரும் நண்பர்களை சந்திக்க வெளியே வருவதாக இருந்தால், அல்லது வெளியே எங்கேனும் செல்வதாக இருந்தால்*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

நபியவர்கள் அப்பாத்திரத்திலுள்ள தண்ணீரில் முகம் பார்த்து, தமது தாடி தலைப்பாகை முதலானவற்றை சரிசெய்து கொண்டே வெளியே வருவார்கள். நபி (ஸல்) அவர்கள் பிரயாணம் செல்லும் போது தேவையான பொருட்களுடன் சீப்பு, சுருமா, நறுமணம் போன்றவற்றையும் மறவாமல் எடுத்து வைத்துக் கொள்வார்கள். நாள்தோறும் பல தடவை பற் துலக்குவார்கள். எப்போதும் சுத்தமாகவே இருப்பார்கள். இவ்வாறு சுத்தமாகவும் அழகாகவும் இருக்க வேண்டும் பிறரையும் வலியுறுத்துவார்கள். எனவே, நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை வழிமுறைகளாகிய சுன்னா முழுவதும் இஸ்லாமிய அழகியலின் வரையறைகளாகவும் வலியுறுத்தல்களாகவுமே அமைந்துள்ளன எனில் அது மிகையன்று.

மனிதன் மாத்திரமன்றி உலகின் அனைத்து அம்சங்களும் அழகியல் உணர்வுடனேயே படைக்கப்பட்டுள்ளனவென்பது இஸ்லாத்தின் சித்தாந்தமாகும். இதன் மூலம் அழகியலின் எல்லையை மிகப் பரந்தளவுக்கு விஸ்தரிக்கும் நிலையை இஸ்லாமிய எண்ணக்கருவில் அவதானிக்க முடிகின்றது. இது பற்றி அல்குர்ஆன் கூறும் போது, “அவன் படைத்த ஒவ்வொரு பொருளையும் மிக்க அழகாக அமைத்தவன் அவனே. அவன்தான் ஆரம்பத்தில் மனிதனைக் களிமண்ணினால் படைத்தான்” (32:07) என்றும், “நிச்சயமாக நாம் இந்தப் பூமிக்குச் சமீபமாக தாழ்வாக உள்ள வானத்தை சுடரிடும் நட்சத்திரங்களைக் கொண்டு அழகுபடுத்தி வைத்துள்ளோம்” (37:06) என்றும் குறிப்பிடுகின்றது.

மனிதனின் நாளாந்த நடவடிக்கைகளை மட்டுமன்றி அவனது வாழ்வின் இலட்சியத்தை அடைவதற்கான முயற்சிகளிலும் அழகியலின் வெளிப்பாடு தொனிக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் எதிர்பார்ப்பாகும். இதனாலேயே மனித வாழ்வுக்கு இன்றியமையாததான அறிவியல் துறைகளிலும் அழகியல் பிரதிபலிக்க வேண்டும் என்ற வலியுறுத்தலை இஸ்லாம் சூசகமாக முன்வைக்கின்றது. இது பற்றிக் குறிப்பிட வந்த அல்குர்ஆன், “சரித்திரங்களில் மிக அழகானதொன்றை உமக்கு நாம் கூறுகிறோம்” (12:03) என்று குறிப்பிட்டு, நபி யூசுப் (அலை) அவர்களது சரித்திர நிகழ்வுகள் அடங்கிய வரலாற்றுக்கு அழகியல் ஸ்தானத்தைக் கொடுத்து, அறிவியல் துறையிலும் அழகியலின் பிரதிதொனி வெளிப்பட வேண்டும் என்பதை சிந்தனைக்கு வைக்கின்றது.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

எனவே, மனித வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் அழகியலின் நடைமுறை அமைந்திருக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் முக்கிய கருதுகோலாக அமைகின்றது. தனியாக இருக்கும் போது, கூட்டாக இருக்கும் போதும், சமய சமூக நடவடிக்கைகளை அனைத்தின் போதும் அழகியலின் தொடரிருப்பு இன்றியமையாதது என்பதை அல்குர்ஆன் பல்வேறு வசனங்களூடாகத் தெளிவுபடுத்தி வலியுறுத்தியுள்ளது.

ஒரு முஸ்லிமின் நாளாந்த கடமையாகிய தொழுகையின் போது அழகியலின் அவசியம் பற்றி அல்குர்ஆன் கூறுகின்றது: "ஆதமுடைய மக்களே! தொழும் இடத்திலெல்லாம் உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள்" (07:31)

சமய சமூக நடவடிக்கைகளின் போதும் அழகியலின் அவசியம் பற்றி அல்குர்ஆன் கூறுகின்றது: "நபியே! நீர் மனிதர்களை நளினமாகவும், அழகான நல்லுபதேசத்தைக் கொண்டுமே உம் இறைவனது வழியின் பால் அழைப்பீராக. அன்றி, அவர்களுடன் தர்க்கிக்க நேரிட்டால் நீர் அழகான முறையில் தர்க்கஞ் செய்வீராக!" (16:125)

மனித நடத்தைகள் செயற்பாடுகளில் மட்டுமன்றி இயற்கையின் அனைத்து அம்சங்களிலும் இஸ்லாம் அழகியலை பிரஸ்தாபிக்கின்றது. அழகியல் உணர்வுகள் அவசியப்பாடுடையவை என்பதையும், மனித வாழ்வைப் பொறுத்தவரை தவிர்ந்து கொள்ளப்பட முடியாதவை என்பதையும் இதன் மூலம் தெளிவுபடுத்தி நிற்கின்றது.

இயற்கையுடன் இரண்டறக் கலந்திருக்கும் மனிதனானவன், அதனிடமிருந்து எண்ணிறந்த அருட்கடாட்சங்களையும், உடல்-அறிவுத் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்கின்றான். அவ்விதமே இயற்கையில் பொதிந்திருக்கும் அழகியல் பொக்கிஷங்கள் அவனுடைய அழகுணர்வுத் தேவையை நிறைவு செய்கின்றன. உண்மையில் மனிதன் இயற்கையின் அழகியல் தரிசனங்களின் மூலமாக உள நிம்மதியையும், நிறைவையும் பெறுவதுடன் இறைவனின் தெய்வீக அருளின் யதார்த்தங்களையும் சிந்தனையில் பதித்துக் கொள்கின்றான். ஆகவேதான், புனித இஸ்லாம் மனிதனுடைய அழகியலுணர்வைத் தோற்றுவிப்பதற்காக, அதனை ஆற்றுப்படுத்துவதற்காக இயற்கை மூலங்களைக் காட்சிப்படுத்துவதை ஓர் உத்தியாகக்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

கையாண்டிருக்கின்றது. இவ்வுண்மை, கீழ்வரும் வசனத்தில் விவரிக்கப்படுவதை அவதானிக்க முடியும்:

"பின்னர் புகைமண்டலமாக இருந்த வானத்தளவில் திரும்பி, அதனையும் பூமியையும் அவன் நோக்கி, நீங்கள் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி, வாருங்கள் எனக் கூறினான். அதற்கவைகள் நாங்கள் விருப்பத்துடனேயே வந்தோம் எனக் கூறின" (41:11)

இயற்கையின் கூறுகளில் முக்கிய பங்கு வகிப்பதான கால்நடைகள் பற்றி விபரிக்க வந்த இஸ்லாம், அந்தக் கால்நடைகளிலும் அழகியல் உணர்வுகளைத் தேடி நிற்பது இஸ்லாத்தின் அழகியல் பற்றிய பரந்த கண்ணோட்டத்திற்குச் சிறந்த சான்றாக அமைகின்றது.

இது பற்றி அல்குர்ஆன் கூறும்போது, "கால்நடைகளை அவனே படைத்தான். அவற்றில் உங்களுக்காக குளிரைத் தடுத்துக் கொள்ளும் கதகதப்புண்டு. மேலும் நீங்கள் அவற்றிலிருந்து புசிப்பீர்கள். நீங்கள் அவற்றை மாலையில் ஓட்டி வரும் போதும், மேய்ச்சலுக்காக காலையில் ஓட்டிச் செல்லும் போதும் அவற்றில் அழகுமிருக்கிறது" (16:4,5,6) என்று கால்நடைகளிலுள்ள அழகியல் ரசனை பற்றி விபரிக்கின்றது. இவ்வசனமானது, கால்நடைகளின் சில பயன்பாடுகளை எடுத்துக் கூறுவதோடு, அதில் முக்கியவொரு பயன்பாடாக மனிதனுக்கு அவைகளிடமிருந்து அழகியல் பயன்களும் உண்டு என்ற உண்மையையும் எடுத்துக் கூறுகின்றது.

இவ்வசனத்தின் இறுதிப் பகுதியை நோக்கினால், மாலைப் பொழுதுகளிலும் புலரும் காலை வேளைகளிலும் இரைதேடி விரையும் மந்தைகளின் அசைவுகளைப் பார்த்து ரசிக்கும் ஒரு ரம்மியமான காட்சியை உருவகப்படுத்தி நிற்பதை அழகியல் ரசனை உள்ளவர்களால் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

இவ்வுண்மையை உறுதிப்படுத்தும் வகையில்தான் பேரறிஞர் முஹம்மது குதுப் அவர்கள், தமது மன்ஹஜுல் ஃபன்னில் இஸ்லாம் என்ற நூலில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்: "அல்குர்ஆன் அழகியல் கலைத்துவம் தொடர்பாகப் பேசியிருக்கின்ற பல வசனங்களில் இவ்வசனத்தில் தொடரும் ஜமால் (அழகு) என்ற சொல்லே என் இதயத்தில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ஏனெனில், இவ்வசனமானது



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

கால்நடைகளின் சில பயன்பாடுகளை எடுத்துக் கூறி, அதில் விசேடமாக அழகியல் அவசியப்பாட்டையும் பேசியிருக்கின்றது"

மேலும் அவர் விளக்குகளையில், "அழகியல் உணர்வுகளைத் தூண்டும் அல்குர்ஆன் வசனங்கள், வானத்தை அலங்கரிக்கும் நட்சத்திர விளக்குகள், செழிப்பு மிக்க தோட்டங்கள், மலைச்சிகரங்கள், சலசலக்கும் நதிகள், இயங்கும் முற்பகல், இராப்பொழுதுகள் என்பவற்றை விவரிப்பதுடன் மட்டும் வரையறுத்துக் கொள்ளாமல் கால்நடைகளின் அழகியலைக் கூட விவரணப்படுத்தியிருக்கின்றது" என்ற அவருடைய ஒப்பீட்டியல் கருத்து, இஸ்லாம் அழகியலின் அவசியம் தொடர்பாக இயற்கைப் படைப்பினங்களின் துணையால் எடுத்தாளப்பட்டிருக்கும் யதார்த்தங்களை ஆச்சரியமாகத் தெளிவுபடுத்துகின்றது.

எனவே, இஸ்லாம் அழகியல் என்ற எண்ணக்கருவுக்கு மிகப் பரந்த விளக்கத்தையும் தத்துவத்தையும் முன்வைக்கின்றது. இஸ்லாம் அடையாளப்படுத்தும் அழகியலானது, மனிதனின் அகவய-புறவய வாழ்வின் தூய்மையை வலியுறுத்துவதோடு மட்டும் நின்று விடாமல், இயற்கையின் அனைத்து அம்சங்களிலும் அழகியலை சித்தரித்து, அதனூடாக மனிதர்கள் தமது அழகியல் உணர்வுகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் படியாகவும், தமது அழகியலுக்கான முன்னுதாரணமாக இறுதி இறைத்தூதர் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்களையே கைக்கொள்ளும் படியாகவும் வலியுறுத்தி, அற்புதமான ஒரு வாழ்வியல் சித்தாந்தத்தைத் தெளிவுபடுத்தி நிற்கின்றது என்பதை இதனூடாக உணர்ந்து கொள்ள முடிகின்றது.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

# இஸ்லாத்தில் கற்றல் கற்பித்தல்

**உ**லகின் நாகரிகத் துறை வளர்ச்சியில் - அதற்குப் பெரும் பங்களிப்பு நல்கியுள்ள - கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பிரதான இடத்தைப் பெறுகின்றன. இதனை சமூகத்தின் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்குமான முக்கிய காரணியென அடையாளப்படுத்தும் இஸ்லாம் மார்க்கம், இது தவிர்க்க முடியாத சமூகக் கடமையெனவும், ஆன்மீகத்துடன் இரண்டறக் கலந்த பயனுள்ள சமயப் பணியெனவும் வலியுறுத்தி, நற்செயல்களின் உச்சாணிக் கொப்பில் அதனை அமர்த்தி வைத்து நோக்குகின்றது.

இஸ்லாமிய நோக்கில் அறிவைத் தேடுவது ஒவ்வொருவர் மீதும் உள்ள சமயக் கடமையாகும். இஸ்லாத்துக்கு முன் தோன்றிய நாகரிகமிக்க சமுதாயங்கள் அறிவு தேடல் என்பது குறிப்பிட்ட வகுப்பினரின் உரிமையும் சலுகையும் எனக் கருதின. ஆனால், இஸ்லாத்தில் கல்வி விசேட குழுவினருக்கு என்று மட்டுப்படுத்தப்படவில்லை. அறிவு தேடல் மற்றைய மதப் பொறுப்புகள் போன்று சகலருக்கும் கட்டாயமானதாக அமைகிறது.

கற்பிப்பவர் ஆசிரியராகவும், கற்பவர் மாணவராகவும் தொழிற்படுகின்றனர். ஆசிரியர்கள் என்போர், விசுவாசக் கோட்பாட்டினதும் நல்லொழுக்கத்தினதும் மகுடங்களாகத் திகழ்பவர்கள். அவர்கள் அறிவுப் பரப்பின் விஸ்தரிப்பாளர்களாகவும், நாகரிகத்தினதும் கலாசார வளர்ச்சியினதும் சிற்பக் கலைஞர்களாகவும் செயற்படுபவர்கள். உயரிலட்சியம் பூணும் புதிய சமூகத் தோற்றத்தின் காரண கர்த்தாக்களாக இருப்பவர்கள். இஸ்லாத்திலும் இஸ்லாமிய சமூகத்திலும் அவர்களுக்குப் பெருங் கௌரவமளிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் என்போர், அறிவுச் செழுமையின் விளைநிலங்களாகத் திகழ்பவர்கள். அவர்கள், எதிர்கால வெளிச்ச விடியல்களுக்குக் கட்டியங் கூறுபவர்களாகவும், அறிவு ஜீவ வளர்ச்சிக்கான நம்பிக்கை நட்சத்திரங்களாகவும் செயற்படுபவர்கள். இளந்துடிப்பு மிக்க சமூக சீர்திருத்தத்திற்கு வழிகோலுபவர்கள். இஸ்லாத்திலும் இஸ்லாமிய சமூகத்திலும் அவர்களுக்கு மிக்க கௌரவமளிக்கப்பட்டுள்ளது.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*ஆசிரியர்-மாணவர் தொடர்புகள் மிகக் கண்ணியமானவை. அவை பெரும் இலட்சியங்களையும் சமூக வளர்ச்சிக்கான செயலூக்கங்களையும் கொண்டவை. இதனால், ஆசிரியர்களும் மாணவர்களும் தனிப்பட்ட, மற்றும் பரஸ்பர கடமைப்பாடுகள் மீதான வலியுறுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்கமைய ஆசிரியர்-மாணவர்களுக்கான கடமைகளை பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்.*

## மாணவர்கள் மீதுள்ள கடமைகள்

*"அறிவு தேடுவது ஒவ்வொரு விசுவாசியின் மீதும் கடமையாகும்" எனக்கூறிய நபி (ஸல்) அவர்கள், இஸ்லாத்தின் ஏனைய கடமைகளுக்குள்ள அந்தஸ்தை இவ்வம்சத்துக்கு வழங்கி நாகரிக சமூகத்திற்கான புதிய அடையாளமொன்றை ஏற்படுத்தினார்கள். தொட்டியிலிருந்து புதைகுழி செல்லும் வரை அறிவைத் தேடும் படியாக வலியுறுத்தும் நபி (ஸல்) அவர்களின் பொன்மொழி, கல்வியைத் தேடுவதற்குக் குறிப்பிட்ட கால எல்லை தேவையில்லை என்பதையும், கிடைக்கின்ற சகல சந்தர்ப்பங்களையும் ஒருவர் அதற்காகப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்துகின்றது. நபி (ஸல்) அவர்களின் பிறிதொரு ஹதீஸ், "சீனா சென்றேனும் கல்வியைத் தேடிப்பெறு" என மனித சமூகத்தை உற்சாகப்படுத்துகிறது. இங்கு சீனாவை உதாரணம் காட்டியது, ஒருவேளை சீனா வெகுதொலைவிலுள்ள நாடாக அக்காலத்தில் கருதப்பட்டமையாலாக இருக்கலாம். அல்லது அது அக்காலகட்டத்தில் விஞ்ஞானத் துறையினதும் தொழிற் துறையினதும் தொட்டிலாகப் புகழ் பெற்று விளங்கியதனாலாக இருக்கலாம். கல்வியைத் தேடுவதற்கு குறிப்பிட்ட பிரதேச வரையறை கிடையாது என்ற கருத்தை இக்கூற்று தருகிறது.*

*இஸ்லாத்தின் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: "மறுமை நாளில் மனிதரொருவர் சமுகங்கொடுப்பார். அவருக்கு அடர்ந்த மேகத்தைப் போன்று, அல்லது உயர்ந்த மலையைப் போன்று நன்மைகள் திரண்டிருக்கும். அந்நன்மைகளைப் பார்த்து ஆச்சரியமுறும் அவர், 'என் இரட்சகனே! இவை என்ன? இந்நற்செயல்களெவற்றையும் நான் புரிந்திருக்கவில்லையே!' என வினவுவார். அதற்கு அல்லாஹ், 'என்னடியானே! இவை, நீ பிறருக்குக் கற்றுக் கொடுத்த உன்னுடைய அறிவு; உனக்குப் பின்*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*வாழ்ந்தோர் அதனைப் பிரயோகித்து நற்செயல்களில் ஈடுபட்டிருந்தார்கள்' எனக் கூறுவான்"*

*எனவே, கற்பிக்கும் உயர்செயலும், கற்பித்தலில் ஈடுபடக்கூடிய மேதகு ஆசிரியர்களும் மத ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பல்வேறு சிறப்புகளையும், உயர் குணாம்சங்களையும் பெற்றுள்ளனர்.*

*இஸ்லாத்தின் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எவர் அறிவைக் கற்கும் நோக்கில் ஒரு பாதையில் பயணிக்கின்றாரோ, அவர் திரும்பி வரும் வரை புனிதப்போரில் ஈடுபடும் நன்மையைப் பெற்றுக் கொள்கிறார்"*

*மாணவர்கள், தமக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளனர். அவர்களது கட்டளைகளுக்கு அடிபணிந்து, அவர்களை மதித்து வாழும்படியாக வலியுறுத்தப்பட்டுமுள்ளனர். அத்தோடு, தமது கல்வித் தேடலின் போது கடைப்பிடிக்கக் கடமையான ஒழுக்க நெறிகள் பற்றியும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இவ்வகையில், அறிவைக் கற்கும் மாணவர்களுக்குள்ள கடமைகளென இஸ்லாம் அடையாளப்படுத்தும் அம்சங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்;*

***1) சுயகடமைகள்***

*அறிவு என்பது, தூய்மையாக இருக்கிறாற் போன்றே, அதைத் தேடிப்பெறுகின்ற செயலும் மிகத் தூய்மையானதாகக் கொள்ளப்படுகின்றது. அதேபோன்று அறிவைத் தேடுவதன் நோக்கமும் தூய்மையானதாக இருப்பது இன்றியமையாததாகும். இதற்கமைய அறிவைத் தேடும் நோக்கங்களாகக் கொள்ளப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள் பலவற்றை இனங்காட்டியுள்ள இஸ்லாம், அறிவைத் தேடும் விடயத்தின் மீதுள்ள தூய்மைத்துவத்தின் மாறா நிலையையும், அதன் போதான கலப்படமற்ற தூய எண்ணத்தையும் அழுத்தமாக வலியுறுத்துகின்றது. அதாவது, அறிவைத் தேட வேண்டும் எனும் நோக்குடன் காலடியெடுத்து வைக்கும் ஓர்வர், தன் அறிவு பெறுதலின் நோக்கங்கள் எவை என்பதை வரையறை செய்து, அவ்வரையறையை விட்டும் அப்பாற்பட்டு விடாத சுயவாணைக் கட்டளைக்கான அடிபணிதல் கடமையொன்றை தன் மீது திணித்துக் கொள்வது அவசியமாகின்றது. அவ்வாறு வரையறை*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

செய்து கொள்ள வேண்டிய அறிவு பெறுதலின் நோக்கங்களாக இஸ்லாம் இனங்காண்பிக்கும் அம்சங்களை கீழ்க்காணுமாறு தொகுத்து நோக்கலாம்;

**ஃ. சன்மார்க்க விளக்கம்:**

ஒரு மாணவர், தான் கடைப்பிடித்தொழுகும் உயர் வழிபாட்டம்சங்களைக் கொண்ட சன்மார்க்கமான இஸ்லாத்தின் முழுமையான விளக்கங்களைப் பெற வேண்டும் எனும் நோக்குடனும், அதன் மூலமாக இஸ்லாத்தின் மீதான ஐயுறவற்ற முழுத்தெளிவுஉ நிலையையெத் வேண்டும் எனும் நோக்குடனும் அறிவு கற்க முடியும்.

நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: "அறிவின் மூலமாக இறைவனுக்கு வழிபடவும், பணிபுரியவும் முடியும். இம்மையிலும் மறுமையிலுஉம் பேரின்பம் பெறுவது அறிவின் மூலமேயாகும். இம்மையிலும் மறுமையிலும் ஏற்படும் இன்னல்கள் அறிவீனத்தைச் சார்ந்தவையாகும்"

**ஃ. சமூக மேம்பாடு:**

ஒரு மாணவர், தான் சார்ந்துள்ள இஸ்லாமிய சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அனைத்து அழிவாம்சங்களையும் முற்றாக அகற்றியொதுக்குவதன் மூலமாக, மேம்பாடும், அபிவிருத்தியும் கொண்டு புனருத்தாரணத்துக்கு உட்படுத்தப்பட்ட உயர் சமூகமொன்றைக் கட்டியெழுப்ப வேண்டும்; அதன் மூலம் இஸ்லாமிய குறிக்கோள்களை அடைந்து கொள்ள வேண்டும் எனும் நோக்குடனும் அறிவு கற்க முடியும்.

நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: "இஸ்லாத்திற்குப் புத்துயிரளித்து, சமூக மேம்பாட்டுக்குழைக்கும் நோக்குடன் அறிவைக் கற்றுக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் ஒருவர் இறப்பெய்தி விடுவாரானால், சுவர்க்கத்தில் அவருடைய நிலை இறைத்தூதர்களின் நிலைக்கு ஒரேயொரு படியே குறைவானதாயிருக்கும்"

**ஃ. சமூகத்திற்கான வழிகாட்டல்:**

ஒரு மாணவர், தன் சமூகத்தின் நெறிபிறழ் தன்மைகளையும், அநாச்சாரங்களையும் முற்றாகக் களைந்தெறிந்து, இறைவனின் வலியுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட தூய இஸ்லாத்தின் நேரான



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

பாதையில் சமூகத்தை இட்டுச் செல்லும் நோக்குடனும், நபிகளாரின் நடைமுறைகளை உயிர்ப்பித்து அதன் மூலம் உயர்வு தரும் மத விழுமியங்களின் பால் வழிகாட்டி, சமூகத்தை அதனூடாக வழிநடாத்த வேண்டும் எனும் நோக்குடனும் அறிவு கற்க முடியும்.

நபி (ஸல்) அவர்கள் தமது நடைமுறை வழிகாட்டல்களை உயிர்ப்பிப்பவர்களுக்கும், அது தொடர்பான அறிவியல் துறைகளில் ஈடுபடுவோருக்கும் இறையருளை இரைஞ்சிப் பிரார்த்தித்திருக்கின்றமை இதன் அவசியத்திற்கு அழுத்தம் கொடுக்கின்றது.

### ஃ. இறை திருப்தி:

ஒரு மாணவர், அறிவு கற்றலின் மீதான மத நிர்ப்பந்தத்திற்குள் தன்னை உட்படுத்தி, அதன் மூலம் இறைவனின் கட்டளைக்கடிபணிதலால் கிடைக்கப்பெறும் இறை திருப்தியையும மறுமை வெற்றியையும் நோக்காகக் கொண்டும் அறிவு கற்க முடியுஉம். இது மிக அவசியமான நோக்கமாகும். இதல்லாமல், பிறருக்காகவோ, உலக ரீதியான எதிர்பார்ப்புகளுக்காகவோ அறிவு கற்பதை இஸ்லாம் வன்மையாகக் கண்டித்து எச்சரிக்கையும் செய்துள்ளது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எவர், அல்லாஹ்வுக்கன்றி பிறருக்காக அறிவு கற்கின்றாரோ அதன் மூலம் அல்லாஹ்வையன்றி பிறரைக் குறிக்கோளாகக் கொள்கின்றாரோ அவர் நரகில் தனக்கெனவோர் இடத்தைத் தயார்படுத்திக் கொள்ளட்டும்"

### ஃ. இஸ்லாத்தின் களங்கம் துடைத்தல்:

ஒரு மாணவர், தான் ஏற்றுள்ள இஸ்லாம் மார்க்கத்திற்கெதிராகவும், அதனை மாசுறுத்துவதற்காகவும் உலகில் பரப்பப்படுகின்ற பொய்ப்பிரசாரங்களையும், தவறான குற்றச்சாட்டுகளையும் முறியடித்து அவற்றுக்குத் தக்க பதிலளித்து, இஸ்லாத்தினது சர்வ வியாபகத் தன்மையின் அழுத்தப்பாட்டையும், அனைத்து அசூசைகளுக்கும் வீழ்ச்சிகளுக்கும் மூடுதிரையாக உள்ள அதன் தூய்மைத்துவத்தையும் தெளிவுபடுத்தி, இஸ்லாத்தின் களங்கம்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*துடைத்து, அதனை உறுதி மிக்க ஸ்திரத்தன்மையுடன் உலகில் நிறுவ வேண்டும் எனும் நோக்குடனும் அறிவு கற்க முடியும்.*

**ஃ. சமய அனுஷ்டானங்களின் மீதான ஊக்குவிப்பு:**

*ஒரு மாணவர், தன் சமூக மக்களனைவரும் தூய இஸ்லாத்தை - அதனுள் பூரணமாக நுழைந்து - முழுமையாகக் கடைப்பிடித்து, அதன் வலியுறுத்தலின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற அனைத்து வழிபாட்டனுஷ்டானங்களையும் உள்ளார்வத்துடன் ஒழுகுவதற்கான ஊக்குவிப்புகளை நல்க வேண்டும் எனும் நோக்குடனும், இஸ்லாத்தை - அதன் அடிப்படை யதார்த்தத் தன்மைகளுடன் - அவர்களுக்கு முன்வைக்க வேண்டும் எனும் நோக்குடனும் அறிவு கற்க முடியும்.*

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நன்மையின் பால் ஊக்குவிப்பவர், அந்நன்மையையே செய்தவரை நிகர்த்தவராவார்"*

**ஃ. அமுல்படுத்தல்:**

*ஒரு மாணவர், இஸ்லாம் போதிக்கும் மதவாழ்வியல் கடமைகளையும், வணக்கங்களையும் அவற்றின் அடிப்படை மற்றும் மேலதிக நிபந்தனைக் குறிப்புகளோடும், தரவுகளோடும் தெளிவுற விளங்கி உடனுக்குடன் அவற்றை அமுல்படுத்தும் நற்செயலில் ஈடுபட்டுப் பயன்பெற வேண்டும் எனும் நோக்குடனும் அறிவு கற்க முடியும்.*

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எவர், கற்றதை அமுல்படுத்தி நற்செயல் புரிகின்றாரோ அவருக்கு அல்லாஹ், அவர் அறியாத விடயங்களையெல்லாம் உரிமைச் சொத்தனெக் கற்றுக் கொடுப்பான்"*

**ஃ. நற்பண்புகளை வளர்த்தல்:**

*ஒரு மாணவர், உண்மை, நேர்மை, பொறுமை, அன்பு, ஒற்றுமை, உளத்தூய்மை, நன்றி, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, சகோதரத்துவ உணர்வு முதலான அறப்பண்புகளை அறிந்து, தன்னுள் அவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனும் நோக்குடனும், அவற்றின் மூலமான பயன்பாட்டகவைகளை பிறருக்குத் தெளிவுபடுத்தி, பிறரது சலனங்களையும் ஒழுகுதலின் மீதான ஆர்வத்தையும் அவற்றின் பக்கம் திருப்ப வேண்டும் எனும் நோக்குடனும் அறிவு கற்க முடியும்.*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உங்களெல்லோரிலும் அதிக சிறப்பு வாய்ந்தவர் அழகிய நற்குணமுடையவரும், அதிக உதவி செய்பவருமாவார்"*

*"முஃமின்களில் பரிபூரணத்துவ ஈமானுடையவர் அழகிய நற்பண்புடையவரே"*

## *2) ஆசிரியர்களுக்காற்றும் கடமைகள்*

*மாணவர்கள், தமக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளனர். அவர்களது கட்டளைகளுக்கு அடிபணிந்து, அவர்களை மதித்து வாழும்படியாக வலியுறுத்தப்பட்டுமுள்ளனர். அத்தோடு, தமது கல்வித் தேடலின் போது கடைப்பிடிக்கக் கடமையான ஒழுக்க நெறிகள் பற்றியும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.*

*அறிவினுடைய பயன்பாட்டின் பரப்பும், மனித வாழ்வில் அதன் இடையறா அவசியத் தன்மையின் உச்ச நிலைச் செயற்சொரூபமும் ஆசிரியருடைய ஆளுமையினூடாகவே வெளிக்கொணரப்படுகின்றன. ஒரு மாணவருடைய அறிவியல் துறை விஸ்தரிப்பில் மட்டுமன்றி, சமூக வாழ்க்கைப் பிரக்ஞையின் உயிரோட்டத்திலும், அதன் புரிந்துணர்விலும் ஆசிரியரின் பங்களிப்பு மிகப்பாரியதாகும். இப்பங்களிப்புகளின் மீதான நன்றியறிதலாக, அல்லது மனித இயல்பினது மெய்நிலை உயர்தன்மையின் வெளிப்பாடாக அவ் ஆசிரியர்களைக் கண்ணியப்படுத்துவதும், அவர்களை மதித்து அவர்களுக்குரிய அந்தஸ்தை தாரதம்மியமற்ற ரீதியில் கொடுப்பதும் மாணவர்கள் மீதுள்ள அவசியக் கடமையாகும்.*

### *ஃ. கண்ணியப்படுத்தல்*

*ஆசிரியரை மதிப்பதன் மூலமாக, மாணவர்களின் கற்றலில் இறைவனின் ஆசியும், அருளும் கிடைக்கப் பெறுகின்றன. ஆசிரியரும் அன்பார்ந்த நேசம் கொள்வார். பயபக்தியும், பரிசுத்த உணர்வும் தோன்றி, இறைவனே அவர்களுக்கு ஆசிரியராகி விடுகின்றான். புலனுணர்வுகளுக்குட்பட்டவை மட்டுமன்றி, அப்பாற்பட்டவையும் தெளிவான ஞானமாக அவர்களுக்கு ஊட்டப்படுகின்றன.*

*ஆசிரியரை மதித்தலென்பது மாணவர்களின் எண்ணம், சொல், செயல் ஆகிய அனைத்தின் மூலமாகவும் வெளிக்கொணரப்படும்*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

அம்சமாகும். ஆசிரியர் எவ்வகையிலும் மனஸ்தாபத்திற்கோ, உள்வேதனைக்கோ ஆட்படாத வகையில் தமது ஒவ்வொரு செயற்பாட்டையும் நெறிப்படுத்திக் கொள்வது மாணவர்கள் மீதுள்ள கடமையாகும். ஆசிரியரைப் பற்றித் தவறாக எண்ணுவது, அவரது குறைகளையும் பலவீனங்களையும் அவர் முன்னிலையிலோ மறைவாகவோ பேசி நகையாடுவது, அவரைப் புண்படுத்தும் வகையில் நடந்து கொள்வது போன்ற அனைத்து இழிவான பண்புகளையும் முற்றாகக் களைந்து விட்டு, ஆசிரியரைப் பற்றி எப்போதும் உயர்வாகவே எண்ணுவது, அவரது ஆளுமையையும் அழகுப் பண்புகளையும் எடுத்துக் கூறி அவரைப் புகழ்வது, அவருக்கு மகிழ்வையும் திருப்தியையும் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்வது போன்ற அனைத்து உயர்வான பண்புகளையும் கைக்கொள்ள வேண்டியது மாணவர்களுக்கு அவசியமாகும்.

### ஃ. கட்டுப்படுதல்

ஆசிரியரின் கட்டளைக்குக் கட்டுப்படுவதும் கீழ்ப்பணிந்து நடப்பதும் அவருக்கான மதிப்பளித்தலின் ஒரு பகுதி அம்சங்களாகும். மத அனுஷ்டானங்கள், சமூக விவகாரங்களில் மாத்திரமன்றி பாடப் பயிற்சிகளை நிறைவேற்றல், வினாக்களுக்கு விடை எழுதல் முதலான கற்றலுடன் தொடர்புடைய விடயங்களிலும், ஆசிரியருடைய சுயதேவையை நிறைவேற்றிக் கொடுத்தல் முதலான தனிப்பட்டு அவருடன் சம்பந்தப்படும் அம்சங்களிலும் ஆசிரியருக்குக் கட்டுப்பட்டு நடக்கின்ற போதே, அவருடைய கட்டளைக்கான கட்டுப்படுதலென்பது பரிபூரணத்துவத்தை அடைய முடியும்.

மாணவர்கள், ஆசிரியரின் அறிவூட்டலையும் ஒழுக்கப் பயிற்றுவிப்பையும் திருப்தியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். அச்சமயங்களில் ஆசிரியர்கள் கடினப்போக்குடனோ மென்தன்மையுடனோ எவ்வாறு நடப்பினும் அவற்றையிட்டு அதிருப்தியை வெளிப்படுத்தக் கூடாது.

இவற்றோடு, ஆசிரியருக்குப் பணிவிடை செய்தல், அவரதும் அவரது குடும்பத்தினரதும் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுத்தல் என்பனவும் முக்கிய அம்சங்களாகும். மற்றும் அவருக்கு முன்னிலையில் சப்தத்தை உயர்த்திப் பேசுதல், அவருக்கு முன்னால் நடத்தல், அவரது இருப்பிடத்தில் அமர்தல், அவருக்கு



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

வெறுப்பான செயலைச் செய்தல் முதலான கண்ணியமற்ற செயல்களனைத்தையும் தவிர்ந்து கொள்வதும் ஆசிரியருக்கு மதிப்பளிக்கும் அம்சங்களாகும்.

மொத்தத்தில், பாவங்களென சமயம் அடையாளப்படுத்தியுள்ளவற்றைத் தவிர்ந்த ஏனைய அனைத்து விடயங்களிலும் ஆசிரியருக்கு அடிபணிந்து, எந்நிலையிலும் அவருக்கு கோபத்தை ஏற்படுத்தாதவாறும், எல்லா நிலையிலும் அவரது திருப்தியைக் குறிக்கோள்படுத்தியவாறும் நடந்து, அவருக்கு மனமகிழ்வையும் நிம்மதியையும் பெற்றுக் கொடுப்பதே மாணவர்கள் ஆசிரியருக்கு ஆற்ற வேண்டிய கடமையாகும் எனச் சுருக்கமாகக் கூறலாம்.

இஸ்லாத்தின் நான்காம் ஆட்சியாளரான ஹஸ்ரத் அலீ (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள்: "எவர் எனக்கு ஓரெழுத்தைக் கற்றுத் தருகின்றாரோ அவருக்கு நான் அடிமை. அவர் விரும்பினால் என்னை விற்றுவிடலாம். விரும்பினால் உரிமையிடலாம். விரும்பினால் வேலைக்கமர்த்திக் கொள்ளலாம்"

உலகம் முழுவதையும் ஆண்ட முற்கால இறைநேச ஆட்சியாளரான துல்கர்னைன் (அலை) அவர்களிடம், "தாங்கள், தங்களது தந்தையாருக்கு வழங்கும் கௌரவத்தைப் பார்க்கிலும் தங்களது ஆசிரியருக்கு அதிக கௌரவத்தை வழங்குகின்றீர்களே!" என வினவப்பட்டது. அதற்கவர்கள் பதிலிறுத்தார்கள்: "என்னுடைய தந்தை, அழிந்து போகும் நிலையற்ற என் இவ்வுலக வாழ்வின் காரணகர்த்தா. ஆனால், என்னைப் பயிற்றுவிக்கும் என் ஆசிரியரோ, நித்தியத் தன்மை மிக்க என் மறுவுலக வாழ்வின் வெற்றிக்கான காரணகர்த்தா"

"அறிவு போதிக்கும் ஆசிரியருக்கு மாணவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளாவன; அவரைக் கண்ணியப்படுத்துவது, அவரது இருப்பிடத்துக்கு மரியாதையளிப்பது, அவருக்கு முன்னால் பவ்யமாக அமர்ந்து அவரது கருத்தாடல்களைச் செவிமடுப்பது, அவர் முன்னிலையில் சப்தத்தை உயர்த்தாதிருப்பது, அவரிடம் கேட்கப்பட்ட வினாவுக்கான விடையை தான் முந்திக் கொண்டு சொல்லாதிருப்பது, அவரது இருப்பிடத்தில் அமர்ந்து பிறருடன் உரையாடாதிருப்பது, பிறரைப் பற்றி அவரிடம் புறம் பேசாதிருப்பது, அவரைப் பற்றி பிறர் புறம் பேசுவதை அனுமதிக்காதிருப்பது, அவரது குறைகளை மறைத்து, சிறப்புகளை மட்டும் வெளிப்படுத்துவது, அவரது பகைவர்களுடன்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

தோழமையும், அவரது நண்பர்களுடன் பகைமையும் கொள்ளாதிருப்பது போன்ற விடயங்களாகும்” என முஸ்லிம் கல்வியியலாளர்கள் விளக்கமளித்துள்ளார்கள்.

## ஆசிரியர்கள் மீதுள்ள கடமைகள்

ஒரு மாணவர், நந்நோக்கத்துடன் அறிவைக் கற்று அதன் மூலம் தன் சுயசெயற்பாடுகளை சீரமைத்து நற்பண்புகளையும் நடைமுறைப்படுத்தி வருவாரானால், அவர் இறைவனிடத்தில் உயரந்தஸ்தை அடைந்து கொள்வார். இறைதிருப்தியும் அருளும் அவர் மீது வருஷிக்கின்றன. இத்தகைய மாணவர்களுடன் ஒத்திசைத்து நோக்குமிடத்து, ஆசிரியர்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் பரந்த வியாபகத் தன்மை கொண்டவையாக அமைகின்றன. இதற்கமைய ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தி நோக்கலாம்:

### 1) சுயகடமைகள்

ஆசிரியர்களை, மாணவர்களது ஆன்மாவின் தந்தையர் என இஸ்லாமியப் பாரம்பரியங்கள் தெளிவுபடுத்துவதன் மூலம், ஆசிரியர்கள் மீது அழுத்திச் சுமத்தப்பட்டுள்ள பெரும் பொறுப்பினதும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான பொதுநலச் சிந்தனையினதும் அவசியத் தன்மை நன்கு தெளிவுபடுத்தப்படுகின்றது.

மாணவர்களது எதிர்காலத்தைத் தீர்மானிக்க முடியுமான பெரும் ஆளுமையைத் தம்முள் கொண்டிருக்கும் ஆசிரியர்கள், தமது கடமைகளை நன்குற விளங்கி பொறுப்புணர்ச்சியுடனும், வியாபகக் கண்காணிப்புடனும் நடந்து கொள்ள வேண்டும். இதற்கு பொதுநலச் சிந்தனை மிக அவசியமாகின்றது.

பொது நலச் சிந்தனை என்பது, மனிதாபிமான உணர்வுகளில் மிக உயர்ந்த ஓரம்சமாகும். ஒரு மனிதன் தன் கண்காணிப்பையும், சேவை மனப்பாங்கையும், இரக்க சுபாவத்தையும் தன்னுடனோ, தான் சார்ந்தவர்களுடனோ மாத்திரம் மட்டுப்படுத்திவிடாது, சமூகத்திலுள்ள ஒவ்வொரு பிரஜையை நோக்கியும் அவற்றை விஸ்தரிப்புச் செய்து, மனதுக்கும் மனச்சாட்சிக்கும் விரோதமில்லாது நடந்து கொள்வது தொடர்பான உணர்வோட்டமே பொதுநலச் சிந்தனை எனலாம்.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

இக்கருதுகோலுடன் ஆசிரியர்களது யதார்த்தப் பண்புகளை ஒப்புநோக்குகின்ற போது, பொதுநலச் சிந்தனையென்பது ஒவ்வொரு ஆசிரியருக்கும் மிக அத்தியாவசியப் பண்பென்பதைத் தீர்மானிக்கலாம். இன்னும் சொல்வதானால், பொதுநலச் சிந்தனையின் மூலமாகவே ஆசிரியர்களுடைய தூய்மைத்துவம் பேணப்பட்டு, அவர்களது கடமைகளும் முழுமை பெறுகின்றன எனலாம்.

பெற்றோர், தமது பிள்ளைகள் மீது பேரன்பு கொண்டிருப்பர். அவர்களது பண்பியலின் பரிசுத்தத்திற்கும், அகவய - புறவய ஒழுக்க மேம்பாட்டுக்கும் மிக்க கரிசனை கொண்டுழைப்பர். இக்கரிசனையின் ஒரு பகுதியாகவே, பிள்ளைகளை அவர்கள் அறிவு கற்க அனுப்பும் நடவடிக்கை அமைகின்றது. இது அப்பெற்றோர், ஆசிரியர் மீது கொண்டுள்ள மிக உயர்ந்த நம்பிக்கையின் பிரதிதொனியாகும். எனவே, இந்நம்பிக்கை சற்றும் பாதிப்புக்குட்படாத வகையில் ஆசிரியர் செயற்படுவதற்கு பொதுநலச் சிந்தனையே இங்கு அவசியமாகின்றது.

ஆசிரியர்கள், தமது மாணவர்களை தம் சொந்தப் பிள்ளைகளினும் உயர்வாகவும் அன்பாகவும் நடாத்த வேண்டும். தம் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் நின்று, மாணவர்களின் கல்வி வளர்ச்சியையும் ஒழுக்க மேம்பாட்டையும் எதிர்கால சுபீட்சத்தையும் மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயலாற்ற முனைய வேண்டும்.

சுயகோபதாபங்களை சாதிக்கும் தளமாகவோ, தம் வாழ்வை மேம்படுத்திக் கொள்ளும் களமாகவோ மாணவர்களை நோக்கும் பண்பு, ஆசிரியர்களிடம் இருக்கக் கூடாத மிக அபாயகரமான பண்பாகும். ஒவ்வொரு மாணவரும் தான் சார்ந்துள்ள சமூகத்தை நாளை வழிநடாத்தப் போகும் வழிகாட்டிகள், அல்லது தலைவர்கள் என்ற உயர்ந்த எண்ணக் கருவுடனும், மாணவர்களுக்குக் கற்பிக்கும் இச்செயல் சமூகத்திற்குத் தானாற்றும் மாபெரும் சேவையென்ற விரிந்த உள்ளுணர்வுடனும் ஆசிரியர்கள் சேவையாற்றுகின்ற போதே, அவர்கள் பொதுநலச் சிந்தனையுடையோராகவும், அதன் மூலம் தம் கடமைகளை ஒழுங்குற முழுமைப்படுத்தியவர்களாகவும் ஆக முடியும்.

ஏனைய மதப்பாரம்பரியங்கள் பெற்றோருக்கு அடுத்த ஸ்தானத்தையே ஆசிரியர்களுக்கு வழங்கியிருந்தாலும், பிள்ளைகளின் எதிர்கால சுபீட்சம், சமூக மறுமலர்ச்சி முதலான



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

விடயங்களின் முக்கியத்துவத்தினடிப்படையில், இஸ்லாமியப் பாரம்பரியங்கள் பெற்றோரை விடவும் முதன்மைப்படுத்தப்பட்ட உயரந்தஸ்தை ஆசிரியர்களுக்கு வழங்கியுள்ளமையானது அவர்களது பொதுநலச் சிந்தனையினதும், கடமைகளினதும் அவசியத் தன்மைக்கு மிகுந்த அழுத்தம் தருமம்சமாய் உள்ளது.

### 2) மாணவர்களுக்காற்றும் கடமைகள்

மாணவர்களுக்கு அறிவைக் கற்பிக்கும் ஆசிரியர்கள், மாணவர்களது உள்வாங்கற் தன்மையை விஸ்தீரணம் செய்து, அதற்கேற்றவாறான பயிற்றுவிப்புகளையும் முறையாக ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். பயிற்றுவிப்புகளென்பவை, ஆசிரியரின் ஆளுமையினளவைப் பொறுத்தே தரநிர்ணயம் பெறுவதால், ஆசிரியர்கள் இவ்விடயத்தில் தமது முழு ஆளுமையையும் வெளிப்படுத்தி மிக நேர்த்தியானதும், பயனுள்ளதுமான முறையில் தமது பயிற்றுவிப்புகளை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில், இப்பயிற்றுவிப்புகளே மாணவர்களது எதிர்காலத்தையும், வாழ்வின் உள்ளார்ந்த பெறுமானத்தையும் தீர்மானிப்பவையாக விளங்குகின்றன. இப்பயிற்றுவிப்புகள் வாழ்க்கைக்குகந்த அம்சங்களைக் கொண்டிருந்தாலும், தகாத அம்சங்களைக் கொண்டிருந்தாலும், அவை மாணவர்களது உள்ளங்களில் விரைவாக ஊடுருவி உடனடியாகவே அவர்களது செயல்களில் பிரதிபலிக்குமளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதனாற்றான் மாணவர்களுக்கான ஆசிரியர்களின் பயிற்றுவிப்பு ஆன்மீக நறுமணம் கமழ்வதாகவும், சிறு சிறு துர்ச்செயல்களையும் முற்றாக அகற்றியொதுக்குவதாகவும் அமைய வேண்டுமென இஸ்லாத்தின் வலியுறுத்தல் பேசுகின்றது. இதற்கமைய ஆசிரியர்களின் பயிற்றுவிப்புகளைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தி நோக்கலாம்:

#### அ. ஆசிரியர் தெரிவு:

நிலைமைகளுக்கும் இடச் சூழ்நிலைகளுக்கும் ஏற்றவாறாக உள்ள நிலையில், மாணவர்கள் தமது ஆசிரியர்களைத் தாமே தேர்ந்தெடுத்துக் கொள்ள அனுமதியளிக்கப்பட வேண்டும். நற்குணமும் அறிவும் ஆளுமையும் கொண்ட சிறப்பான ஆசிரியர்களை மாணவர்கள் தெரிவு செய்ய வேண்டும். இடம், அல்லது மாணவர்களின் சமகால தன்மையைப் பொறுத்து, ஆசிரியர்கள் மீதான சுயதெரிவு மாணவர்களுக்கு



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

முடியாதிருந்தால், அவர்களுக்கு மிகப் பொருத்தமான ஆசிரியர்களை மாணவர்களுடன் தொடர்புடையோர், அல்லது உயர்மட்டத்திலுள்ளோர் தெரிவு செய்து கொடுக்க வேண்டும். இது மிக முக்கியமான விடயமாகும். ஏனெனில், ஆசிரியருடைய சுய குணாதிசயங்களும், பழக்க வழக்கங்களும் அவர்களால் பயிற்றுவிக்கப்படும் மாணவர்களிடம் மிக விரைவாகத் தொற்றிக் கொள்கின்றன. தவிரவும், மாணவர்கள் தாமாகத் தேர்ந்தெடுக்கும் ஆசிரியருடைய விடயத்தில் மிக்க கவனம் செலுத்துவதோடு, அவருக்குக் கட்டுப்படுவதிலும், அவருடைய முன்மாதிரிகளைக் கைக்கொள்வதிலும் ஆர்வமும் அதிக விருப்பும் கொண்டிருப்பர் என்பது திண்ணம்.

**௬. அன்பும் பாராட்டும்**

ஆசிரியர்கள், தமது கற்பித்தலின் ஒவ்வொரு விடயத்திலும் அன்புடனும் மென்மையுடனும் நடந்து கொள்வது அவசியமாகும். மிக அவசியப்படும் சந்தர்ப்பம் அல்லாத ஏனைய எச்சந்தர்ப்பங்களிலும் அவர்கள் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்கக் கூடாது. பாசம் மிக்க தாயின், அல்லது தந்தையின் உணர்வலைகளின் உள்ளீடுகளது ஆளுகைக்கு உட்பட்டவர்களாக அவர்கள் நடந்து கொள்ள வேண்டும். எந்த நிலையிலும் மாணவர்களைப் பரிகாசம் செய்து, இழிவுபடுத்தி, அவர்களது தன்மானத்தைப் பாதிப்புக்குள்ளாக்குவதையும், ஏனையோர் மத்தியில் தலைகுனிய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அவர்களை உள்ளாக்குவதையும் முற்றாகத் தவிர்ந்து கொள்ள வேண்டும். எல்லா மாணவர்களையும் சம அந்தஸ்தில் நோக்குவதுடன் அவர்களுடனான உரையாடல்களின் போது, கண்ணியமான நாகரிகமான சொற்பிரயோகங்களையே கையாள்வதும் அவசியமாகும். ஏனெனில், ஆசிரியர்களின் வார்த்தைப் பிரயோகங்கள் மாணவர்களிடையே பெரும் தாக்கம் செலுத்துவதோடு, விரைவாகவே அவை அவர்களில் தொற்றிக் கொண்டும் விடுகின்றன.

அதேவேளை, மாணவர்களது திறமைகளையும் நற்செயற்பாடுகளையும் உடனுக்குடன் ஊக்குவித்து, பாராட்டுகளையும் பரிசில்களையும் வழங்கி உற்சாகப்படுத்துவதும் ஆசிரியர்கள் மீதுள்ள கடமையாகும். இப்பாராட்டுகள், மாணவர்களுடைய அறிவுத் தேடல் முயற்சியில் மிகப் பெரும் உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் ஏற்படுத்துபவையாகும்.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

ஆசிரியர்கள் மீதுள்ள கடமைகளினது அழுத்தச் செழுமை பற்றி பிரபல முஸ்லிம் கல்வியியலாளர் இமாம் ஸைனுல் ஆபிதீன் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்: "கற்பித்தலின் மீதுள்ள பெரும் பொறுப்பை நன்கறிந்து கொள்ளுங்கள். இறைவன், தனது அறிவை உங்களுக்கு வழங்கி, தனது களஞ்சியங்களைத் திறந்து உங்களுக்கு ஞானத்தையும் ஊட்டியிருப்பது அவ் அறிவின் மீதுள்ள பொறுப்பை உங்கள் மீது சுமத்துவதற்காகவே. பிறருக்கான கற்பித்தற் கடமையை நீங்கள் ஒழுங்குற நிறைவேற்றினால், இறைவன் அவனது பெருஞ்சிறப்புகளை உங்கள் மீது அதிகரிக்கச் செய்வான். அவ்வாறின்றி, உங்களிடமுள்ள அறிவை பிறருக்குக் கற்பிக்காமலும், உங்களது கற்பித்தற் கடமையைப் புறக்கணித்தும் நடப்பீர்களானால், உங்களது அறிவை உங்களிடமிருந்து பிடுங்கி அகற்றி விடுவதும், பிறருள்ளங்களிலிருந்து உங்களது ஸ்தானங்களைக் கீழிறக்கி விடுவதும் இறைவனுக்கு நிர்ப்பந்தமாகிவிடும்"

### ஃ. நடைமுறைப் பிரயோகம்

அறிவைப் போதிக்கும் ஆசிரியர்கள், அதனை வெறும் ஏட்டுக் கல்வியின் வரையறைக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தாது, செயலுருவாக்கத்தின் பாலும் அதன் பரிமாணத்தை வளர்ச்சியுறச் செய்வது அவசியமாகும். அதாவது, தாம் கற்பிக்கும் விடயங்களை மாணவர்கள் உடனுக்குடன் தம் நடைமுறையில் பிரயோகித்துப் பயன்பெறுவதற்கான சாத்திய வாய்ப்புகளை ஆசிரியர்கள் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இது மாணவர்கள், தாம் பெற்ற அறிவில் பூரணத்துவத்தையும் தெளிவையும் எய்த வழிவகுப்பதோடு, அவர்களது அறிவுத் தேடலிலான ஆன்ம திருப்திக்கும் களம் அமைப்பதாய் அமையும்.

இந்நடைமுறைப் பிரயோகத்தில் ஆசிரியர்களின் பங்கு மகத்தானது. இங்கு ஆசிரியர்கள் தமது சமூகக் கடமையையும் அதன் உள்ளார்ந்த அம்சங்களையும் நன்கு நினைவில் இருத்திக் கொண்டு செயலாற்றத் தலைப்பட வேண்டும். ஏனெனில், ஆசிரியர்கள் போதனைகளையும் அவற்றை நடைமுறைப்படுத்தும் படியான வலியுறுத்தற் கட்டளைகளையும் விட அவற்றைத் தம் வாழ்வில் கைக்கொள்ளுகின்ற அவர்களின் முன்மாதிரிச் செயற்பாடுகளே மாணவர்களில் பெரும் தாக்கம் செலுத்தி, இவ்விடயத்திலான இலட்சியத்தை எய்துவதற்கான வழிகளை இலகுபடுத்துவதாய் அமையும்.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

## ✿. அளவுத் தெரிவு

ஆசிரியர்கள், தம் கீழுள்ள ஒவ்வொரு மாணவரினதும் திறமை, உள்வாங்கற் தன்மையின் கொள்ளளவு, ஆளுமை, உட்பரிமாணம் முதலான அனைத்து அம்சங்களையும் நன்கு விளங்கி அவற்றுக்கேற்றவாறாகவும், எல்லா மாணவர்களையும் அரவணைத்துச் செல்லக்கூடியதாகவும் தமது கற்பித்தல் முறைகளை அமைத்துக் கொள்வது அவசியமாகும். அவ்வாறன்றி, மாணவர்களின் சிந்தனையோட்டம் எட்டிப் பிடிக்கவே முடியாத, அவர்களால் விளங்கிக் கொள்ள முடியாத விடயங்களை - அவற்றின் யதார்த்தச் செறிவுடன் - கற்பிக்க முனைவது, அறிவின் மீதான மாணவர்களின் விரக்திக்கும், ஆசிரியர்கள் மீதான அதிருப்திக்குமே வழிவகுக்கும். அத்தோடு, கற்பித்தலில் உள்ள பல்வேறு முறைகளில் மாணவர்களது ஏகோபித்த விருப்பும், தெரிவும் எம்முறையில் அதிகமாக உள்ளதோ அம்முறையையே ஆசிரியர்கள் தெரிவு செய்து கொள்வது அவர்களது பயிற்றுவிப்புப் பணிக்கு மிக்க பயனுள்ளதாக அமையும்.

## ✿. தவறுகளும் தண்டனைகளும்

பொதுவான மனித சுபாவத்துடைய அழுத்தமான பிரதிபலிப்பின் விளைவால் சிலவேளைகளில் மாணவர்கள் ஏதாவது தவறுகளில் அல்லது குற்றங்களில் ஈடுபடக்கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆசிரியர்கள் மிக அவதானமாக இருக்க வேண்டியது அவசியமாகும். மாணவர்கள் விடும் தவறுகளை அன்பு கலந்த அறிவுபூர்வமான சிறந்த நல்லுபதேசங்களினாலும், மன்னிப்புகளினாலுமே திருத்த முயற்சிக்க வேண்டும். இம்முயற்சியின் பயன்பாடு முற்றாக அற்றுப் போய்விடுகின்ற மிக இறுக்கமான சந்தர்ப்பத்தில் மட்டுமே, இலகுத் தண்டனைகளுக்கு அம்மாணவர்களை உட்படுத்துவது தொடர்பாக பரிசீலித்துத் தீர்மானிக்க வேண்டும்.

எந்நிலையிலும் உடற்காயங்கள் ஏற்படும்படியான மூர்க்கத்தனமான தண்டனைகளை மாணவர்கள் மீது பிரயோகிக்கக் கூடாது. தத்தமது சுய விருப்பு வெறுப்புகளை, கோபதாபங்களை சாதிக்கும் தளமாகவும் மாணவர்களை நோக்கக் கூடாது. தண்டனைகளின் போது மாணவர்களின் மரியாதை, சுய கௌரவம் என்பற்றையும் மறந்து விடக்கூடாது.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

“பெரியோருக்கு மரியாதை செய்யாதோரும் சிறியோரில் இரக்கம் காண்பிக்காதோரும் எம்மைச் சார்ந்தோரல்ல” என நபி (ஸல்) அவர்கள் கூறியிருப்பது இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

எனவே, கற்றல் கற்பித்தலுடன் தொடர்புடைய மாணவர்கள் ஆசிரியர்கள் என்போர், பரஸ்பர கடமைப்பாடுகள் பலவற்றின் பால் வலியுறுத்தப்படும் கட்டுக்கோப்பான சமூக அமைப்பை இஸ்லாம் உருவாக்கியுள்ளது. இச்சமூக அமைப்பு, கற்றல் கற்பித்தல் என்பவற்றுடன் சமூக உயிரோட்டத்திற்கு இன்றியமையாத மற்றும் பல அம்சங்களின் சீராக்கத்திற்கான சிறந்த வழிகாட்டல்களைக் கொண்டிருக்கின்றது. அத்தகைய வழிகாட்டல்களே இன்றைய உலகின் உடனடித் தேவையாகவும் இருக்கின்றன.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

# இஸ்லாம் வலியுறுத்தும் ஜிஹாதும் அதன் பண்புகளும்

*'ஜிஹாத்' எனும் சமயப் புனிதத்துவம் வாய்ந்த பணி, மிக எளிய செயன்முறையாக சித்தரிக்கப்பட்டு வரும் இக்காலச் சூழலில், அது தொடர்பான பூரண விளக்கத்தைப் பெறுவது சமூகக் கடமையாகும்.*

*ஜிஹாத் என்பது இஸ்லாமிய தீவிரவாதத்தைக் குறிக்கும் ஒரு சொற்பிரயோகம் என இஸ்லாத்திற்கு வெளியிலுள்ள சிலராலும், ஜிஹாத் என்பது முற்று முழுதான ஓர் ஆயுதப் போராட்டம் என இஸ்லாத்தின் உள்ளே இருக்கும் சிலராலும் புரிந்து கொள்ளப்பட்டுள்ள சூழல் தற்போது உள்ளது. இவ்விரு சிந்தனைகளுமே தவறானவையாகும். இத்தகைய தவறான புரதலுக்கு தீவிரமான சமய விரோதப் போக்கும், அறிவீனமான சமய சார்புப் போக்குமே காரணமெனலாம். இவ்விரண்டு போக்குகளையும் புறந்தள்ளி சிந்தனைத் தூய்மையுடன் விளக்கம் பெற முனைபவர், ஜிஹாதின் பண்புகளையும், அதில் உள்ளடங்கியுள்ள சமய-சமூக முன்னேற்றத்திற்கான எண்ணற்ற சிந்தனைகளையும் விளங்கிக் கொள்ள முடியும்.*

*'ஜிஹாத்' எனும் அறபுச் சொல்லுக்கு 'முயற்சி' என்பதே நேரடி அர்த்தமாகும். நன்மையையும் நற்பயன்பாடுகளையும் இலக்காகக் கொண்ட அனைத்து மனித முயற்சிகளையும் இது குறிக்கின்றது. வாழ்வில் ஆபத்துகளையும், பாதிப்புகளையும் களைவதற்கான சொல், செயல், சிந்தனை ரீதியான பிரயத்தனங்களையும் இது குறிக்கின்றது. சமூகத்தில் மகிழ்ச்சியையும் மலர்ச்சியையும் தோற்றுவிப்பதற்கான உழைப்பையும் இது குறிக்கின்றது. இவ்வகையில் மனித வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கும் பரந்த சமூகச் சிந்தனையாக ஜிஹாத் விளங்குகின்றது.*

*எனவே, கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுதல், தொழில் முயற்சிகளை மேற்கொள்ளல், குடும்ப-சமூக உறவுகளைப் பேணல், நன்மைகளைத் தூண்டி தீமைகளைத் தடுத்தல், பிறர்க்குதவுதல், இளந்தலைமுறையினரை ஒழுக்க ரீதியாகப் பயிற்றுவித்தல்,*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

முதியோரை மதித்து அவர்தம் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தல், கடன்பட்டோருக்கும் வறியோருக்கும் பொருளுதவி நல்குதல், ஏழைச் சிறார்களின் கல்விக்கு உதவுதல், வீடு, கிணறு, மற்றும் மலசலகூடம் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுத்தல், விதவைகளுக்கு வாழ்வளித்தல், அநாதைகள்-அகதிகளை அரவணைத்தல், இளைஞர்-யுவதிகளுக்கு தொழில் வழிகாட்டல்களை வழங்குதல், பாதைகள் அமைத்துக் கொடுத்தல் போன்ற அனைத்து வகையான நன்முயற்சிகளும் ஜிஹாதாகவே அமைகின்றன.

இஸ்லாமிய வரலாற்றை நோக்குமிடத்து, ஜிஹாதின் வியாபகப் பண்புகளைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். அதாவது, நபி (ஸல்) அவர்கள் மக்காவில் வாழ்ந்த 13 வருட காலப்பகுதியில், இராணுவ முன்னெடுப்புகள் எவற்றையும் மேற்கொள்ளவில்லை. அதற்கான அனுமதி, அவர்கள் மதீனாவுக்குச் சென்று முழுமையான முஸ்லிம் சமூகக் கட்டமைப்பொன்றைத் தோற்றுவித்த பின்னரே அல்லாஹ்விடமிருந்து வந்தது. அவ்வனுமதியும் கூட, தற்காப்புக்காக மட்டுமே யுத்தம் புரியலாம் என்ற நிபந்தனையைத் தாங்கியே வந்தது. இதன்படி மக்காவில் ஆயுதப் போராட்டத்துக்கான அனுமதி வழங்கப் பட்டிருக்கவில்லை என்பது தெளிவாகின்றது. எனினும், நபியவர்கள் மக்காவில் வாழ்ந்த காலப்பகுதியில் இறங்கிய அல்குர்ஆன் வசனங்கள் சில, ஜிஹாத் பற்றிய சிந்தனையைத் தோற்றுவிப்பவையாகவும், அதனை வலியுறுத்துபவையாகவும் அமைந்திருந்தன. இதன் மூலம் ஜிஹாத் என்பது வெறுமனே ஆயுதப் போராட்டம் அல்ல; அது மிகப் பரந்த செல்நெறியைக் கொண்ட சமூகப்பணி என்பது தெளிவாகின்றது.

ஜிஹாத் எனும் எண்ணக்கருவை இஸ்லாம் இருவகைப்படுத்தி விளக்குகின்றது. 1. ஆன்மாவுடனான போராட்டம் 2. எதிரிகளுடனான ஆயுதப் போராட்டம். இவ்விரண்டிலும் ஆன்மாவுடனான போராட்டத்தையே இஸ்லாம் முதன்மைப்படுத்துகின்றது. மக்காவில் இறங்கிய அல்குர்ஆன் வசனங்களில் வலியுறுத்தப்பட்ட ஜிஹாத், இதுவேயாகும்.

ஆன்மாவுடனான போராட்டம் என்பது, சமய-சமூக வரையறைகள் மீதான கட்டுப்படுதலைக் குறிக்கின்றது. பாவச் செயல்களை முற்றாகத் தவிர்ந்து, மார்க்க விதிமுறைகளைப் பரிபூரணமாகப் பின்பற்றியொழுக வேண்டும் என்பதும், சமூக



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

அக்கறையுடன் பொதுப்பணிகளில் ஈடுபாடு காண்பிக்க வேண்டும் என்பதும் இதன் பொருளாகும். அகவய-புறவயத் தூய்மை மிக்க சமூக ஒழுங்கமைப்பை நிறுவுவதே இதன் பிரதான குறிக்கோளாய் அமைகின்றது. இது சொல், செயல், சிந்தனை ஆகிய மூன்று வழிமுறைகளூடாகவும் பின்பற்றப்பட வேண்டியதாகும்.

இஸ்லாமிய வரலாற்றில் 'தபூக்' யுத்தம் பிரபல்யமானது. ஏனைய யுத்தங்களை விட, அதிகமான இழப்புகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் முஸ்லிம்கள் உள்ளாக்கப்பட்டது, இந்த யுத்தத்திலேதான். யுத்தத்தில் எதிரிகளை வெற்றி கொண்ட முஸ்லிம்கள் களைத்துச் சோர்ந்து ஊருக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் போது, அவர்களைப் பார்த்து நபிகளார் குறிப்பிட்டார்கள்: "நீங்கள் இப்போது பங்கு பற்றியது சிறிய ஜிஹாதுதான். இதைவிடப் பெரிய ஜிஹாதொன்று உங்களுக்கு முன்னால் இருக்கிறது. அதுதான் உங்களது ஆன்மாவுடனான ஜிஹாத்"

இரண்டாவது வகையான ஜிஹாத், எதிரிகளுடனான போராட்டமாகும். இஸ்லாமிய நோக்கின் பிரகாரம், எதிரிகளுடனான ஆயுதப் போராட்டம் என்பது இறுதிக் கட்ட முயற்சியாகும். மிக இறுக்கமான கண்டிப்புகளுடனும் நிபந்தனைகளுடனுமே இஸ்லாம் இவ்வகைய ஜிஹாதுக்கு அனுமதியளித்துள்ளது. நாடுபிடித்தல், பொருளாதாரங்களைக் கொள்ளையிடல், அதிகாரம் செலுத்துதல், மனிதர்களை அடிமைப்படுத்தல் போன்ற காரணங்களுக்காக அன்றி, தற்காப்புக்காக மட்டுமே இவ்வகை ஜிஹாத் பிரயோகிக்கப்பட வேண்டும் என்பது இஸ்லாத்தின் முதல் நிபந்தனையாகும். அத்தோடு, பெண்களை மானபங்கப்படுத்துவது, சிறுவர்-முதியோர் போன்ற பலவீனர்களைக் கொடுமைப்படுத்துவது, சிறைப்பட்டவர்களை சித்திரவதைப்படுத்துவது, சரணடைந்தவர்களைத் தண்டிப்பது, தேசிய வளங்களை நாசம் செய்வது போன்ற கொடுஞ்செயல்களை போராட்டத்தின் போது முற்றாகத் தவிர்ந்து கொள்ள வேண்டுமென்பது இஸ்லாத்தின் கண்டிப்பான கட்டளையாகும். யுத்தத்தைத் தாமாகவே ஆரம்பிக்கக் கூடாதெனவும் இஸ்லாம் முஸ்லிம்களைக் கட்டுப்படுத்துகிறது.

தமது உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்கு இராணுவ முன்னெடுப்புகளைத் தவிர வேறு வழியில்லை என்ற நிர்ப்பந்தமான இறுதிக் கட்டத்திலேயே இவ்வகை ஜிஹாத்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

அனுமதிக்கப்படும் என்ற நியதி, மனித வாழ்க்கை மீதான இஸ்லாமிய சித்தாந்தங்களின் அக்கறையை நன்கு தெளிவுபடுத்தும் அம்சமாக விளங்குகின்றது.

அல்குர்ஆன் கூறுகின்றது: "(நிராகரிப்போரால்) அநீதிக்குட்படுத்தப்பட்டவர்களுக்கு (அவர்களை எதிர்த்து) யுத்தம் செய்ய அனுமதியளிக்கப்பட்டுவிட்டது. நிச்சயமாக அல்லாஹ் இவர்களுக்கு உதவி செய்ய பேராற்றலுடையோனாக இருக்கின்றான். இவர்கள் (எத்தகையோரென்றால்) நியாயமின்றித் தங்கள் வீடுகளிலிருந்து (விரோதிகளால்) துரத்தப்பட்டார்கள். 'எங்களுடைய இறைவன் அல்லாஹ் ஒருவன்தான்' என்று கூறியதுதான் இவர்கள் செய்த குற்றம்" (22;39,40)

அல்குர்ஆன் மேலும் கூறுகின்றது: "அல்லாஹ்வுடைய பாதையில் (நீங்கள் செல்வதைத் தடுத்து) உங்களை எதிர்த்தோருடன் நீங்களும் யுத்தம் புரியுங்கள். ஆனால், நீங்கள் வரம்பு கடந்துவிட வேண்டாம். ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுவோரை நேசிப்பதில்லை" (2:190)

இங்கு வரம்பு என கூறப்பட்டுள்ளதன் பொருள், தம்மைத் தாக்கும் தீயவர்களைத் தடுத்து நிறுத்தக்கூடிய அளவுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்ட அளவில் பலவந்தம் பிரயோகிக்கப்பட வேண்டும் என்பதாகும். பிரயோகிக்கப்படும் பலவந்தம், பழிவாங்கும் நோக்குடனோ, ஏகாதிபத்தியவாத ஆக்கிரமிப்பொன்றைத் திணிக்கும் நோக்குடனோ வரம்பு மீறிச்செல்லக்கூடாது.

தமது துருப்புகளை போருக்கு அனுப்பிவைத்த நபி (ஸல்) அவர்கள், படையினரைப் பார்த்து பின்வருமாறு கூறியுள்ளார்கள்: "இறைவனின் பெயரால், இறைவனின் காரியத்துக்காக, இறைவனின் உதவியுடன் செல்லுங்கள். நீங்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று இறைவன் விரும்புகின்றானோ, அவ்வாறே நடந்து கொள்ளுங்கள். இறைவனின் கட்டளைகளுக்குத் துரோகமிழைக்காதீர்கள். பொய்யுரைக்காதீர்கள். எவரையும் கொடுமைப்படுத்தாதீர்கள். வயது முதிர்ந்தோர், உடல் நலிந்தோர், பெண்கள், மற்றும் குழந்தைகள் ஆகியோர் மீது கருணை காட்டுங்கள். தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் மட்டும் ஒரு மரத்தை வெட்டி வீழ்த்துங்கள். மிகக் குறைந்த தரத்திலிருந்து மிக உயர்வான தரம் வரையிலுமுள்ள அனைத்துக் கைதிகளுக்கும் புகலிடமளியுங்கள். அவர்கள் சத்தியத்தின் வார்த்தையை



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

செவிமடுக்கும் விதத்தில் புகலிடமளியுங்கள். அந்தச் சத்தியத்தைப் பின்பற்றுபவர் உங்கள் சகோதரர் ஆகிவிடுகின்றார். அவர் மறுப்புத் தெரிவித்தால், சமாதானம் ஏற்பட்டவுடன் தனது வீட்டுக்குச் செல்வதற்கு அவரை விடுவியுங்கள். எல்லா நேரங்களிலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இறைவனின் உதவிக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். உங்கள் நடத்தை தொடர்பாக, அல்லாஹ்வின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடந்து கொள்ளுங்கள்"

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரழி) அவர்களிடம் கூறினார்கள்: "போரை ஆரம்பித்து வைக்கும் ஆக்கிரமிப்பாளராக ஒருபோதும் இருக்காதீர்கள். தொடக்கத்தில் உங்கள் எதிரியை உண்மையான இறைவனின் பால் திரும்புமாறு அழைப்பு விடுங்கள். இறைவன் உங்கள் மூலமாக ஓர் ஆணையேனும் விசுவாசத்தின் பாதையில் பிரவேசிக்கச் செய்தால், அது சூரியன் தனது ஒளியைப் பாய்ச்சும் அனைத்துப் பொருட்களும் உமக்குச் சொந்தமாக இருப்பதிலும் பார்க்க மேலானதாக இருக்கும்"

ஹஸ்ரத் அலீ (ரழி) அவர்கள் சிப்பீன் யுத்தத்தின் போது, தமது துருப்புகளுக்கு பின்வரும் முறையில் இறுதிக் கட்டளை விடுத்தார்கள் ;- "உங்களுடைய எதிரி போர்க்களத்தில் பின்வாங்கி ஓடினால், அவனைத் துரத்திச் செல்லவேண்டாம். கொலை செய்யவும் வேண்டாம். தம்மைக் காத்துக் கொள்ளும் சக்தியை இழந்தவர்கள், அல்லது போர்க்களத்தில் காயமுற்று வீழ்ந்தோர் ஆகியோர் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படக்கூடாது. பெண்கள் கண்ணியப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் அச்சப்படும் விதத்திலோ அல்லது தொல்லைப்படும் விதத்திலோ காரியங்களை ஆற்றக்கூடாது"

கலாநிதி மஜீத் காதோரி 'இஸ்லாத்தில் போரும் சமாதானமும்' என்ற தன்னுடைய நூலில் பின்வருமாறு எழுதுகின்றார் ;- "போரின் இல்லம்' என்ற பழைய அரேபிய கருதுகோளை 'சமாதானத்தின் இல்லம்' என்ற கருதுகோளாக மாற்றியமைத்து, இஸ்லாத்தை உலக மக்களின் பால் தொண்டாற்றச் செய்வதே ஜிஹாதின் நோக்கமாகும். அதன் முதல் வெற்றி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட நாடுகளை ஒற்றுமைப்படுத்தியதாகும். அதனையடுத்து, உள்நாட்டுப் போர்கள் முடிவுக்கு வந்தன. ஒன்றுடனொன்று சமாதான நல்லுறவு பூண்டிருக்கும் இஸ்லாமிய தேசங்களைக் கொண்ட ஒரு குடும்பத்தை அது உருவாக்கியது.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

இந்த ஆசீர்வாதத்தை முழுஉலகுக்கும் எடுத்து வருவதே அதன் நோக்கமாகும். எனவே, ஜிஹாதின் நோக்கம் பூமியில் சமாதானத்தை மலரச் செய்வதாகும். அதுவே இறுதி விளைவாக இருக்கும்"

பாரிஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் முஹம்மது ஹமீதுல்லாஹ் 'திருத்தூதரும் போரும்' என்ற தன்னுடைய நூலில் பின்வருமாறு எழுதுகின்றார்; "முஹம்மத் நபியவர்களையும் இஸ்லாத்தையும் ஏற்றுக்கொண்ட அரேபியா, சுமார் பத்து இலட்சம் சதுர மைலுக்கும் மேற்பட்ட பரப்பளவைக் கொண்ட ஒரு தீபகற்பமாகும். அதாவது, இப்பிரதேசம் ரஷ்யாவிற்கு மேற்கிலுள்ள முழு ஐரோப்பாவினையும் ஒத்ததாகும். எனினும், இந்த முழு தீபகற்பத்தையும் கைப்பற்றும்போது சுமாம் 150 ஆட்கள் அளவிலேயே உயிரிழந்தார்கள். அதாவது, 10 வருட காலப் பிரிவில் ஆகக் குறைந்தது ஆண்டொன்றுக்கு 15 உயிரிழப்புகளே ஏற்பட்டுள்ளன. அத்தகைய ஒரு விதத்திலேயே போர் நடத்தப்பட்டது. வரலாற்றில் வேறு எந்தவொரு ஆக்கிரமிப்பாளரும் இச்சாதனையை நிகழ்த்தியிருக்க முடியாது"

மக்களிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதே இஸ்லாமிய ஜிஹாதின் பிரதான பண்பாகும். சமாதானத்தை உருவாக்கும் வழியில் ஒருவர் தன்னுடைய சொந்த உரிமைகளையும் விட்டுக்கொடுக்க வேண்டுமென்பதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

அல்குர்ஆன் கூறுகின்றது: "விசுவாசிகளிலுள்ள இரு வகுப்பார் தங்களுக்குள் சச்சரவு செய்து கொண்டால், இருவகுப்பார்களுக்குமிடையில் சமாதானப்படுத்தி விடுங்கள். பின்னர், அவர்களில் ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரின் மீது வரம்பு மீறி அக்கிரமம் செய்தால், அக்கிரமம் செய்தவர்கள் அல்லாஹ்வின் கட்டளை வரும் வரையில், அவர்களுடன் நீங்கள் (எதிர்த்துப்) போரிடுங்கள். அவர்கள் அல்லாஹுவின் கட்டளையின்பால் திரும்பி விட்டால், நியாயமான முறையில் அவ்விருவகுப்பார்களுக்குமிடையே சமாதானம் செய்து வையுங்கள். இதில் நீங்கள் நியாயமாக நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதவான்களை நேசிக்கின்றான்" (49:09)

சமாதானத்தை உண்டாக்குபவர்கள் மீது அல்லாஹ்வின் ஆசி கிடைப்பதனை இந்த வசனம் வலியுறுத்துகின்றது. மேலும், முஸ்லிம் போராளிகள் முரண்பட்டவர்களைக் கீழ்ப்பணியச்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

செய்வதற்காக யுத்தம் செய்ய நேரிட்டாலும்கூட, அவர்கள் சமாதானத்தை உண்டாக்குபவர்களாக இருந்து வரவேண்டுமென அல்லாஹ் கட்டளையிடுகின்றான்.

இஸ்லாமிய ஜிஹாதென்பது மக்களுக்கு எதிராக யுத்தம் புரிவதல்ல; அது அடக்குமுறைக்கும் கொடுங்கோன்மைக்கும் தீங்குக்கும் எதிராகவே யுத்தம் புரிகின்றது. பொய்யான கருத்துகளை வேரோடு களைந்தெறிந்து விட்டு, அவற்றினிடத்தில் தூய்மை மற்றும் விசுவாசம் என்பவற்றின் மகோன்னதமான கருத்துகளை ஏற்படுத்துவதற்கு அது விழைகின்றது. நன்மைக்கும் தீமைக்கும் எதிரான ஓயாத போராட்டத்தில் பகைவர்களை இறைவனின் பக்கம் வென்றெடுப்பதே இஸ்லாத்தின் நோக்கமாகும்.

இவ்வகையில், ஜிஹாத் எனும் இஸ்லாமிய சிந்தனை தனிமனித, மற்றும் சமூக ரீதியான முன்னேற்றத்தினதும் அபிவிருத்தியினதும் எண்ணக் கருக்களைக் கொண்ட தூய சமூகப் பணியாகும். இப்பணியின் மூலம் சமாதானத்தையும் சமூக நல்லுறவையும் வலியுறுத்தும் இஸ்லாத்தின் அடிப்படைப் பண்புகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

எனவே, ஜிஹாதை இஸ்லாமிய தீவிரவாதம் என்ற சொற்திணிப்புக்குள்ளோ, முற்றுமுழுதான ஆயுதப் போராட்டம் என்ற தவறான புரிதலுக்குள்ளோ சிறைப்படுத்தாது, சமூக அபிவிருத்திக்கான அக்கறையை முழுமையாக உள்வாங்கியுள்ள சிறந்த சமயப் பணியே ஜிஹாத் என்ற யதார்த்தத்தை உணர்ந்து செயலாற்றும் பரந்த மனப்பக்குவத்தையும், சிந்தனைத் தூய்மையையும் எம் உள்ளங்களில் வளர்த்துக் கொள்வோமாக!



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

# இஸ்லாமிய வாரிசுச் சொத்துரிமை

# ஓர் அறிமுகம்

மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் சிறப்பாக வழிகாட்டியுள்ள இஸ்லாம் மார்க்கம், பொருளாதாரத்துறையை சமூக அவதானிப்பில் பிரதான கருதுகோளாக நோக்குகின்றது. இஸ்லாமிய பொருளியல் திட்டம், ஏனைய பொருளியல் திட்டங்களை விட முதனிலை பெறுவதற்கு, அதனுடைய உள்ளடக்கங்களும், அவற்றின் ஆழ்ந்த பெறுமானங்களும், அவற்றுக்குப் பின்னால் தேங்கியிருக்கும் சமூகவியல் சமத்துவக் குறிக்கோள்களுமே முக்கிய காரணமெனலாம்.

வாரிசுச் சொத்துரிமை என்பது, சமூக வாழ்வில் தவிர்க்கப்பட முடியாத பொருளியல் கிளையாக அமைந்துள்ளது. இணைந்த குடும்ப வாழ்வின் செழிப்புக்கும், அக்குடும்ப அங்கத்தவர்களின் தனிப்பட்ட நலனுக்கும், பரஸ்பர அன்புப் பரிமாற்றங்களுக்கும் பங்களிப்புச் செய்யும் முக்கிய ஆற்றலை அது கொண்டுள்ளது. குடும்ப விரிசல்களையும் மனஸ்தாபங்களையும் அவற்றினூடாகத் தோன்றும் பெரும் குழப்பங்களையும் தவிர்ப்பதிலும் அது பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளது. ஆயினும், அவற்றின் பிரயோகமும் பங்கீடும் முறையாக அமைவது அவசியமாகும். இல்லையெனில் குடும்ப வாழ்வும், சமூக வாழ்வும் நாசமடையும் அபாயமான சூழல் தோற்றம் பெறும்.

இஸ்லாம் வலியுறுத்தும் வாரிசுச் சொத்துரிமை, ஒரு சமூகத்தின் அங்கமாக இருக்கின்ற குடும்பத்தின் அபிவிருத்தியையும், அதன் மூலமான சமூக ஒழுங்கமைப்பையும் வலியுறுத்துவதோடு, அது சமத்துவ நெறிமுறை வழுவா பண்பைக கொண்டதாகவும் விளங்குகின்றது. இஸ்லாம் வலியுறுத்தும் வாரிசுச் சொத்துரிமை, பிரதான அவதானிப்பையும் முக்கியத்துவத்தையும் பெற்றமைக்கு, அது தோன்றிய காலச் சூழல் முக்கிய காரணமெனில் மிகையன்று. எவரும் சிந்தித்துப் பார்த்திராத, அல்லது முற்றிலும் புதுமைப்படுத்தப்பட்ட இயல்புடன் வாரிசுச் சொத்துரிமை பற்றிய சட்டதிட்டங்களை இஸ்லாம் உலகுக்கு வழங்கியது. மனிதாபிமான அடிப்படையில் எவராலும் நிராகரிக்கப்பட முடியாத இயல்பை அது பூர்த்தி செய்திருந்தது.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

## அறிமுகம்

வாரிசுச் சொத்துரிமை தொடர்பான அறிவை அரபியில் 'பராயிழ்' என அழைக்கப்படுகின்றது. இச்சொல், 'ஏற்பாடு செய்தல்' எனும் நேரடி அர்த்தத்தையும், 'மரணித்தவர் விட்டுச் சென்ற சொத்துகளை வாரிசுகளுக்குப் பங்கீடு செய்தல்' எனும் நடைமுறைப் பொருள் விளக்கத்தையும் தருகின்றது. அதாவது, ஒரு மனிதர் மரணித்து விட்டால், அவரது சொத்துகள், அவரது மனைவி, பிள்ளைகள், பெற்றோர், மற்றும் உறவினர்கள் ஆகியோருக்கு குறித்த விகிதாசாரத்தின் பிரகாரம் பங்கீடு செய்வதென்பதையே இது குறிக்கின்றது. இதனை 'பாகப்பிரிவினை' என்றும் கூறலாம்.

வாரிசுரிமை மூலம் கிடைக்கும் பங்கு அல்லாஹ்வால் நிர்ணயிக்கப்பட்ட ஓர் அளவாகும். எனவே அதை மாற்றுவதற்கோ, கூட்டிக் குறைத்துக் கொள்வதற்கோ எவருக்கும் அதிகாரம் கிடையாது. வாரிசுரிமை மூலம் கிடைக்கும் சொத்துகள் கட்டாய உடைமைகளாகும். வாரிசுகள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவை அவர்களுக்குக் கிடைத்தே தீரும்.

வாரிசுச் சொத்து நடைமுறைப்படுத்துவதற்கு மூன்று நிபந்தனைகள் உள்ளன. அவை, வாரிசு உயிரோடிருப்பது உறுதிப்படுத்தப்படுதல், வாரிசுக்கு சொத்தை வழங்குபவர் மரணித்தது உறுதிப்படுத்தப்படுதல், வாரிசுச் சொத்துகள் சரியான இனங்காணப்படல் ஆகியவையாகும்.

வாரிசுச் சொத்து நடைமுறைப்படுத்தப்படுவதற்கு மூன்று காரணங்கள் உள்ளன. அதாவது வாரிசுக்கும் வாரிசுக்கு சொத்தை வழங்குபவருக்கும் இடையிலான உறவுக்கு மூன்று விடயங்களில் ஒன்றேனும் காரணமாக இருக்க வேண்டும். அவை திருமணம், அடிமை முறை, குடும்பப் பரம்பரை என்பனவாகும்.

## தோற்றமும் வளர்ச்சியும்

பராயிழ் தொடர்பான சட்டதிட்டங்கள் அல்குர்ஆனில் விளக்கமாக எடுத்தாளப்பட்டுள்ளன. நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்கள், அந்த விளக்கங்களை மேலும் தெளிவுபடுத்தியுள்ளன. ஆரம்பத்தில் சமூக வாழ்வில் கடைப்பிடிக்கக் கடமையான சட்டதிட்டமாக இருந்த பராயிழ், பின்னர் ஒரு தனிக்கலையாக



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இச்சட்டம் தோன்றியதற்கான காரணமாக பின்வரும் நிகழ்வுகளை அவதானிக்கலாம்.

நபித்தோழர் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "அண்ணல் நபி (ஸல்) அவர்களும் அபூபக்கர் (ரழி) அவர்களும் 'பனூஸலமா' கூட்டத்தாரிடம் வந்த போது என் உடல் நலம் குறித்து விசாரித்தார்கள். நான் எதையும் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருந்தேன். உடனே தண்ணீர் கொண்டு வரச் சொல்லி, நபி (ஸல்) அவர்கள் வுழுச் செய்தார்கள். பின்னர் என் மீது சிறிது தண்ணீரைத் தெளித்தார்கள். சுயநினைவு திரும்பிய பின்னர் நான் கேட்டேன்; "என்னுடைய பொருட்கள் விஷயத்தில் நான் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?" அப்போது இவ்வசனம் அருளப் பெற்றது. (புஹாரி, முஸ்லிம், நஸாஈ)

மற்றொருவ தகவல் இவ்வாறு கூறுகிறது: ஸஅது பின் ரபீஉ என்பவரின் துணைவியார் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து 'இறைத்தூதர் அவர்களே! இதோ இந்த இரு பெண்களும் ஸஅது பின் ரபீஉவின் மக்களாவர். தங்களுடன் உஹதுப் போரில் கலந்து கொண்ட போது இவர்களின் தந்தை வீரமரணம் அடைந்து விட்டார். இவர்களது செல்வம் முழுவதையும் இவர்களுடைய தந்தையின் சகோதரர் எடுத்துக் கொண்டுவிட்டார். இவர்களுக்காக அவர் எதையும் விட்டு வைக்கவில்லை. பொருளின்றி இவர்களுக்குத் திருமணம் செய்துவைக்க முடியாது" என்று முறையிட்டார். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் "அல்லாஹ் இதற்கு ஒரு தீர்வை அளிப்பான்" என்று கூறினார்கள். அப்போது வாரிசுரிமை வசனம் இறங்கிற்று. உடனே நபி (ஸல்) அவர்கள் அவ்விருவருடைய தந்தையின் சகோதரரை அழைத்து "ஸஅதுடைய பெண்மக்கள் இருவருக்கும் மூன்றில் இரு பங்கும் இவர்களின் தாய்க்கு எட்டில் ஒரு பங்கும் கொடுத்து விடுங்கள். மீதி உங்களுக்குரியதாகும்" எனக் கட்டளையிட்டார்கள். (அபூதாவூத், திர்மிதீ, இப்னுமாஜா)

ஜாஹிலிய்யா காலத்தில் வயது வந்த ஆண்கள் மட்டுமே வாரிசுரிமை பெற்று வந்தனர். பெண்களும் சிறுவர்களும் வாரிசுச் சொத்திலிருந்து தடுக்கப்பட்டனர். இஸ்லாத்தின் தோற்றத்தின் பின் இந்நிலை மாற்றமடைந்தது. பெண்களும் சிறுவர்களும் உதவித் தொகை பெற்றனர். ஏலவே அவர்களுக்கு சத்தியமிடப்பட்டிருந்தால் அது நிறைவேற்றப்பட்டது. சில



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

காலங்களில் இந்நிலையும் மாற்றமடைந்தது. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டோர், ஆண்களாயினும் பெண்களாயினும் வாரிசுரிமை பெற முடியும் என்ற நிலை தோன்றியது. அதன்பின் இந்நிலையும் மாற்றமடைந்தது. மரணிப்பவர்கள் தமது சொத்துகள் பற்றி மரண சாசனம் குறிப்பிடுவது அவசியமாக்கப்பட்டது. அதிலே சொத்துப் பகிர்வுகள் பற்றி குறித்துரைக்கப்பட்டிருக்கும். அதன்பின், வாரிசுச் சொத்துரிமை தொடர்பான அல்குர்ஆன் வசனங்கள் இறங்கி, முந்திய அனைத்தையும் மாற்றியமைத்தன. வாரிசுச் சொத்துரிமை தொடர்பான தெளிவான விளக்கங்களுடனான சட்டங்களையும் அவை ஏற்படுத்தின.

## முக்கியத்துவம்

வாரிசுச் சொத்துரிமை தொடர்பான அறிவு சமய வாழ்வைப் பொறுத்தவரை மிக இன்றியமையாததாகும். இஸ்லாம் இதற்கு அதிக முக்கியத்துவமளித்துள்ளது. புனித அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது: "(வாரிசுச் சொத்துரிமை தொடர்பான சட்டங்களாகிய) இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும். யார் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் கீழ்ப்படிந்து நடக்கின்றார்களோ அவர்களை சுவர்க்கங்களில் அவன் நுழைய வைப்பான். அவற்றின் கீழே நீரருவிகள் ஓடிக்கொண்டிருக்கும். அவற்றில் அவர்கள் என்றென்றும் தங்கிவிடுவர். இதுவன்றோ மகத்தான வெற்றி! மேலும், எவர் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் மாறு செய்து, அவனுடைய இவ்வரம்புகளை மீறி நடக்கின்றாரோ, அவரை நரகத்தில் அவன் புகச் செய்வான். அதில் என்றென்றும் அவர் தங்கிவிடுவார். மேலும் இழிவான வேதனை (அங்கே) அவருக்குண்டு" (04:13,14)

வாரிசுச் சொத்துரிமை தொடர்பாக நபி (ஸல்) அவர்கள் பல ஹதீஸ்களைக் கூறியுள்ளார்கள். அவற்றுள் சில வருமாறு:

"ஒருவர் எழுபது ஆண்டுகளாக நற்செயல் புரிகிறார். இந்நிலையில் அவர் 'வஸிய்யத்து - மரண சாசனம்' செய்கிறார். அதன் மூலம் அவர் அநீதி இழைக்கிறார். (அதாவது, உறவினரல்லாத ஒருவருக்காக வஸிய்யத் செய்வதன் மூலம் வாரிசுகளுக்குக் கிடைக்க வேண்டி பங்கைக் குறைக்க விரும்புகிறார்) இதனால் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் அவர் தீய செயல் புரியும் நிலை ஏற்படுகிறது. அவர் நரகவாசியாகிறார். இன்னொருவர் எழுபது வருடங்களாகத் தீமைகளையே செய்து வரும் போது,



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

கடைசியில் வஸிய்யத் செய்கிறார், அதில் நீதியோடு நடந்து கொள்கிறார். இதனால் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் நற்செயல் புரிந்தவராகிறார். பின் சுவர்க்கம் செல்கிறார்" (அஹ்மத்)

"வாரிசுச் சொத்துரிமை தொடர்பான அறிவைக் கற்றுக் கொள்ளுங்கள். அதனை பிறருக்கும் கற்றுக் கொடுங்கள். நான் மரணிப்பவனாக இருக்கிறேன். அதன் அறிவும் நீங்கிவிடக் கூடியதாகும். இருவர், தமது வாரிசுச் சொத்து தொடர்பாக முரண்பட்டு, தமக்கிடையில் தீர்ப்பளிப்பவர் எவரையும் கண்டுகொள்ள முடியாதளவு பிரச்சினைகள் தோன்றும்" (ஹாகிம்)

"எவர் வாரிசுச் சொத்துரிமை தொடர்பான அறிவைக் கற்றுக் கொள்கின்றாரோ, அவர் பத்து அடிமைகளை உரிமையிட்ட நன்மை பெறுவார். எவர் வாரிசுச் சொத்துகளை பறித்துக் கொள்கின்றாரோ அவரது சொத்துகளை அல்லாஹ் சுவர்க்கத்தில் பறித்து விடுவான்" (இப்னு மாஜா)

"வாரிசுச் சொத்துரிமை பற்றி கற்றுக் கொள்ளுங்கள். அது உங்களது மார்க்கத்திலுள்ளதாகும். அது அறிவின் பாதி. எனது சமூகத்திடமிருந்து களையப்படும் முதல் அறிவும் அதுதான்" (இப்னு மாஜா)

உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் பேசினால் வாரிசுச் சொத்துரிமை தொடர்பான அறிவு பற்றிப் பேசுங்கள். நீங்கள் விளையாடினால் ஈட்டி எறிந்து விளையாடுங்கள்" (இஆனா)

வாரிசுச் சொத்துரிமை பற்றிய அறிவு அது பற்றிய மார்க்க சட்ட விளக்கந் தருவதாகும். அது, மரணித்தவர் விட்டுச் சென்றவற்றிற்கு உரித்துடையவர் பெறுகின்ற சொத்துகளை மதிப்பீடு செய்கின்ற கணக்கியல் அறிவாகும்.

## ஐவகை நடைமுறைகள்

மரணித்தவர் விட்டுச் செல்பவை பொருளாக, அல்லது சில கடமைகளாக இருக்கலாம். அவை முறையான ஐந்து வகை நடைமுறைக் கடமைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

1. தனிப்பட்ட பொருளாதாரக் கடமைகள்: மரணித்தவர், ஸக்காத் கடமையானவராக இருந்து, அதனை வழங்காத நிலையில் மரணித்திருந்தால் அவரது சொத்துகள் மதிப்பிடப்பட்டு அவற்றுக்கான ஸக்காத் கொடுக்கப்பட வேண்டும். அவர் ஏதேனும்



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

குற்றப்பரிகாரத்துக்காகப் பணம் செலுத்த வேண்டியிருந்தால், அது வழங்கப்பட வேண்டும். அவரிடம் அடகு வைக்கப்பட்ட பொருள் ஏதேனுமிருப்பின் அவை உரியவர்களுக்கு முறையாகத் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

2. நல்லடக்கம்: குறித்த மையித்தை அடக்கம் செய்வதற்கான செலவுகள், அவர் விட்டுச் சென்ற சொத்திலிருந்து பெறப்பட வேண்டும். அவை ஆடம்பரமில்லாமல் எளிமையாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. கடன்கள்: மரணித்தவர் பிறரிடமிருந்து பெற்றிருந்த கடன்கள், உரியவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். அவர் பிறருக்கு வழங்கியிருந்த கடன்கள் மீளப்பெறப்பட வேண்டும்.

4. மரணசாசனம்: மரணித்தவர் தனது மரண சாசனத்தில் குறிப்பிட்ட சொத்துப் பகிர்வுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஒருவர், தனது சொத்தில் 1/3 பங்கை மாத்திரமே மரண சாசனமாகக் குறிப்பிட முடியும் என்பது கவனிக்கத்தக்கது. இதன்படி மரணித்தவர் ஏதேனும் நற்செயல்களுக்கென்று ஒதுக்கி வைத்த சொத்துகள், அல்லது தனது குடும்பத்திலுள்ளவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கிய சொத்துகள் உரிய நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

5. வாரிசுச் சொத்துப் பகிரவு: மேற்சொன்ன நான்கு நடைமுறைகளுக்கும் பின்புதான் மரணித்தவர் விட்டுச் சென்ற சொத்துகள் அவரது குடும்பத்திலுள்ள தகுதியான வாரிசுகளுக்கு உரிய முறையில் குறித்த அளவில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

## தடைகள்

வாரிசுச் சொத்தைப் பெறத் தகுதியான ஒருவர், அதனைப் பெறாது தடுக்கப்படுவதற்கு மூன்று அம்சங்கள் காரணங்களாக அமையலாம்.

1. கொலை: ஒரு வாரிசு தனக்கு வாரிசுச் சொத்தை வழங்குபவரைக் கொலை செய்தல். கொலை செய்யப்பட்டவரிடமிருந்து கொலை செய்தவன் வாரிசுச் சொத்து எதனையும் பெறமுடியாது. அக்கொலையில் அவர் நேரடியாக இல்லாமல் மறைமுகமாக சம்பந்தப்பட்டிருப்பினும் சரியே. “கொலையாளி வாரிசுரிமை பெறமாட்டான்” என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (திர்மிதீ)



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*2. அடிமை உரிமையிடப்படல்: ஓர் அடிமை தனது எஜமானன் மரணித்தால், அவரிடமிருந்து சொத்துரிமை பெற முடியும். அவ் அடிமை உரிமையிடப்பட்டு விட்டால் அச்சொத்துரிமையை அவன் இழந்துவிடுவான்.*

*3. மதம் மாறுதல்: வாரிசும், வாரிசுச் சொத்தை வழங்குபவரும் சமய ரீதியாக வேறுபட்டால் சொத்துரிமை இரத்தாகிவிடும். உதாரணமாக, இஸ்லாத்திலிருந்து மதம் மாறிய ஒரு மகன், முஸ்லிமான தனது தந்தையிடமிருந்து வாரிசுச் சொத்து எதனையும் பெற முடியாது. "முஸ்லிம் காபிரிடமிருந்தும், காபிர் முஸ்லிமிடமிருந்தும் வாரிசுச் சொத்துரிமை பெறவியலாது" என்பது ஹதீஸாகும்.*

## வாரிசுரிமை பெறும் ஆண் - பெண் தரப்பினர்

*மரணித்தவருக்கு உறவினர்களாக உள்ள ஆண்களில் வாரிசுரிமை பெறுவோரை முறையே 15 தரப்பினராகப் பிரிக்கலாம்: அவர்களாவன; 1. மரணித்தவரின் மகன் 2. மகனின் மகன் 3. தந்தை 4. பாட்டன் 5. உடன்பிறந்த சகோதரன் 6. தந்தை வழிச் சகோதரன் 7. தாய்வழிச் சகோதரன் 8. உடன்பிறந்த சகோதரனின் மகன் 9. தந்தை வழிச் சகோதரனின் மகன் 10. தந்தையின் உடன்பிறந்த சகோதரன் 11. தந்தையின் தந்தை வழிச் சகோதரன் 12. தந்தையின் உடன்பிறந்த சகோதரனின் மகன் 13. தந்தையின் தந்தைவழிச் சகோதரனின் மகன் 14. கணவன் (மரணித்தது பெண்ணாயிருப்பின்) 15. எஜமானன். இவர்கள் எல்லோரும் இருக்கும் பட்சத்தில் மூன்று தரப்பினர் மாத்திரமே வாரிசுரிமை பெறுவர். அவர்களாவன; 1. தந்தை 2. மகன் 3. கணவன் (மரணித்தது பெண்ணாயிருப்பின்)*

*மரணித்தவருக்கு உறவினர்களாக உள்ள பெண்களில் வாரிசுரிமை பெறுவோரை முறையே 10 தரப்பினராகப் பிரிக்கலாம்: அவர்களாவன; 1. மரணித்தவரின் மகள் 2. மகளின் மகள் 3. தாய் 4. தாயின் தாய் 5. தந்தையின் தாய் 6. உடன்பிறந்த சகோதரி 7. தந்தையின் சகோதரி 8. தாயின் சகோதரி 9. மனைவி (மரணித்தது ஆணாயிருப்பின்) 10. அடிமைப் பெண்*

*இவர்கள் எல்லோரும் இருக்கும் பட்சத்தில் 5 தரப்பினர் மாத்திரமே வாரிசுரிமை பெறுவர். அவர்களாவன; 1. மகள் 2. மகனின் மகள் 3. தாய் 4. மனைவி 5. உடன்பிறந்த சகோதரி*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

ஆண், பெண் தரப்பினர்களில் அனைவரும் இருக்கும் பட்சத்தில் 5 தரப்பினர் மாத்திரமே வாரிசுரிமை பெறுவர். அவர்களாவன; 1. தாய் 2. தந்தை 3. மகன் 4. மகள் 5. கணவன்/மனைவி

ஆண், பெண் தரப்புகளில் வாரிசுரிமை பெறுவதற்குத் தகுதியானோர் எவரும் இல்லையெனில் அச்சொத்துகள் பொதுநிதியில் சேர்க்கப்பட வேண்டும். மாறாக, தூரத்து உறவினர்களுக்கு அவற்றைப் பங்கீடு செய்ய முடியாது.

நபிகளாரது காலத்தில் ஒரு மனிதர் தனது சொத்துகளை விட்டுவிட்டு இறந்து போனார். அவருக்கு நெருங்கிய உறவினர்கள் யாரும் இருக்கவில்லை. தூரத்து உறவினர்கள் சிலர் வந்து, அவரது சொத்துகளைத் தமக்குப் பகிர்ந்து தருமாறு நபி (ஸல்) அவர்களிடம் வேண்டிய போது, நபியவர்கள் வானத்தில் கையுயர்த்திப் பிரார்த்தித்து விட்டு சிறிது நேரத்தின் பின் சொன்னார்கள்: 'நீங்கள் வாரிசுரிமை பெறமுடியாது' (இஆனா)

இஸ்லாத்தின் வாரிசுச் சொத்துரிமை தொடர்பான அறிமுகக் குறிப்புகள் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. பராயிழ் என்பது மிக விரிவான விளக்கமான பாடத்திட்டமாகும். அதனைக் கற்பதற்கான தூண்டலையும், அதன் அவசியத்தை விளங்கி நடப்பதற்கான ஆர்வத்தையும் உண்டுபண்ணுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வாரிசுச் சொத்துரிமை தொடர்பான அறிவு, முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை மிக அத்தியவசியமானதாகும். அது அறிவின் பாதியாகவும், சமூகத்திலிருந்து முதன்முதலில் களையப்படும் அறிவாகவும் இருக்கிறது. அதனை அறிந்து கொள்ளும் படியாக இஸ்லாமியப் பாரம்பரியங்கள் மிக அழுத்தமாகவே வலியுறுத்திக் கூறியிருக்கின்றன. நடைமுறையில் சற்றும் முக்கியத்துவமின்றிக் காணப்படும் பராயிழ் தொடர்பான அறிவுத் தேடலில் சமூகத்தின் கல்விமான்கள் ஈடுபடுவது அவசியமாகும். இன்றைய சமூகச் சூழலில் தேங்கியுள்ள பல்வேறு விரோதங்களுக்கும் மனக்கசப்புகளுக்குமான காரணமாக முறையற்ற சொத்துப் பங்கீடு காணப்படுகின்றது. இந்நிலையை மாற்றியமைக்க பராயிழ் தொடர்பான கல்வி ஊட்டப்படுவது அவசியமாகும். அரபுக் கல்லூரிகளில் மட்டுமன்றி பாடசாலைகளிலும் ஏனைய கல்வி நிறுவனங்களிலும் இதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அவ்வப்பகுதியிலுள்ள உலமாசபை, இளைஞர் கழகங்கள், சம்மேளனங்கள் இந்த அறிவின் முக்கியத்துவத்தை



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

உணர்ந்து, அது சாதாரண பாமர மக்களையும் சென்றடையுமாறு வழிவகைகளை ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். பாகப்பிரிவினை தொடர்பான விழிப்புணர்ச்சியை மக்கள் மத்தியில் தோற்றுவிக்க வேண்டும். முறையற்ற பாகப்பிரிவினையூடாக காலங்காலமாக பகைமை பூண்டு வாழும் குடும்பங்களிடையே ஒற்றுமையையும் நீதியையும் நிலைநாட்ட வேண்டும். சமய, சமூகப் பணிகளில் இது முதன்மையான பணியாக அமைய வேண்டியதாகும்.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

# அரபு எழுத்தணிக் கலை

## *அறிமுகம்:*

*அரபு எழுத்தணிக் கலை என்பது, முஸ்லிம்களின் தனித்துவமான கலையாகும். வேறு நாகரிகங்களின் தலையீடுகளோ பங்களிப்புகளோ எதுவுமின்றி, கலப்படமற்ற தூய கலாசாரத்துடன் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்த கலையென்றும் இதனைக் குறிப்பிடலாம். ஏனைய அறிவியல் நாகரிக கலைகளிலிருந்து தனித்துவமானதாகவும், ஆர்ப்பாட்டமில்லாத ஆன்மீக ரீதியான கவர்ச்சியுடன் மக்களை ஈர்க்கும் இயல்புள்ளதாகவும் அரபு எழுத்தணிக் கலை விளங்குகின்றது.*

## *இயல்பும் சிறப்பும்:*

*எழுத்தணிக்கலையே மிகவும் உயர்வான பெறுமதிமிக்க இஸ்லாமியக் கலையெனக் கருதப்படுகின்றது. புனித குர்ஆன், பிரார்த்தனைகள், இஸ்லாமிய விஞ்ஞானங்கள், இலக்கிய ஆக்கங்கள் என்பன ஆரம்பத்தில் கையெழுத்தினாலேயே எழுதப்பட்டன. இருப்பினும் எழுத்தணிக் கலைக்கு தேசிய, இஸ்லாமியப் பெறுமானங்களோடு நெருங்கிய தொடர்புள்ளது. அத்தோடு மக்களின் திடமான நம்பிக்கையோடும் அதற்கு ஆழமான தொடர்புள்ளது.*

*ஏனைய கலைகளில் காணப்படும் எல்லா பண்புகளும் எழுத்தணிக் கலையில் காணப்படுகின்றன. எழுத்து, சிற்பம், நாடகம், கவிதை, சினிமா, நடனம், இசை, ஓவியம் என பல வகையான கலைகளின் பண்புகளை அது உள்ளடக்கியுள்ளது. ஏனைய கலைகளைவிட ஓவியக் கலையோடு அதிக தொடர்புகளை எழுத்தணிக் கலை கொண்டுள்ளது. ஏனெனில், இவ்விரண்டிலும் முக்கியமாயிருப்பது பேனாவாகும். ஆயினும், ஓர் ஓவியன் சிதைந்த, தொடர்ச்சியான வரிகளின் மூலம் தனது ஆக்கங்களுக்கு வடிவத்தினைக் கொடுக்க முடியும். மேலும் சில நேரங்களில் அவற்றை அழித்து தனது சுவைக்கும், கற்பனைக்கும் ஏற்றவிதத்தில் தனது ஆக்கத்தைப் பூர்த்தி செய்யவும் முடியும். ஆனால் எழுத்தணிக் கலைஞன் பற்றாக்குறையை நீக்குவதற்காக எழுதப்பட்ட வரிகளில் குறுக்கிட அனுமதிக்கப்படுவதில்லை. அவன் எழுத ஆரம்பித்ததும் பரிபூரணமான நிலை வரைக்கும் தொடர வேண்டும். ஓர்*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

*ஓவியனுக்கு தனது தவறுகளை நிறங்களால் மறைத்து விடலாம். ஆனால் ஓர் எழுத்தணிக் கலைஞனோ நேர்த்தியாகவும், சீராகவும், பூரணமாகவும் எழுத வேண்டும்.*

*புள்ளிகள் மூலமாகவும், அதன் முன் நிகழ்ச்சிகளாலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விதிகளால் எழுத்தணிக்கலை அதன் நிலையான தீர்மானமான பாதையைக் கண்டுள்ளது. ஓர் எழுத்தணிக் கலைஞன் தனது இயல்பான ஆக்கத்திறனையும், பூர்வாங்க வேலையையும் வெளிப்படுத்தினால் மட்டுமே எழுத்தணிக் கலையை ஒரு கலையாகக் கருதமுடியும். எழுத்தணிக் கலையின் கலை அம்சம் எழுத்துகளும், சொற்களும் மிக்க அழகுடனும் அசலாகவும் அமைந்திருப்பதிலேயே தங்கியுள்ளது. மாற்றத்திற்குரிய ஒத்த பரிமாண அமைப்பு உறுப்புகள் எழுத்தணிக் கலையில் உள்ளன.*

*ஒரு கலைஞன், மூலப் பொருள்களையும் உத்திகளையும் பாவித்து தனது செய்தியை எத்திவைப்பதற்கான கலை ஆக்கத்தை உருவாக்குகின்றான். இவ்வாறாக எழுத்தணிக் கலையை ஒரு கலையாகவும் அதேவேளை ஓர் உத்தியாகவும் கருத முடியும்.*

## ***தூண்டுகோல்கள்:***

*அரபு எழுத்தணிக் கலையில் முஸ்லிம்கள் ஈடுபடுவதற்கு பல காரணங்கள் தூண்டுகோலாக அமைந்திருந்தன.*

*இக்கலையில் முஸ்லிம்கள் ஈடுபடுவதற்கான முக்கிய காரணம், இது குறித்த அல்குர்ஆனின் தூண்டுகோலாகும். "நூன். எழுதுகோலின் மீதும், அதனால் எழுதப்படும் வரிகள் மீதும் சத்தியமாக" (68:01) "அவன்தான் எழுதுகோலின் மூலம் கற்றுக் கொடுத்தான்" (96:04) போன்ற அல்குர்ஆன் வசனங்கள் இக்கலை தொடர்பான ஊக்குவிப்பை வழங்கின. மேலும், நபி (ஸல்) அவர்கள் இது பற்றி பல்வேறு ஹதீஸ்களைக் கூறியுள்ளார்கள். "அழகிய எழுத்தில் எழுதுங்கள். அது உங்களுக்கு பரகத்தைச் சொரியும்" மேலும் கூறினார்கள்: "அழகான எழுத்து மிகத் தெளிவான உண்மையை அறிவிக்கும்"*

*அரபு எழுத்தணிக் கலையின் தோற்றுவிப்பாளராகக் கருதப்படும் ஹஸ்ரத் அலீ (ரழி) அவர்கள் கூறினார்ர்ள்: "உங்கள் குழந்தைகளுக்கு எழுத்துப் பயிற்சியை வழங்குங்கள். அது மிக முக்கியமான மகிழ்ச்சியில் பங்கெடுக்கக் கூடியதாகும்"*



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

எனவே, அல்குர்ஆனினதும், நபி (ஸல்) அவர்களினதும், குலபாஊர் ராஷிதூன்கள், மற்றும் ஸஹாபாக்களதும் ஊக்குவிப்புகளே எழுத்தணிக் கலையில் முஸ்லிம்கள் ஈடுபடக் காரணமாக அமைந்தன. அதேவேளை, அரபு எழுத்துகளின் அமைப்பும், நெளிந்து வளைந்து நெகிழ்ந்து கொடுக்கும் எழுத்தியல்பும் கூட இக்கலையில் முஸ்லிம்கள் ஈடுபடுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தன.

மேலும், அரபு எழுத்தணிக் கலையானது அல்குர்ஆனோடு சம்பந்தப்பட்ட கலையாக மதிக்கப்பட்டதனால், இக்கலையில் ஈடுபடுவோரை முஸ்லிம் சமூகம் மிகுந்த மரியாதையுடனேயே நோக்கியது. ஆரம்ப காலங்களில் எழுத்தணிக் கலைஞர்கள் பொதுமக்களால் மட்டுமன்றி, அரசர்கள் அரசியல் பிரமுகர்கள் போன்றாலும் கண்ணியப்படுத்தப்பட்டனர். இத்தகைய மதிப்பு, சமூக ரீதியான அந்தஸ்து சுயகௌரவ உயர்வு முதலான அம்சங்களும் முஸ்லிம்கள் இக்கலையில் ஈடுபடுவதற்குக் காரணமாக அமைந்தன.

எனவே, சுருங்கக் கூறுமிடத்து அல்குர்ஆன் பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபாக்கள் மூலமாக சமூகத்திற்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்புகளினாலும் அரபு எழுத்துக்கள் எழுத்தணிக் கலைக்கு இசைவான தனித்துவப் பண்புகளைக் கொண்டிருந்ததனாலும் இக்கலையில் ஈடுபடுவோர் பெருமளவு மதிப்பும் மரியாதையும் பெற்றுத் திகழ்ந்தமையாலுமே முஸ்லிம்கள் அரபு எழுத்தணிக் கலையில் ஈடுபட்டனர் எனலாம்.

## வளர்ச்சிப்போக்கு

கையெழுத்தினதும் எழுத்தணிக் கலையினதும் முன்னேற்றமும் வீழ்ச்சியும் பெருமளவுக்கு புனித குர்ஆனிலேயே தங்கியுள்ளது. எழுத்தணிக்கலை, தனது முன்னேற்றத்திலும் விருத்தியிலும் புனிதக் குர்ஆனுக்குக் கடமைப்பட்டுள்ளது. குர்ஆனை எழுதுவதும், தொகுப்பதும் 'கூபிக்' மூலத்தில் ஆரம்பமாகி 'நஷ்க்' இல் தொடர்ந்தது.

ஆரம்பத்தில் எழுத்தணிக்கலை அவ்வளவு பிரபலமாக இருக்கவில்லை. குறிப்பிட்ட சில மக்களே அதில் விருப்பம் கொண்டிருந்தனர். ஆனால், கையெழுத்தும், வர்ணம் தீட்டும் கலையும் சர்வசாதாரணமான போது சாஸ்திரிய எழுத்தணி



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

ஆக்கங்கள் மிகவும் மதிப்புப் பெற்று மக்களுக்கும் அதற்கும் இடையில் நெருங்கிய உறவுமுறை ஏற்படுத்தப்பட்டது.

இயந்திரமயமான வர்ணம் தீட்டும் தொழில் நுட்பமுறை அறிமுகப்படுத்தப்படாத காலப்பகுதியில் மக்கள் முன் தமது படைப்புகளைச் சமர்ப்பிக்கின்ற போது, எழுத்தணிக் கலைஞர்கள் எழுத்தின் அழகிலும் அதேவேளை செய்தியை எத்தி வைப்பதிலும் கவனம் செலுத்தினர். நவீன காலப்பகுதியிலும், அச்சு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்பும் எழுத்தணிக் கலைஞர்கள் தமது அடித்தளத்தை இழந்தனர். இருப்பினும் அழகின் மூலாதாரத்தை அவர்கள் இன்னும் கட்டுப்படுத்தி வருகின்றனர்.

பல சமயப் பணிகள் விசேடமாக அல்குர்ஆனும், ஏனைய இலக்கிய நூல்களும், கவிஞர்களின் பாமாலைகளும் பல்வேறு எழுத்தணிக்கலை வடிவங்களில் வடிக்கப்பட்டுள்ளன. 'நஷ்க்', 'நஷ்தலிக்', 'ஷேகாஸ்தே' என்பன இவற்றுள் சில வடிவங்களாகும்.

கடந்த தசாப்தங்களில் எழுத்தணிக்கலையும் ஆயிரக்கணக்கான மாணவர்களைக் கவர்ந்தது. சமய, சமூக பெறுமானங்களைப் பாதுகாக்கவும் எடுத்துச் செல்லவும் ஒரு வாகனமாகவும், ஏனைய பாரம்பரியக் கலைகளை விட மக்களின் கவனத்தை பெருமளவு ஈர்த்த ஒரு கலையாகவும் எழுத்தணிக்கலை திகழ்ந்தது.

எழுத்தணிக்கலை இப்போது பெருமளவு முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. சில முஸ்லிம் நாடுகளின் பாடப்புத்தகங்களில் எழுத்தணிக்கலை இடம்பெற்றிருப்பது சமூகத்தில் அதன் பரவலையும் விருத்தியையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இளைஞர்களும் கலைத்திறனுள்ளவர்களு இந்தக் கலையின் பக்கம் திரும்பி உள்ளனர். எழுத்தணிக்கென்று கல்லூரிகளும் நிறுவனங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தேசிய, சர்வதேச மட்டங்களில் எழுத்தணிக்கென போட்டிகளும் அவற்றிற்கான பரிசில்களும் அறிவிக்கப்படுகின்றன. அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சென்று போதனைகளில் ஈடுபடுமளவு செல்வாக்கையும் எழுத்தணிக் கலைஞர்கள் பெற்று வருகின்றனர். மேலும், வர்ணம் தீட்டும் கலையோடு இணைந்த புதிய தொழில் நுட்பங்களை இணைப்பதன் மூலம் எழுத்தணிக்கலை ஒரு புதிய தோற்றத்திற்குரிய சந்தர்ப்பத்தினைப் பெற்றுள்ளது.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

ஆயினும், பல்வேறு எழுத்தணிக்கலைக் கல்லூரிகளின் அபிவிருத்தி அவற்றின் புனருத்தாரணத்தையும், முன்னேற்றத்தையும், ஏனைய கலைகளுடனான தொடர்பினை ஸ்தாபிப்பதையும் வேண்டி நிற்கின்றன. நிபுணத்துவம் உள்ளவர்கள், சுறுசுறுப்புமிக்கவர்கள் ஆகியோருக்கு மேலதிகமாக இவைகளும் தேவைப்படுகின்றன.

இஸ்லாமியப் பெறுமானங்களைப் பாதுகாப்பதில் முற்றிலும் வித்தியாசமான நிலையில் எழுத்தணிக்கலை இருக்கிறது. முஸ்லிம்கள் தமது திறமையையும் ஆற்றலையும் பிரயோகிப்பதில் சமய வரம்புகளைப் பேணி வருவதற்கான உளத்தூண்டலையும் ஞாபகார்த்தக் கட்டுக்கோப்பையும் இக்கலை வழங்குகின்றது. அரபு மொழி என்ற முஸ்லிம் பாரம்பரியத்தைப் பாதுகாத்து, அதனூடாக சமய செல்நெறிகளுடன் பின்னிப் பிணைந்த புதிய இஸ்லாமிய மரபைக் கட்டியெழுப்புவதில் அரபு எழுத்தணிக்கு பெரும் பங்குண்டு.

இந்த முக்கியத்துவத்தை உணர்ந்து செயலாற்ற வேண்டிய கடமைப்பாடு இக்கால முஸ்லிம்களுக்கு இருக்கின்றது. இலங்கையைப் பொறுத்தவரை, அரபு எழுத்தணிக்கலையானது மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே உள்ளது. சரியான வழிகாட்டலின்மை, போதிய ஊக்குவிப்பின்மை, எழுத்தணிக்கலைஞர்கள் தொடர்பான பெறுமதி உணரப்படாமை போன்ற காரணங்கள் இப்பின்னடைவுக்குக் காரணமாய் அமைந்துள்ளன. இக்குறைபாட்டைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு இலங்கையின் அரபுக் கல்லூரிகளுக்கு இருக்கிறது. அரபு மொழியைப் போதிக்கும் கல்லூரிகள், அம்மொழியிலான எழுத்தணிக்கலை பற்றியும், அதில் இருந்து முஸ்லிம் மரபு பற்றியும் போதிக்க வேண்டும். இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும். அரபு எழுத்தணிக் கலையில் ஏற்பட்டு வரும் புதிய மாற்றங்களையும், விருத்திகளையும் உள்வாங்கிக் கொள்வதற்கான திறனை மாணவர்களிடையே மேம்படுத்த வேண்டும்.

ஒரு கலை எப்போதுமே ஒரு படைப்பைத் தானாக உருவாக்குவதில்லை. ஓவியக் கலையாயின், ஓவியனே தொழில் நுட்பத்தையும் ஏனைய மூலப்பொருள்களையும் பிரயோகித்து தனது நோக்கினை வெளிப்படுத்துவதற்காக கலை ஆக்கங்களை உருவாக்குகின்றான். அவ்வாறே எழுத்தணிக் கலைஞனும் தனது



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www

வரையறுக்குட்பட்ட முயற்சிகளினூடாக தன் நோக்கை எழுத்துருவாக வெளிப்படுத்திக் காட்டுகின்றான். எனவே, அத்தகைய முயற்சியை மேற்கொள்ளும் ஒரு கலைஞன் கௌரவிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுவது அவசியமாகும். அப்போதே கலைகள் வாழும். கலைகள் எனும் அம்மரபுகளூடாக சமயமும், மானுடமும் வாழும்.



PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www